www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20 ரூபா 11/00
මේ.18–24,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 205



# யுத்தம்

## பங்கிடப்படும் இலாபங்கள்

### மறைந்து கிடக்கும் உண்மைகள்



அந்தப் பெரிய நடிகரின் பலவீனம்!

பரிசு மழை 200 அதிஷ்டசாலிகளின் விபரம்

www.padippakam.com

# முரசம்

## அன்று ஐஸ் மழை! இன்று...?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

பொதுஜன முன்னணியினர்
பதவிக்கு வந்த சூட்டோடு
நம் நாட்டில் வெளியான
வெகுஜனப் பத்திரிகைகள்
உங்களிடம் இருக்கின்றனவா...?

தயவு செய்து
ஒரு முறை புரட்டிப்பாருங்கள்!

சிங்கள-தமிழ்-ஆங்கில
மும்மொழிப் பத்திரிகைகளும்
பொதுஜன முன்னணியினருக்கும்
சந்திரிக்கா அம்மாயாருக்கும்-
ஜலதோஷம் பிடிக்குமளவுக்கு
'ஐஸ்மழை'
பொழிந்திருப்பதைக் காண்பீர்கள்!

"செய்திச் சுதந்திர யுகம்
மலர்ந்துவிட்டது" என்று
மும்மொழி விமர்சகர்களும்
முண்டியடித்துப் பாராட்டினார்கள்!

இப்போது
அப்படிப் பாராட்டிய பலரே
மூக்கைச் சிந்திக்கொண்டு
முகம் சுளித்துக்கொண்டு
எதிர்ப்புப் பதாகைகளைப் பிடித்தபடி,
"ஐ.தே.கட்சி அரசாங்கம்
பரவாயில்லைப் போலிருக்கிறது,"
என்பதுதான் மகா வேடிக்கை!

அரசியல் என்பதே
கட்சிகளைப் பொறுத்தவரை,
தங்கள் சொந்த ஆதாயங்களுக்கான
ஊடகம் என்றாகிவிட்டது!

கட்சிகள் என்பதுகூட
சற்றுப் பெரிய எல்லைதான்!
கட்சித் தலைமையின் ஆதாயம்
என்பதுதான் சரியாக இருக்கும்!

தேசியப் பிரச்சனை முதல்
ஊருக்குள் உள்ள பிரச்சனைவரை
அரசியல் ஆதாயக்
கண்ணோட்டத்துடன்தான்
இங்கே நோக்கப்படுகின்றன!

அதனால்தான்-
தவறாகிருந்தாலும்-அது
தமக்குச் சாதகமாகிருப்பின்
தட்டிக்கொடுப்பார்கள்!

சரியானதாகவிருந்தாலும்-அது
தம் நலனுக்குப் பாதகமாயிருப்பின்
தடை செய்யத் தயங்கமாட்டார்கள்!
செய்திச் சுதந்திரத்தில் மட்டும்
விதி விலக்காக
நடந்து கொள்வர்
என்று எதிர்பார்ப்பது சரியா?

உலகில் எந்தவொரு நாட்டிலும்,
எந்த அரசாங்கமும்,
தானாக செய்திச் சுதந்திரத்தை
தட்டில் வைத்துக் கொடுத்ததில்லை!

போராட்டங்கள்- வாதாட்டங்கள்
மூலமான நீண்ட வரலாறுதான்
செய்திச் சுதந்திரத்தை
விசாலப்படுத்தியிருக்கிறது!

ஆட்சியில் யார் இருந்தாலும்
அவர்களுடன் உடன்படமுடியாதளவுக்கு
இருப்பதுதான் செய்திச் சுதந்திரம்!
ஏனெனில்-
ஆட்சியில் இருப்பவர்கள்
பதவியில் நீடிக்க விரும்புவதால்
உண்மைகளைக் கண்டு
அஞ்சத் தொடங்குகிறார்கள்!

இன்றைய அரசியலைப்
புரிந்து கொள்ளாதவர்கள் மட்டுமே
இதிலே மாற்றம் ஏற்படும்
என்று நம்பி ஏமாறுகிறார்கள்!

ஆட்சியில் இல்லாத காரணத்தால்
ஐ.தே.கட்சிக்கு
செய்திச் சுதந்திரம்
இன்று இனிப்பாக இருக்கிறது!

பொதுஜன முன்னணிக்கும்
பதவிக்கு வரும்வரை
செய்திச் சுதந்திரம் சுவைதான்!
இப்போதுதான் திகட்டுகிறது!

எனவே, செய்திச் சுதந்திரம்
பாதுகாக்கப்படுவது,
ஆட்சியாளர்களாக
யார் வருவார்கள்
என்பதைப் பொறுத்தல்ல;
செய்திச் சுதந்திரத்துக்கான
போராட்டத்தைப் பொறுத்ததே!

முன்னர் ஐஸ்மழை
பொழிந்தவர்களுக்கு
இப்போதாவது புரிந்தால் சரி.

முரசுக்கு
ஒரே ஒரு மகிழ்ச்சி!
முரசு மட்டுமே
-ஆம்! மட்டுமேதான்!
அன்றைய ஜால்ரா சத்தங்களிடையே
மாறுபட்ட கருத்தைக் கூறியது!
அன்றைய முரசுகளைப்
புரட்டுங்கள்- தெரியும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## பாடுகளை ஏற்றால் சந்தோசமாய் வாழலாம்

# ஆன்மீகம்



மக்கள் இன்று பலவித காரணங்களினால் பெரும் பாடுபடுகிறார்கள். பாடுபடுதல் என்பது துன்பத்தால் மனம் துயர் உறுவது: உடல் வருத்தத்தை அனுபவிப்பது. நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவும் பலவித பாடுகள் பட்டார். அவரது துன்பம் நமக்கு இன்பத்தைக் கொண்டு தந்தது. மனிதனுக்கு இரட்சிப்பைக் கொண்டுவந்த இயேசுவின் பாடுகளே-ஆம்-

"கிறிஸ்து தேவ குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமானார்" (எபிரேயர் 5:8-9)

எனவே நமக்கு வருகிற துன்பங்கள், துயரங்கள், பாடுகள் யாவற்றையும் இதமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆம்-

"பாடுகளைச் சகித்தோமானால் அவரோடு கூட ஆள்கையும் செய்வோம்"- (2 தீமொத்தி 2:12)

ஆக நாம் பாடுகளை ஏற்றுப் பக்குவப்பட்டால் பாவிகளாய் இருந்தாலும் அவரோடு கூட மகிழ்ச்சியில் வாழலாம்.

ஏ.பி.வி.கோமஸ்.

## வயோதிபத்தில் நீண்ட ஆசை

ஹஸரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள்: வயோதிபரின் உள்ளம் இருவிஷயங்களில் எப்பொழுதும் வாலிபமாகவே இருக்கும். ஒன்று உலக ஆசையில்; இரண்டாவது நீண்ட உலக நம்பிக்கையில்...

வயோதிபம் அதிகமாகி மரண சமயம் எவ்வளவு நெருங்கிக் கொண்டே போகுமோ அவ்வளவு பிள்ளைகளின் திருமணங்கள் பற்றிய ஆவல், நல்ல நல்ல வீடுகள் கட்டும் மனச் சலனங்கள், சொத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற ஆவல் முதலியவை வளர்ந்து கொண்டே போகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேலும் தமது திருக்கரத்தை தலையின் பின்புறமாக வைத்தவர்களாக, "இதுவோ மனிதனுக்குண்டான மரணமாகும். அது அவனுடைய தலைமீது சதாகாலமும் ஏறி உட்கார்ந்திருக்கிறது;" என்பதாக இரண்டாவது கரத்தை தூரமாக நீட்டி "இவ்வளவு தூரம் அவனுடைய எதிர்கால நம்பிக்கைகள் போய் இருக்கின்றன" என அருளினார்கள்.

(ஆதாரம்: மிஷ்காத்)

எம்.என்.எம்.அனஸ்-அக்குறணை.

## கவிதைப் போட்டி இல.202



### பரிசுக்குரிய கவிதை

### குண்டுகள் வீழ்வதோ

தென்றல் நீவிடும் மலர்ச் சோலையில்
ஆயிரம் குண்டுகள் வீழ்ந்ததம்மா!
எங்கள் குஞ்சுகள் பட்டுடல் மீதினில்
ஆயிரம் ஓட்டைகள் போட்டதம்மா-இதை
கண்டு கலங்கவும் சொல்லி முடிக்கவும்
நாட்டினில் நல்லவர் இல்லையம்மா....!

கு.றஜீபன்-நீர்கொழும்பு.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### அங்கும்—இங்கும்

வீடுகளெங்கும்
ஆயுதமுறங்க,
வீதிகளெங்கும்
நாமுறங்குகிறோம்!

திக்குவல்லை-அஸ்கியா இப்திகார்.

### போர் சாய்த்த புது மலரோ?

ஆட்டுவித்த ஆண்டவனா
அறியாமல் நூலறுத்தான்?
அநியாயப் போரதுதான்
அடியோடு சாய்த்ததுவோ?
போர் சாய்த்த ஆயிரத்தில்
புதுமலர் தான் இதுவாமோ?

தர்ஷிக்கா கனகசிங்கம்-கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

### மனித எச்சம்!

கொளுத்தும் வெய்யில் சுட்டெரிக்க
கொடும்பசி வயிற்றைச் சுருட்டி விட
மருந்தறியாப் போர் நோயால்
மடிந்து வரும் மனித எச்சம்!

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

### வாழ்க்கை!

பணமிருக்கும் போது
நடு வீட்டில் சாப்பாடு-அது
கனம் குறைந்த போது
நடுத் தெருவில் கூப்பாடு!

ச. மகாலிங்கம்-
வெலிமடை குருப்,
வெலிமடை.

### பிரிவு

உண்டி தேடி நேற்றெல்லாம்
ஊரை வலம் வந்தவன்,
துண்டு போட்டுத் தூங்கினான்
தூயவுயிர் நீங்கினான்!

அ.சந்தியாகோ-அசோகா
வித்தியாலயம், கண்டி.

### இன்பம்

துப்பாக்கிச் சத்தங்கள்,
ஒப்பாரி ஓலங்கள்,
இல்லாத கனவுலகில்
இன்புறும் மொட்டொன்று!

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### கண்ணீர் எஞ்சியில்லை!

ஒப்பாரி வைத்து
அழுது கொண்டிருக்க.
உறவுகளுக்கு
அவகாசமில்லை!
போன உயிரைப் பற்றி
புலம்பியழ எவர்கண்ணிலும்.
கண்ணீரும் எஞ்சியில்லை!

கொக்காகல-எஸ். அன்பரசி,பதுளை.

### தொலைத்த சந்ததிகள்

புத்தாண்டு விழாக்களாம்,
சித்திரை அழகிகளாம்,
எதுவுமே வேண்டாம்
இப்போது எங்களுக்கு;
ஏனென்றா கேட்கின்றீர்?
சந்தோஷங்கள் தொலைத்த
சந்ததிகள் நாங்கள்!

செல்வி.யோ.மதுரா- திருக்கோவில்.

## கவிதைப் போட்டி இல.205



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 24.05.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.205
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அன்பான தினமுரசு ஆசிரியருக்கு!

உங்கள் தினமுரசு பத்திரிகை வெளிவந்த காலத்திலிருந்து வாசித்து வரும் நேயர்களில் நானும் ஒருவன். அவுஸ்திரேலியா வந்த பின்னர் உங்களுக்கு சந்தா கட்டி தபால் மூலம் பெற்று வாசித்து வருகின்றேன். ஆரம்பத்தில் தினமுரசு பத்திரிகை கொழும்பில் வியாழன் வெளிவரும் போது. எனக்கு செவ்வாய்க்கிழமைகளில் கிடைக்கும். அதாவது ஐந்து நாட்களில் கிடைத்துவிடும்.

மேலும் தினமுரசு பத்திரிகையில் அடிக்கும் எழுத்தை சிறிது பெரிப்பித்து அடித்தால் வயோதிபர்களுக்கு நல்லது. இங்கு கூடுதலான வயோதிபர்கள் உங்கள் பத்திரிகையின் அபிமானிகள். ஆனால் அவர்களுக்கு எழுத்து சிறியதாக இருப்பதனால் வாசிக்க சிரமப்படுகின்றார்கள். இதனை நீங்கள் சீர்படுத்துவீர்கள் என நம்புகின்றேன்.

இங்கு இருபத்திநான்கு மணி நேர தமிழ் வானொலி நடைபெறுகின்றது. இது தொடங்கி ஒரு வருடமாகின்றது. இதில் உங்கள் பத்திரிகையில் வெளிவரும் அதிசயங்களை தொகுத்து புதுமைகள் என்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகுகின்றன.

உங்களுடைய பத்திரிகையில் வெளிவரும் எல்லா அம்சங்களும் என்னைக் கவர்ந்துள்ளன. கூடியளவு எனக்கு தினமுரசு பத்திரிகை விரைவில் கிடைக்க ஆவன செய்யுமாறு மீண்டும் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

(24 மணிநேர தமிழ் வானொலியின் பெயர் 'இன்பத்தமிழ் ஒலி')

NSW 2136- அவுஸ்திரேலியா

இப்படிக்கு
இ. பிரபாகரன்.

✉ ✍

அன்பின் இனிய முரசே,

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. அதிலும் கனவு மெய்ப்பட வேண்டும், பூலான் தேவி, இலக்கிய நயம், சிந்தியாவின் பதில் போன்றன மிகவும் சிறப்பாக உள்ளன. உன் பணி தொடர எனது குடும்பத்தினரின் வாழ்த்துக்கள்.

செல்வி கு.கிருபாநிதி, காரைதீவு-08.

✉ ✍

முரசில் வெளியாகிய திக்கம் ஜெ.சிவயோகமலரின் 'வெற்றிலை போடாமல் சிவந்தவர்' என்ற கதை அருமையாயிருந்தது. சங்கரத்தையில் தேங்காய்ப் பூரான்களைக் கைகளில் கொண்டு சென்ற அப்பாவிகள் இருவரை இராணுவத்தினர் பதுங்கியிருந்து சுட்டுக் கொன்ற நிஜமான சோகக் கதையை இது நினைவூட்டியது. இப்படியான எத்தனையோ சம்பவங்களில் ஏதுமறியாத பொதுமக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பது எமது நாட்டிற்குப் புதிதல்ல.

மயில்வாகனம் நிருபன், கொழும்பு-06.

## அம்பாறையில் முளைக்கிறது

'அம்பாறையை இணைக்கச் சம்மதமா?' உரும்பிராய் தெற்கு வாசகர் எழுதியதில் எனக்கும் உடன்பாடே. ஆனால் ஒரு பெரிய வித்தியாசம். 56ல் 58ல் தான் பேரினவாதிகள் "12% சதவீத தமிழர்களுக்கு 1/3 நிலத்தையும் 2/3 பங்கு கடலோரத்தையும் வாரிக் கொடுப்பதா?" என்று கூக்குரல் இடவில்லை; அதற்கு முன்பே- துட்டகைமுனு காலத்திலேயே எழுப்பப்பட்டது. அது நன்கு வளர்ந்து இன்று கனிகளைக் கொடுக்கிறது. கனிகளின் விதை இப்போது அம்பாறையில் முளைக்கிறது. இதைப் பற்றி கூட்டணியினருக்கு என்ன கவலை? தந்தை செல்வாவின் பிற்பகுதி அரசியல் கொள்கையையே மறைத்த தியாகிகள் அல்லவா?

சி.சொக்கன் (அளவை), கொழும்பு-05.

✉ ✍

விருப்பு, வெறுப்பு அல்லது மேடைப் பேச்சாளர்கள்போல கற்பனை வீர வசனங்கள் இல்லாமல் உள்ளதை உள்ளபடி முரசு ஆய்ந்து தருவது தனிப்பாணிதான். கள நிலவரத்தில் இரு தரப்பின் பலம்- பலவீனம் பற்றி தளம்பாமல் ஆய்வுசெய்து வாசகர்களுக்கு உண்மை தருகிறது எக்ஸ்ரே ரிப்போர்ட்.

எம்.நிரஞ்சன், வவுனியா.

✉ ✍

## தனிவழி தொடர்க

அன்பு முரசுக்கு

முரசு தரும் அரசியல் விமர்சனங்களை அப்படியே மறு பதிப்புச் செய்யும் பத்திரிகைகளும் இங்கு உள்ளன. ஆனால் முரசில் படித்ததை சில மாற்றங்களுடன் தமது பெயரில் எழுதும் விமர்சகர்களும் பெருகிவிட்டனர்.

சபாஷ் முரசே! முரசின் வழி தனி வழியாகவே இருக்கட்டும்!

ஆர்.பேரின்பநாயகம், மொன்றியல், கனடா.

✉ ✍

எங்கே அவர்கள்?

"வாராய் நீ வாராய், பொக்ஸ் நீ வாராய்" என்று, பறந்து பறந்து பாடினார்கள் சிலர். இப்போது திருவாளர் ரணில் ஆளும் முன்னணியைச் சாடத் தொடங்கிவிட்டார். முன்னணியினரும் முறுகல் நிலையில் உள்ளனர். வாழ்த்திப் பாடியவர்கள் இப்போது தோசையைப் புரட்டிப் போடுகிறார்கள். நம்பிப் புகழ்வானேன். நம்மையும் ஏய்ப்பானேன்?

பி.ராகுலன், மட்டக்களப்பு.

✉ ✍

அரசியல் தொடரில் 'அன்னை பூபதி' பற்றிய விளக்கம் எம் கண்களைப் பனிக்கச் செய்துவிட்டது. இந்தியப் படையினர் கட்டாயப்படுத்தியும், கேலி செய்தும் தடுக்க நினைத்தனர். அவர்கள் நினைத்திருந்தால் அன்பு வழி மூலம் ஆக்கபூர்வமாக முயன்று தடுத்திருக்கலாம். திலீபன் விடயத்திலும் அதுதானே நடந்தது? உயிர்களைப் பற்றி அவர்கள் கவலையே படவில்லையே!

எம்.ஹாசன், அம்பாறை.

தரணியெங்கும் தாய்குக்லம் போற்றும் மக்கள் திலகத்தின் இளமைத் தோற்றமுள்ள பழைய புகைப்படத்தையும் அன்று எம்.ஜி.ஆராக மாற நினைத்து தோற்று இன்று இன்னொருவரின் நிழலை நாடி நிற்கும் மு.க.முத்துவின் திரைப்பட ஆரம்பவிழா சம்பந்தமான புகைப்படத்தையும் வெளியிட்டு பழைய நினைவுகளில் எம்மை மூழ்கடித்த நீங்கள் பலே கில்லாடிதான் சுவாமி.

திருமதி-இந்திராணி
பாலகிருஷ்ணன், அட்டன்.

✉ ✍



என் இனிய முரசே!

பலவர்ண அட்டையுடன் வாரம்தோறும் தவறாமல் துள்ளிவரும் உனது வரவு கண்டு பூரிப்படைபவன் நான் ஐயாத்துரையாரின் அடியோ சாட்டை அடி. காதில பூ கந்தசாமியார் கலக்கலோ கலக்கல். தேன் கிண்ணம், எக்ரே ரிப்போட், தகவல் பெட்டி, சிறுகதைகள் இராமாயணம் என நீ கொட்டித்தரும் அம்சமான படைப்புகள்- அப்பப்பா வயிறு நிறைய உண்ட திருப்தி எனக்கு. அத்துடன் சிந்தியாவின் குட்டிக் கதைகள் மன நிறைவைத் தருகின்றன. முத்தான முரசுக்கு எனது முழுமையான பாராட்டுக்கள்.

செல்வன் சி.ஸ்ரீரவி,
இரத்தினபுரி.

✉ ✍

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கூடாது என நினைக்கும் ஆளும்தரப்பு, தமக்கும் எதிர்கட்சிக்கும் இடையே கடிதப் பரிமாற்றத்துக்கு ஒரு வெளிநாட்டு இராஜதந்திரியை நாடியது வித்தியாசமான பகிடி! சுட்டிக் காட்டிய நாரதருக்கு சபாஷ்!

கே.எஸ்.வாணிமைந்தன்,
கொஸ்லாந்தை.

✉ ✍



படிப்பகம்

# திறந்தது களம் மூண்டது யுத்தம்!

# புலிகளின் தளத்தின் இதயத்தை பலவீனமாக்கும் படை நகர்வு!

**வ**ன்னியில் படை நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. வன்னியில் முதன் முதலில் இலங்கைப் படையினர் ஆரம் பித்துள்ள மிகப் பாரிய படை நடவடிக்கை இதுவாகும்.

'புலிகளின் குரல்' வானொலியின் தகவலின்படி 15 ஆயிரம் துருப்புக்கள் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

**வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கான தரைப்பாதையை திறக்க வேண்டுமானால் புலிகளின் கடும் எதிர்பின்றி செல்லக்கூடிய பாதை மன்னார் பூநகரிப் பாதையாகும்.**

**ஆனால் அப் பாதையால் செல்லாமல் புலிகளின் பிரதான தளத்தை ஊடறுக்கும் நோக்கத்துடன் பலப் பரீட்சைக்கு துணிந்து இறங்கியுள்ளனர் படையினர்.**

வவுனியா-கிளிநொச்சி றோட்டில் புலிகள் முன்கூட்டியே தயாராக இருப்பது தெரிந்தும் படையினர் அப்பாதை வழியாக நடவடிக்கையை ஆரம்பித்தது ஏன்?

1) புலிகளின் பிரதான தளமான முல்லைத்தீவை சுற்றி பாதுகாப்பு வேலி போடுவது.
2) வவுனியா பாதுகாப்பு நிலைகள்மீது புலிகள் ஆட்டிலெறித் தாக்குதல்கள் நடத்த முடியாமல் தடுப்பது.
3) புலிகளின் கடும் எதிர்ப்பு இல்லையானால் வவுனியா-கிளிநொச்சி தரைப் பாதையைத் திறப்பது.
4) வன்னியில் இருக்கும் இடம்பெயர்ந்த மக்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவது.

மேற்கண்ட நான்கும்தான் வன்னி படை நடவடிக்கையின் பிரதான நோக்கங்களாகும்.

**மேலோட்டமாகப் பார்த்தால் வவுனியா கிளிநொச்சி தரைப்பாதை திறப்புக்கான யுத்தம் போலவே இது தெரியும்.**

**ஆனால், இந்த யுத்த வியூகத்தின் உள்நோக்கம் மிகவும் பயங்கரமானது.**

தரைப்பாதையை திறப்பது மட்டும்தான் நோக்கம் என்றால் மன்னார்-பூநகரி பாதை வழியாக சுலபமாக முன்னேறிச் சென்றிருக்க முடியும்.

அப்படிச் சென்றிருந்தால் புலிகளின் பிரதான தளப் பகுதிக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்காது. இந்தியாவுக்கான கடல் போக்குவரத்தும், யாழ் கடல் ஏரியும் கைவிட்டுப் போயிருக்கும்.

ஆனால் இப்போது புலிகளின் தளத்துக்கே நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

புலிகளின் வன்னித்தளம் என்று அழைக்கப்படுவதின் இதயம் போன்ற பகுதி முல்லைத்தீவாகும்.

முல்லைத்தீவு முகாமையும் நிர்மூலமாக்கிய பின்னர் முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

முல்லைத்தீவில் இருந்தே கிழக்கில் உள்ள புலிகளுக்கான விநியோகம், மற்றும் புலிகளின் படையணி நகர்வுகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

சுருக்கமாக சொன்னால் மூன்றாம் கட்ட ஈழப்போரின் இதயமாகவும் இருக்கிறது முல்லைத்தீவு.

ஒரு காலத்தில் பண்டாரவன்னியன் உலவித்திரிந்த காடுகளும் முல்லை மாவட்டத்தில்தான் உள்ளன.

வடக்கையும்-கிழக்கையும் இணைத்து நிற்கும் இதயப் பகுதியும் முல்லை மாவட்டம்தான். அதனால்தான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமாக முல்லை மாவட்டத்தின் ஒரு பகுதி விழுங்கப்பட்டது. வடக்கு-கிழக்கு நிலத் தொடர்ச்சியை பிரிக்கும் விதமாக அங்கு குடியேற்றங்கள் நடத்தப்பட்டன.

தூய தமிழ் பகுதியான மணலாறு வெலி ஓயாவாக மாறியது. குடியேற்றங்களுக்கு பாதுகாப்பாக இராணுவ வேலி போல படை முகாம்கள் நிறுவப்பட்டன.

**ஆரம்பத்தில் வடக்கு-கிழக்கை துண்டாடும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட இந்த இராணுவ முகாம்கள் தற்போது யுத்த வியூகத்துக்கும் உதவுகின்றன.**

முல்லையில் இருந்து கிழக்குக்கு புலிகள் தரை வழியாக செல்ல முடியாதவாறு இராணுவ முகாம்கள் தடைச் சுவராக நிற்கின்றன.

அதனால் தரைப்பாதையைவிட கடல் பாதையைத்தான் புலிகள் கிழக்குக்குச் செல்ல பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

இராணுவத்தினர் ரோந்து செய்யாமல் அச்சுறுத்தும் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் தரைப்பாதையையும் புலிகள் பயன்படுத்தி திருமலை செல்லுகின்றனர்.

கடந்தவாரம் வெலி ஓயா வழியாக திருமலைக்குச் சென்றுதான் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவினர் மொரவேவ பொலிஸ் நிலையத்தை தகர்த்தனர்.

முல்லைத்தீவு தளத்தில் இருந்து புலிகளின் தலைமை சுதந்திரமாக இயங்கக்கூடிய நிலை இருப்பதால்தான் கிழக்கு போர் முனையும் விரிந்து வருகிறது.

தற்காப்பில் கவனம் செலுத்தாமல் தமது படைப் பிரிவுகளை பல முனைகளுக்கு பிரபாகரனும் அனுப்பமுடிகிறது.

எனவே தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதைவிட, இழப்புக்களைப் பற்றி கவலைப்படாமல் நேரடியாகவே புலிகளின் அடிமடியில் கைவைக்கலாமா என்று பரிசீலித்துப் பார்க்க நினைத்தது அரசாங்கம்.

தரைப்பாதையை திறப்பது என்பதைவிட புலிகளின் இயங்கு திறனை கட்டுப்படுத்துவதுதான் தற்போதைய படை நடவடிக்கையின் முக்கிய நோக்கம்.

## அது எப்படிச் சாத்தியம்?

ஓரளவு சாத்தியம்தான். அதாவது வவுனியா-கிளிநொச்சி றோட்டில் படையினர் நிலைகொள்ள முடிந்தால் புலிகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் மட்டுமே முடக்கப்படுவர்

வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலை முல்லைத்தீவு மாவட்டத்தையும் மன்னார் மாவட்டத்தையும், கிளிநொச்சி மாவட் டத்தின் மேற்குப் பகுதியையும் குறுக்கு வெட்டாகப் பிரித்துச் செல்கிறது.

**எனவே இப் பாதையில் படையினர் நிலைகொண்டால் கிளிநொச்சி மாவட்டத்திலும், மன்னார் மாவட்டத்திலும் உள்ள புலிகளின் அணிகள் தனிமைப்பட்டுவிடும். கிட்டத்தட்ட முற்றுகைக்குள் சிக்கிய நிலைதான். கடல் வழி மட்டுமே மிஞ்சியிருக்கும். ஆனாலும் அக் கடல் வழியாக முல்லைத்தீவு செல்வதாக இருந்தால் நீண்ட சுற்றுப் பாதையால்தான் செல்ல முடியும்.**

மன்னார் பூநகரிப் பாதையையும் படையினர் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால் மன்னாரிலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள புலிகள் பொறிக்குள் சிக்கிய நிலையில்தான் இருப்பர். அதைத் தவிர்க்க அவர்கள் முன்கூட்டியே முல்லை நோக்கி செல்ல முடியும். பிரச்சனை என்னவென்றால் வன்னியில் புலிகளின் பரந்த நிலை கொள்ளலும், பரந்த இயங்கு திறனும் பாதிக்கப்படும் என்பதுதான்.

## படையினரின் வியூகம்

தற்போதைய படை நடவடிக்கை 13.05.97 அதிகாலை ஆரம்பமானது.

ஓமந்தைவரை படைகளால் சுலபமாக முன்னேற முடிந்தது. வவுனியா-கிளி நொச்சி நெடுச்சாலையில் ஓமந்தைவரையான தரையமைப்பு மரபுப் படை அணிகளுக்கு மிக வாய்ப்பானது. வயல் வெளிகள் சார்ந்த பரந்த நிலப்பகுதி என்பதால் தரைப் படைகள் விமானப்படை உதவியுடன் சுலபமாக முன்னேறின. 203வது முரசில் ஓமந்தைவரை படைகள் இலகுவாக செல்ல முடியும் என்று குறிப்பிட்டிருந்தோம் அல்லவா.

வவுனியாவில் இருந்து ஓமந்தை பத்து கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது. படையினர் முன்னரே வவுனியாவில் நிலை கொண்டிருந்த பகுதியில் இருந்து பார்த்தால் ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது.

ஓமந்தைக்குப் பின்னர்தான் புலிகளின் அணிகள் தயார் நிலையில் காத்திருந்தன. பங்கர்கள் வெட்டி பதுங்கு நிலையில் இருந்தன.

ஆனால் புலிகளின் கடும் எதிரிப்பைத் தணித்து, புலிகளின் பலத்தை பிரிப்பதற்காக படையினர் ஒரு திட்டத்தை வகுத்தனர்.

**வெலி ஓயா இராணுவ முகாமில் இருந்து ஒரு படையணி முல்லைத்தீவு நோக்கி முன்னேறியது.**

## இது ஏன்?

வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையை படைகள் கைப்பற்றுமானால் வன்னித்தளம் ஊடறுக்கப்படும்தான்.

ஆனால், வெலி ஓயாவில் இருந்து முன்னேறும் படைகளை அனுமதித்தால் வன்னித் தளத்தின் இதயமான முல்லைத்தீவுக்குள்ளும் ஆபத்து புகுந்துவிடும். பிரதான காட்டுப் பகுதிகளுக்குள்ளும் புக முற்படலாம்.

எனவேதான் வவுனியா கிளிநொச்சி நெருஞ்சாலையில் ஒன்று குவிந்திருந்த புலிகளின் படையணிகளில் ஒரு பகுதியினர் வெலி ஓயாவில் இருந்து முன்னேறும் படைகளை சந்திக்க நகர்த்தப்பட்டனர்.

வேறு எந்த முனையால் படைகள் முன்னேறி இருந்தாலும் வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் குவிக்கப்பட்ட புலிகள் நகர்ந்தே இருக்கமாட்டார்கள்.

வெலி ஓயாவில் இருந்து படையினர் முல்லைத்தீவை நோக்கி நகர்ந்ததால்தான் தமது அணிகளை இருமுனைகளிலும் பிரித்து நிறுத்த வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு ஏற்பட்டது. அதனால்தான் எதிர்பார்க்கப்பட்டளவுக்கு உரமான ஒன்றுகுவித்த எதிர்ப்பை புலிகள் காட்டமுடியாமல் போனது.

படை நடவடிக்கை ஆரம்பமாகப் போவதாக ஆரவாரம் காட்டிக் கொண்டு புலிகளின் நகர்வுகளை நன்கு கவனித்து படையினர் திட்டமிட்டனர். அதன் பிரதிபலிப்புத்தான் புலிகளின் வன்னித் தளத்தின் இதயபகுதியை வெலி ஓயா நகர்வு மூலம் அச்சுறுத்தியபடி, மறுபுறமாக வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் பரவி நகரும் திட்டமாகும்.

## அடுத்தது என்ன?

வவுனியாவில் இருந்து முன்னேறும் படைகள் புலிகளின் கடும் எதிர்ப்பை சந்திக்குமானால் மட்டும் ஒரு குறிப்பிட்ட தூரம்வரை சென்று அப்படியே தரித்து நிற்கலாம். அதாவது தரைப்பாதை திறக்கும் முயற்சி ஒத்திவைக்கப்படலாம். அதே நேரம் மன்னாரிலிருந்து துருப்புக்கள் புறப்பட்டு மன்னார் பூநகரிப் பாதையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயலலாம்.

வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலையில் புலிகளின் எதிர்ப்பு உரமாக இருந்தால், வவுனியா பாதுகாப்பு நிலைகளை புலிகளின் ஆட்டிலெறிகள் எட்டாத தூரம் வரையான பகுதியை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே படையினரின் முதற்கட்ட முயற்சியாக இருக்கும்.

புலிகளின் எதிர்ப்பு பலமாக இல்லாவிட்டால் வவுனியா- கிளிநொச்சி நெடுஞ்சாலையில் வவுனியாவில் இருந்து சென்ற துருப்புக்கள் முன்னேறிக் கொண்டிருக்க, கிளிநொச்சி முகாமிலிருந்தும் துடுப்புக்கள் அந்த நெடுஞ்சாலை வழியாக முன்னேற ஆரம்பிக்கும். இரு பக்க துருப்புக்களும் எதிரும் புதிருமாக மாங்குளத்தில் சந்திக்கும். அத்தோடு வவுனியா- கிளிநொச்சி நெடுஞ்சாலை படைகளின் கட்டுப்பாட்டில் வரும். (வவுனியாவில் இருந்து 42 கிலோமீற்றர் தூரத்திலும், கிளிநொச்சியில் இருந்து 30 கிலோமீட்டர் தூரத்திலும் உள்ளது மாங்குளம்) அப்படி நடந்தால் சூட்டோடு சூடாக 'பண்ட்' எனப்படும் பாதுகாப்பு அரண்களை நிறுவி நெடுஞ்சாலைப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வர். அதனால் புலிகள் வன்னித் தளத்தை ஊடுருவி 'பண்ட்' அரண் பிரித்து நிற்கும்.

## 'பண்ட்'


படைமினரின் தற்போதைய பாதுகாப்பு தந்திரத்தில் 'பண்ட்' பாதுகாப்பு அரண் முக்கிய பங்கு வகிக்கிறது. 'பண்ட்' பாதுகாப்பு அரண் மூலம் கிடைக்கும் சாதகங்கள் வருமாறு:

* அங்குலமாக அங்குலமாக நீண்ட நிலப்பரப்பில் படைகளை நிறுத்தத் தேவையில்லை.
* எதிரி சுலபமாக ஊடுருவ முடியாது. உடைத்துக் கொண்டு புகுந்தால் தெரிந்துவிடும்.
* குறைந்தளவு படையுடன் அதிகமான நிலப்பரப்புகளை கைப்பற்றி வைத்திருக்கலாம்.

இஸ்ரேலிடம் இருந்து பெறப்பட்ட யோசனைதான் இது. அங்கும் 'பண்ட்'டுகள்தான். பாலஸ்தீன குடியிருப்புக்களை சுற்றி அமைக்கப்பட்டுள்ளன.

## புலிகள் என்ன செய்வர்?

கனரக ஆயுதபலம். குண்டுகளைப் பொழியும் விமானங்கள். தரைப்படை, கடற்படை, வான்படை என்று முப்படை உதவியுடன் முழுப் பலப்பிரயோகத்துடன் படைகள் முன்னேறுகின்றன.




### எதிர்கால முற்றுகை

மூல உபாயம் என்பது இலக்கை அடைய வகுக்கப்படும் பிரதான திட்டம். நடைமுறைத் தந்திரம் என்பது அந்த மூலஉபாயத்தை நிறைவேற்ற வகுக்கப்படும் தந்திரங்கள்.

புலிகளை முல்லைக்குள் முடக்குவதே படையினரின் மூல உபாயமாகும்.

வவுனியா- கிளிநொச்சி தரைப்பாதை மூலமும், வெலி ஓயா முனை ஊடாகவும் முல்லைத்தீவை படைகள் முற்றுகை நிலைக்கு உட்படுத்தினால் கடல்பாதை ஊடாக மட்டுமே புலிகள் முற்றுகையை உடைக்க முடியும். கடற்படையை பலப்படுத்த நவீன ஆயுத தளபாடங்கள் சமீபத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதும் இந்த முற்றுகை நோக்கத்தோடுதான். ■



தனியே ஒரு படையினராக சென்றால் கூட புலிகளைவிட பலமடங்கு ஆள், ஆயுத பலம் கொண்டது அரச தரைப்படை. அதாவது இராணுவம். ஆனாலும் அவ்வாறு சென்று புலிகளை எதிர்த்துப் போரிடுவது இயலாத காரியம் என்பதே புலிகளின் பலத்தைத்தான் குறிக்கிறது. போரிடும் திறனைக் குறிக்கிறது.

**புலிகளை சந்திப்பதற்கு அரசுக்கு தனது முப்படைகளும் தேவைப்படுகிறது. மூர்க்கமான பலப்பிரயோகம் அவசியப்படுகிறது.**

**ஆட்டிலெறிகள் ஷெல்மழை பொழிகின்றன. டாங்கிகள் யானைகள் போல நகர்கின்றன. வட்டமிடும் விமானங்கள் குண்டுகளை முட்டைகளாகப் போடுகின்றன. வன்னியே கிடு கிடுக்கிறது. பூமி அதிர்கிறது.**

**அப்படியிருந்தும் ஒரு சிறிய படை பெரும் படையை எதிர்த்து நிற்பதுபோல புலிகள் போரிட்டுக் கொண்டிருப்பதே பெரிய காரியம்தான்.**

ஆனால் பெரிய படையொன்று முழுப் பலத்துடன் முன்னேறும்போது சிறிய படை ஒன்று எதிர்த்து நிற்பது தற்கொலைக்கு சமமானது. போர்ச் சக்கரத்தின் முன்னால் தலையைக் கொடுப்பது போன்றது.

வன்னித் தள பாதுகாப்புக்கும் புலிகள் கெரில்லா யுத்தத்தில்தான் ஊன்றி நிற்க வேண்டியவர்களாகின்றனர்.

காடும் காடு சார்ந்த பகுதிகளையும் கொண்ட வன்னித் தளத்தில் நேரடி யுத்தத்தைவிட கெரில்லா யுத்தத்துக்கே சாதகம் இருக்கிறது.

அதனால் படையினரை உள்ளே இழுத்துவிட்டு தாக்குவதே புலிகளின் பிரதான உத்தியாக இருக்கும்.

**படையினர் வவுனியா கிளிநொச்சி நெடுஞ்சாலையில் நிலைகொள்வார்களாயின் அது நிச்சயமாக மன்னார்-வவுனியா நெடுஞ்சாலையில் நிலைகொண்டிருப்பது போல சுலபமாக இருக்கப்போவதில்லை.**

ஆட்டிலெறித் தாக்குதல், மோட்டார் தாக்குதல்கள் மூலம் தினமும் படையினரை இழக்க வேண்டியிருக்கும். என்னதான் பண்ட் பாதுகாப்பு அரண் கட்டினாலும் காடுகளுக்குள் இருந்து புலிப்பாய்ச்சல் நடத்தும் வசதி இருக் கவே செய்யும்.

முடியுமானவரை படை முன்னேற்றத்தை தடுப்பதற்கு புலிகள் போரிடுவர். அவ்வாறான எதிர்ப்பு யுத்தத்தில் இழப்புக்கள் அதிகமாகும் என்று தெரிந்தால் தமது சக்திகளை சேமிப்பதற்காக படைகளை முன்னேறவிட்டு பின்னர் தாக்கும் உத்திக்கு செல்லுவர்.

**முன்னர் பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேறிய 'சத்ஜய' படையினரை தடுத்து நிறுத்த கெரில்லாப் போர் முறையும் மரபுப் போர்முறையும் கலந்த சமரில் புலிகள் ஈடுபட்டனர். 'சத்ஜய' இரு கட்டங்கள் புலிகளால் வெற்றிகரமாக தடுக்கப்பட்டன.**

அதன்பின்னர் மூர்க்கமான பலப்பிரயோகம், படைக்குவிப்பு மூலமாக சத்ஜய3 படையினரால் மேற்கொள்ளப்பட்டது. புலிகள் களத்தைவிட்டு அகன்றனர்.

'சத்ஜய' சமருக்கும் இப்போதைய சமருக்கும் இடையே ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. இப்போது காடு சார்ந்த புவியியல் சூழ்நிலை புலிகளின் கெரில்லா எதிர்ப்பு யுத்தத்துக்கு அதிக சாதகமாக இருக்கும்.

எனவே முன்னேறும் படையினரை அடர்ந்த காடு சார்ந்த களங்களில் புலிகள் எதிர்த்து நிற்பர். அதுவும் முடியாது என்றால்தான் முன்னேற அனுமதித்து விட்டு பின்னர் தாக்குவர்.

**எப்படியிருந்தாலும் வடக்கில் யாழ்ப்பாண களத்திலும், மன்னார் தரைப்பாதை திறப்பிலும் படையினர் சந்தித்திருக்காத கெரில்லாப் போரின் மூர்க்கத்தை இன்றைய வன்னிப் போரில் நிச்சயம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.**

அதனை முன்கூட்டியே படையினர் உணர்ந்தால் வவுனியா-கிளிநொச்சி நெடுஞ்சாலைகளில் ஒரு வரையறுக்கப்பட்ட நடவடிக்கையோடு நிறுத்தவும் செய்யலாம்.

இழப்புக்கள் பற்றி கவலையில்லை. எப்படியாவது யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும், புலிகளை வெற்றிபெற்ற அரசாங்கம் என்ற இமேஜை பெற்றே ஆக வேண்டும் என்று அரசாங்கம் அவசரப்படுகிறது. ஆகவே கள நிலவரங்கள் மூர்க்கமாக இருப்பது தவிர்க்க முடியாது.

ஆனால் ஒன்று. கெரில்லாக்கள் அகன்று கால் பரப்பி நிற்பதை இத்தகைய யுத்த முறைகளால் தடுக்கலாமே தவிர, கெரில்லாக்களை ஒழிக்க முடியாது.

www.padippakam.com



விஜய்-சிம்ரான்-சிவாஜி (ஒன்ஸ்மோர்)

# பிள்ளை மனம் கல்லா!

**எஸ்.ஆர்.எஸ். தேவதாசன்**

## மருமகள் மஞ்சுவின் போக்கு, முருகேசனாருக்கு ஏதோ போலிருந்தது

குந்தப்பொடி முருகேசனார் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று மகன், மருமகளுடன் கொழும்பில் தங்கிவிட்டார். கூடவே துணைவியார் தங்கம்மாவும்தான்.

முருகேசனார் யாழ்பிரதேச உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பிரதம எழுதுவினைஞராக சேவையாற்றி, ஓய்வுபெறும் தருணத்தில், அங்கு நடைபெற்ற படுபாதகமான 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து தறிகெட்டு ஓடி, அலைந்து ஒரு வகையாக கொழும்பு வந்து மகன், மருமகள் பேரப்பிள்ளையுடன் தொடர்மாடி வாழ்க்கை முறையில் இணைந்துவிட்டார்.

எவ்விதமான வேலைவெட்டியும் இல்லாத ஓய்வூதியர் முருகேசனாருக்கு, பேரன் சுந்தர் எல்லாவித மகிழ்ச்சியையும் கொடுத்துக்கொண்டிருந்தான்.

இரண்டு வயது நிரம்பிய பேரன் சுந்தர் படுபோக்கிரிதான். பாட்டாவைப் போட்டு ஆட்டிக்கொண்டிருந்தான். ஆனால் மருமகள் மஞ்சுவின் போக்கு முருகேசனாருக்கு ஏதோ போலிருந்தது.

பேரனுடன் விளையாடி கும்மாள மடிக்கும்போது குழந்தையின் சிறு அழுகைக் குரல் கேட்டாலே மஞ்சு ஓடிவந்து "என்ரை ராசா கிளியே, செல்வமே....அழாதே கண்ணா" என்று ஆராட்டத் தொடங்கி விடுவாள். முருகேசனாருக்கு என்னமோ போலிருக்கும்.

ஒருமுறை இப்படித்தான்....சிறு சம்பவம்தான். அவருடன் பேரன் விளையாடும்போது, அவன் தவறுதலாக விழுந்து வலதுகையில் சிறு முறிவு ஏற்பட்டுவிட்டது. அந்த வேளையில் மஞ்சு பட்டபாடு சொல்லவே முடியாது. அழுது, குளறி ஊரையே கூட்டி, அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மத்தியில் மாமா முருகேசனாரை சிறிது சாடியும் விட்டாள்.

பேரன் சுந்தரின் கைமுறிவு விரைவில் சுகம் வந்துவிட்டது. என்றாலும் பெரியவர் முருகேசனார் மனதில் பெரிய பாரமாகி துளைத்துக்கொண்டிருந்தது என்னமோ உண்மைதான். மருமகள் மஞ்சு ஒன்றுமே நடக்காததுபோல் மாமா...மாமா.... என்று அன்புடனும், ஆதரவுடனும் வலம் வந்துகொண்டிருந்தாள்.

அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. மனைவி தங்கம்மாவின் பேச்சுகள் மூலமாகவே அவருக்கு உண்மைகள் புரிய ஆரம்பித்தன.

தாய்ப்பாசம் என்பது இப்படித்தான். தனது மழலைச் செல்வத்துக்கு எந்தவிதமான ஊறும் ஏற்படும்போது, எந்தத் தாயும் பொறுக்கமாட்டாள். உயிரையும் கொடுத்து காப்பாற்றுவாள்.

முருகேசனார் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார். அவரின் அடி மனத்தை வலித்து உறுத்தத் தொடங்கியது. வலிபெரியதாகி நெஞ்சைப் பிடித்துக்கொண்டே "அம்மா... அம்மா" என்று பெரிதாக அரற்றத் தொடங்கிவிட்டார்.

தன்னை பாலூட்டி தாலாட்டி சீராக்கிய



அன்னைத் தெய்வத்தை நினைத்து... "ஆண்டவனே, நான் பெரிய பாவியாகிவிட்டேன், என்னைப் பெற்ற அன்புத் தெய்வத்திற்கு பெரும் துரோகம் செய்து, குற்றம் செய்துவிட்டேன். அம்மா என்ன பாடுபடுகிறாவோ.... உயிருடன் இருப்பாவோ..... என்னமோ?

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை முன்னெடுப்பில் வயோதிப மடத்தில் விட்டுவிட்டு வந்துவிட்டேனே... என்ன செய்வது? நான் பெரும் பாவியாகி விட்டேன். கடவுளும் என்னை மன்னிக்கமாட்டான். முருகா... முருகா!" என்று ஓலமிட்டபடியே அப்படியே நினைவு இழந்துவிட்டார்.

பெரியவரின் அலறலைக் கேட்டு மனைவி, மகன், மருமகள் ஓடிவந்தனர். அவருக்கு தண்ணீர் தெளித்து ஆசுவாசப் படுத்தினர். அவரின் வாய் ஏதோ முணுமுணுத்தபடியே இருந்தது. பின்பு தெளிவாகக் கேட்டது.

"பெற்ற தாயும், பிறந்த பொன்நாடும், நற்றவ வானினும் நனி சிறந்தனவே..." முருகேசனார் முற்று முழுதான சுய உணர்வுடன் எழுந்து உட்கார்ந்தார், எழுந்து நின்றார். உரத்த குரலில் "புறப்படு தங்கம்மா" என்று சொல்லிக்கொண்டே அறைக்குள் சென்று பிரயாணப் பெட்டியுடனும், மனதில் திடமான உறுதியுடனும், உள்ளத் தெளிவுடனும் வெளியே வந்தார்.

அவரை எந்தவிதமான சக்தியும் தடைசெய்யமுடியாத களை முகத்தில் தென்பட்டது. வாக்கில் இனிமையுடன் மகன், மருமகள், பேரனிடமும் விடைபெற்று வீறுபெற்ற சுதந்திர நடையுடன் தாயக மண்ணில் பள்ளிகொண்டிருக்கும் அன்னையை தரிசிப்பதற்கு, துணைவியார் பின்தொடர தாண்டிக்குளம் தாண்டிச்சென்று கைதடி வயோதிபர் இல்லத்திற்கு வந்ததும் "துணிவே துணை" என்று சொல்லிக்கொண்டார்.

அன்னாரின் நீண்ட பயணமும் வெற்றிவாகை சூடியது. பிரிந்தவர் மீண்டும் சேர்ந்தால் சொல்லவும் வேண்டுமோ....? ●

# முகங்களும் மனங்களும்

**ஷர்மிளா இஸ்மாயில்**

## எதிர்வீட்டுப் பாட்டி, அடுத்த வீட்டு பெரிய தலைகள் அனைவரும் சமாதானப்படுத்த முயன்றும்....

"தினமுரசு வாங்கினீர்களா?" பக்கத்து வீட்டு அக்காவின் கணவர் ரகு நிரோஷாவைக் கண்டதும் கேட்டார்.

"ஓ... நேற்றே வாங்கியாச்சு." என்றபடி பத்திரிகையை மடித்துக் கொடுத்தாள் நிரோஷா.

"தாங்க் யூ" என்றவாறு புன்னகையுடன் படியேறிப் போனவரைப் பார்த்தாள் நிரோஷா.

எந்த நேரமும் புன்சிரிப்பும், கள்ளமில்லாத வெள்ளைப் பேச்சும், இயல்பாக கபடமின்றி பழகும் குணமும் மொத்தத்தில் கண்ணியமான தோற்றமும் செயல்களும் கொண்ட ரகுவை வெகுவாய் மதித்தாள் நிரோஷா.

ஆகக் கூடினால் முப்பது முப்பத்தைந்து வயதிருக்கலாம். அதற்கு மேலேயே முதிர்ச்சியும், பக்குவமும் கொண்ட நல்ல மனிதர். பக்கத்து வீட்டு அக்கா அதாவது அவரது மனைவியை ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள்.



அழகான பெண். ரகு அண்ணாவுக்கு ஏற்றவள். ஆனால் எந்த நேரமும் சிடுசிடுப்பும் கர்ண கடூர குரலில் யாரையாவது திட்டியபடியும் தோற்றத்துக்கு ஏற்ற இனிய குரலில்லை. அக்கா அங்கிருந்து பேசினாள் என்றால், சுற்றியிருக்கும் அத்தனை குடியிருப்புக்களுக்கும் கேட்கும்.

அடங்கிப் போகும் கணவனும் ஆரவாரிக்கும் மனைவியும். எப்படித்தான் குடும்ப வண்டியைத் தள்ளிக் கொண்டு போகிறார்களோ? என நிரோஷாவை அவர்களது சச்சரவுகளின் ஒலி அடிக்கடி யோசிக்க வைக்கும்.

ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது சண்டை பிடிக்காது விட்டால் தவறு என்பது போல ரகுவின் மனைவி செயல்படுவதைக் காண சிலநேரம் சிரிப்பு வரும். எரிச்சலும் வரும். பக்கத்தில் வீடுகள் உண்டு. அதில் மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற ஆதங்கமே துளிக்கூட அவளுக்கில்லை.

"பாவம், பூச்சி போன்ற வாயில்லாத மனுஷன். இந்த மாதிரி பொண்டாட்டி வந்து வாய்ச்சாளே. எப்படித்தான் சமாளிக்கிறானோ? மனசுக்குப் பொறுக்க முடியல." எதிர்வீட்டுப் பாட்டிகூட அடிக்கடி நிரோஷாவைக் காணும் சந்தர்ப்பங்களில் அங்கலாய்ப்பாள்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்களே. அது சரியாகத்தானிருக்கிறது. வரம் ஒழுங்காக வந்து வாய்க்கா விட்டால் வாழ்க்கை நாசம் தான். ஒரு முறையே வாழ்க்கையில் திருமணம். மனம் பொருந்தா வாழ்க்கையில் மணமில்லை. வெறும் பெயருக்கான வாழ்க்கை. சுகப்படாது. சுமையாகத் தானிருக்கும்.

பெரும் புயலுக்குப்பின் வரும் அமைதி போன்று, அன்றொரு இதமான ஞாயிற்றுப் பொழுதின் காலை நேரச் சண்டையின் பின் ரகுவின் மனைவி கோபித்துக் கொண்டு ஒரே பிள்ளையையும் தூக்கிக்கொண்டு தாய் வீடு சென்றுவிட வீடு 'வெறிச்' சென்றிருந்தது.

எதிர்வீட்டுப் பாட்டி, அடுத்தடுத்த வீடுகளில் பெரிய தலைகள் என பலர் சமாதானப்படுத்த முயற்சி எடுக்க எல்லாமே பூச்சியம் தான். "எந்த நேரம் பார்த்தாலும் என்மேலே சந்தேகம் அவளுக்கு. ஒரு பொண்ணோட பேசிடப்படாது, சிரிச்சிடக் கூடாது. அவ்வளவுதான். அவளுக்குத் துரோகம் பண்றதா நினைச்சு புலம்புவா. சண்டை போடுவா. நான் என்ன பண்ண?"

ரகு அண்ணா மெதுவான ஆனால் சோகம் கலந்த குரலில் பாட்டியிடம் கூறுவதைக் கேட்க நிரோஷாவுக்குள் பாவம் என்று தோன்றியது.

ரகு மனைவியை விவாகரத்துப் பண்ணிட்டாராம். செய்தி வந்த பொழுது அந்த குடித்தன வீடுகளில் அனைவருமே அதிர்ந்தனர். பின்னர் சகஜ நிலையாயிற்று.

"சரிதான் அந்த சந்தேகப்படற பெண்ணோட வாழ்ற வாழ்க்கையைவிட விவாகரத்துப் பண்ணிட்டு சும்மாயிருப்பதே மேல்" பலர் ரகுவின் பக்கம் சார்ந்து பேசினர். நியாயமும் அது தானே. சண்டையும் சச்சரவுமாக என்ன வாழ்க்கையது? நிரோஷா நினைத்துக் கொண்டாள். அந்த நினைப்பில் மண் விழுந்தது. ரகு இன்னோர் கல்யாணம் பண்ணிட்டாராம். அதுவும் அவரோட பழைய காதலியாம். இருவருக்கும் கல்யாணமாகியும் காதல் தொடர்பு விட்டுப் போகலையாம். சந்திப்பு தொடர்ந்ததாம்.

ஓ.....இது தானா? இதையறிந்த அந்த அப்பாவி மனைவி ஒரே சண்டை பிடித்த காரணம் இது தான்! எதையும் தாங்குவாள் ஒரு பெண். ஆனால் தன் கணவனை மட்டும் இன்னொரு பெண்ணுடன் பங்குபோட விரும்ப மாட்டாள். கணவனது துரோகம் தெரிந்தும் மன்னித்து சேர்ந்து வாழ அவளொன்றும் அந்தக் காலத்துக் கண்ணகியல்லவே. பிரிந்து விட்டாள். இந்த ரகுவைப் போய் நல்லவரென நினைத்தோமே என எரிச்சல்பட்டாள் நிரோஷா. "தினமுரசு வாங்கினீர்களா?" அன்றொரு வியாழனில் ரகு கேட்க, "இல்லை" வெடுக்கென சொல்லிவிட்டு வீட்டுக்குள் போனாள் நிரோஷா. ●



பிரபுதேவா-சிம்ரான் (வி.ஐ.பி.)



ராம்ஜி-மைனா (வீரபாண்டிக் கோட்டையிலே)



படிப்பகம்

www.padippakam.com

# "வடக்கு–கிழக்கில் இரண்டு பிராந்திய சபை"

# கூட்டணி-முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம்!

## காணி அதிகாரத்திலும் விட்டுக் கொடுக்கத் தயார்!

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரசும் இணைந்து எதிர்க்கட்சியுடன் அரசியல் தீர்வு தொடர்பாக பேச்சு நடத்தி வருவது தெரிந்ததே.

இம் மாதம் 8ம் திகதியும், 9ம் திகதியும் எதிர்க்கட்சியுடன் தமிழ்-முஸ்லிம் கட்சிகள் பேச்சு நடத்தியிருந்தன.

இது தொடர்பாக பத்திரிகைகளில் செய்திகள் கொடுக்கப்பட்டிருந்தன. கூட்டணிக்கும், முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையிலான உடன்பாடு தொடர்பாகவும் எதிர்க்கட்சியினரிடம் விபரிக்கப்பட்டது என்று மட்டுமே செய்திகள் வெளியாகி இருந்தன.

விபரிக்கப்பட்ட விடயம் தொடர்பாக வெளியே சொல்லாமல் மறைக்கப்பட்டது ஏன் என்று தெரியவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்து, அதனை சிங்களப் பகுதியுடன் இணைக்க உடன்படுவது என்ற விடயத்தில் கூட்டணிக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே உடன்பாடு காணப்பட்டதாக பல மாதங்களுக்கு முன்னர் முரசு செய்தி வெளியிட்டது ஞாபகமிருக்கலாம்.

அந்த உடன்பாட்டை இரகசியமாக வைத்திருந்த இரு கட்சிகளும் கடந்த 8ம் திகதிதான் முதன் முதலாக- உத்தியோக பூர்வமாக வெளியே தெரிவித்தன. ஆனாலும் மக்களுக்கு தெரிவிக்க முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருந்தாலும் கூட்டணியினர் தயக்கம் காட்டியதால் பத்திரிகைகளுக்குச் செய்தி சொல்லப்படவில்லை.

### இரு சபைகள்

ஐக்கிய தேசியக் கட்சியிடம், இரு கட்சிகள் சார்பாகவும் முஸ்லிம் காங்கிரஸ் பா.உ ரவூப் ரக்கீம் தமது இருகட்சிகளின் இடையேயான உடன்பாட்டை விளக்கிக் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு தொகுதியை சிங்கள மாவட்டமான மொனராகலையுடன் இணைக்க சம்மதிப்பது.

அம்பாறை மாவட்டத்தின் ஏனைய மூன்று தொகுதிகளை உள்ளடக்கியதாக முஸ்லிம்களுக்கான தனி நிர்வாக அலகாக 'தென் கிழக்குப் பிராந்திய சபை' உருவாக்கப்படும்.

அம்பாறை மாவட்டம் தவிர்ந்த வடக்கு-கிழக்குப் பகுதிகள் ஒரு தனி நிர்வாக அலகாக 'வடக்கு-கிழக்குப் பிராந்திய சபை'யாக இருக்கும். அங்கு வாழும் முஸ்லிம்களுக்கு- அதாவது அம்பாறை மாவட்டத்துக்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைப்பதற்காக, அவர்களது விகிதாசாரத்துக்கும் சற்றுக் கூடுதலான பிரதிநிதித்துவம் வடக்கு-கிழக்குப் பிராந்திய சபையில் வழங்கப்பட வேண்டும்.

இந்த இரு பிரதான விடயங்களிலும்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணக்கம் கண்டுள்ளன.

### காணி அதிகாரம்

இதேவேளை வடக்கு-கிழக்குப் பிராந்திய சபைக்கான காணி அதிகார விடயத்திலும் கூட்டணியினர் மென்மையான போக்கை அறிவித்துள்ளனர்.

'வடக்கு-கிழக்குப் பிராந்திய சபையின் சம்மதம் இல்லாமல் அங்குள்ள காணிகளை மத்திய அரசு எடுக்க முடியாது' என்று அதிகாரம் இருக்கவேண்டும் என ஈ.பி.டி.பி. பிரதிநிதியினால் முன்வைக்கப்பட்டது. அப்போது குறுக்கிட்ட கூட்டணி தலைவர்களில் ஒருவரான இரா.சம்பந்தன், "நியாயமான கோரிக்கையாக இருந்தால் காணியை எடுக்க பிராந்தியசபை அனுமதிக்கலாம் என விதி இருக்கலாம்" என்று கூறினார். "மத்திய அரசுக்கு நியாயமாக இருப்பது பிராந்திய அரசுக்கு நியாயமில்லாமல் போகலாம். எனவே அவ்வாறான விதி மறுபடி குடியேற்றங்களுக்கு வழிவகுக்கும்" என்று ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள் திரு.சம்பந்தனின் கருத்தை மறுத்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கு தனியான பிராந்திய சபை அமைக்கும் யோசனையை ஐ.தே.கட்சியினர் நிராகரித்தனர். முஸ்லிம் மக்களின் மூன்றில் ஒரு பகுதியினர்தான் வடக்கு-கிழக்கில் வாழ்கின்றனர். அந்த மூன்றில் ஒன்றிலும் குறைவான பகுதியினர்தான் அம்பாறை மாவட்டத்தில் அடங்குகின்றனர். எனவே இவ்வாறு தனியான பிராந்திய சபை அமைப்பது அம்பாறை மாவட்டத்துக்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் பாதிப்பை ஏற்படுத்தும். இன விரோதங்கள் வளர தூண்டுதலாக அமையும் என்று முன்னாள் சபா நாயகர் எம்.எச்.முஹமட் கூறினார்.

# தலைவிரிக்கும் ஒழுக்கக் கேடுகள்!

## யாழ் மக்கள் விசனம்!

யாழ் குடாநாட்டில் வீடுகளில் கொள்ளையிடும் நடவடிக்கைகள் பரவலாக நடைபெற்று வருகின்றன.

கடந்தவாரம் ஏழாலை வடக்கில் அரியக் குட்டி மாஸ்ரர் என்பவரது வீட்டுக்குள் கத்திகள், பொல்லுகள், இரும்புக்கம்பிகள் சகிதம் புகுந்த எண்மர் குழு கொள்ளையிட்டது. பணம், நகை என்பன கொள்ளையிடப்பட்டன.

திருட்டுக்கள், கொள்ளைகள் ஒருபுறமிருக்க விபச்சாரம் செய்வோரின் எண்ணிக்கையும் கவலை தருவதாக இருக்கிறது. ஏழைப் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிக்கும் கூட்டமொன்றும் உருவாகி வருகிறது.

நீலப்பட வீடியோ கொப்பிகளும் மீண்டும் ஊடுருவத் தொடங்கியுள்ளன. மாணவர்களுக்கு நீலப்படம் காண்பித்து சம்பாதிக்கும் ஆட்களும் இப்போது துணிச்சலுடன் தொழில் தொடங்கியுள்ளனர்.

பொலிசார் கடமையில் இருந்தாலும்கூட திருட்டுக்கள், விபச்சாரம், நீலப்பட விவகாரம் போன்றவற்றில் பொலிசாரிடம் முறையிட்டால் துரித நடவடிக்கை எடுக்கப்படுவதில்லையாம். அபாயகரமான இச் சீரழிவுகள் குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# 'தாயகக் கோட்பாட்டை' சிதைக்கத் திட்டம்!

## பிரபாவின் கவனம் கிழக்கில்!

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு!

"இனப்பிரச்சனைக்கான தீர்வுத்திட்டம் என்ற போர்வையில் தமிழரின் தாயக பூமியை சட்டபூர்வமாக கூறுபோடும் கைங்கரியத்தில் இன்றைய அரசாங்கம் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது." இவ்வாறு வன்னியில் இருந்து சமீபத்தில் வெளியாகியுள்ள 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

புலிகள் இயக்க உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' மேலும் தெரிவித்துள்ள கருத்துக்கள் தற்போது சர்ச்சைக்குரிய சில விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ கருத்துக்களாக அமைந்துள்ளன.

அப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழர் தாயகக் கோட்பாட்டை அர்த்தமற்றதாக்கி, தமிழரின் தனித்துவ தேசியத் தன்மையைச் சிதைத்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையைத் தகர்ப்பதே ஆளும் வர்க்கத்தின் நோக்கமாகும். அதற்கு ஒரேவழி கிழக்கை முழுமையாக அபகரிப்பதே என்ற தீர்மானத்தோடு செயற்படுகின்றனர்.

இந்த நடவடிக்கைத் தொடரின் இப்போதைய இறுதிக் காட்சியாக இனப்பிரச்சனைக்கான தீர்வுத்திட்டம் என்ற போர்வையில் தமிழரின் தாயக பூமியை சட்டபூர்வமாகக் கூறுபோடும் கைங்கரியத்தில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

முதலில் தனி மாகாணம் என்ற பெயரில் கிழக்கை வடக்கில் இருந்து பிரித்தெடுத்து விட்டு. பின்பு தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகிய மூவின மக்களுக்கும் தனித்தனியான நிர்வாக அலகுகள் ஏற்படுத்துவதுதான் திட்டம். அந்த மூடு திரைக்குப் பின்னால் கிழக்கை மூன்று துண்டிடும் கபடத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர்.

இந்தத் திட்டமானது தமிழர் சுதந்திரப் போருக்கு எதிரான அரசியல் மூலோபாயமாகவும் இருக்கிறது.

இந்நிலையில் இனவாத தரப்பை இறுக்கமான நெருக்கடிக்குள் சிக்கவைக்கக்கூடிய, அரசியல் ரீதியான விளைவுகளைத் தரவல்ல களமாக கிழக்குப் போர்க்களமே விளங்குகின்றது.

எனவே நுட்பமான புதிய வியூகங்களை வகுத்து, சூழ்நிலைக்குப் பொருத்தமான வழி முறைகள் ஊடாக கிழக்கு முனையை தொடர்ச்சியாக நெறிப்படுத்தி வருகிறார் பிரபாகரன்.

வடக்கையும்- கிழக்கையும் பிரித்துத் துண்டாடும் முயற்சிகளையும், எல்லைக் கோடுகளை மாற்றியமைக்கும் சூழ்ச்சிகளையும் முறியடிக்கும் போர் முனையாக புதிய பரிமாணங்களுடன் கிழக்குப் போர்க்களம் விரிந்து வருகிறது." இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உளவு விமானமும்-புலிகளும்

## செய்தி நிறுவனத்தின் தவறான செய்தி!

ஏ.எஃப்.பி.செய்தி நிறுவனம் சமீபத்தில் ஒரு செய்தியை வெளியிட்டது. இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை மூன்று உளவு விமானங்கள் உட்பட 9 விமானங்களை தாம் சுட்டு வீழ்த்தியதாக புலிகள் உரிமை கோரியுள்ளனர். 'புலிகளின் குரல்' வானொலியில் அதனை தெரிவித்துள்ளனர் என்று ஏ.எஃப்.பி. செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உண்மையில் 'புலிகளின் குரல்' வானொலியில் அவ்வாறு இதுவரை உரிமை கோரப் படவில்லை. இதேவேளை ஏ.எஃப்.பி செய்தி தொடர்பாக புலிகளின் இலண்டன் தலைமையகம் விடுத்துள்ள செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது: "புலிகளின் குரல் வானொலி அப்படிக் கூறியதாக ஏ.எஃப்.பி. கூறியுள்ளது. எமக்கு அது பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் மூன்று உளவு விமானங்கள் இதுவரை நாசமாகியுள்ளன. ஆனால் வடக்கே உளவு நடவடிக்கையின்போது விழுந்தவை இரண்டு உளவு விமானங்கள் மட்டுமே. மற்றொரு உளவு விமானம் பயிற்சியின்போது அநுராதபுரத்தில் விழுந்து நொறுங்கின. கடந்த ஆண்டும் ஒரு உளவு விமானம் பயிற்சியின்போது அனுராதபுரத்தில் விழுந்தது. அத் தகவல் தெரியாமல் மூன்று உளவு விமானங்கள் என்று ஏ.எஃப்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

உளவு விமானங்கள் தொடர்பாக புலிகள் இயக்கத்தினர் எவ்வித உரிமை கோரலையும் செய்யவில்லை என்பதே உண்மையாகும்.

# "புலிகள் பேச ஒன்றுமிருக்காது!"

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே காணப்பட்டுள்ள உடன்பாடு தொடர்பாக தமிழ்க் கட்சி வட்டாரங்கள் வியப்புத் தெரிவித்துள்ளன.

"அரசும் புலிகளும் பேசித்தான் தீர்வு காணமுடியும்" என்று கூட்டணியினர் தமிழ் பத்திரிகைகளில் அறிக்கை விட்டு வருகின்றனர். ஆனால் தாம் மட்டுமே ஏகப்பிரதிநிதிகள் போல விட்டுக்கொடுப்புக்கள் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்ளுகின்றனர். புலிகள் பேச வந்தால் பேசுவதற்கு ஒன்றுமே இல்லாமல் செய்து விடுவார்கள் போலிருக்கிறது"- என்று தமிழ்க் கட்சியொன்றின் பிரமுகர் தெரிவித்தார்.

"பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகள் தமிழ்க் கட்சிகள் இல்லை என்று அர்த்தமா? எதிர்க்கட்சி- தமிழ்க் கட்சிகள் என்று நடைபெறும் இப் பேச்சுவார்த்தைகள் எதிர்க்கட்சியின் அரசியலுக்கே சாதகமானவை. இந்தக் கட்சிகள் ஏமாந்து கொண்டு இருக்கின்றன," என்று மற்றொரு தமிழ்க் கட்சிப் பிரதிநிதி சாடினார்.

# கிளிநொச்சியிலும் படை குவிப்பு!

வன்னி நடவடிக்கைக்கான முஸ்தீபுகளில் ஒரு கட்டமாக கிளிநொச்சியிலும் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் படையினர் குவிக்கப்பட்டு வரும் அதேவேளையில் கிளிநொச்சியிலும் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். இரு முனைகளில் இருந்து புறப்படும் உத்தேசம் படையினருக்கு இருப்பதாகத் தெரிகிறது.

இதேவேளை, கடந்தவாரம் வன்னியில் பெருமழை பெய்தது. "பெருமழை ஓயபோர் மழை ஆரம்பமாகுமோ, அல்லது இரண்டும் ஒன்றாகப் பொழிந்து எம்மை மூழ்கவைக்குமோ" என்று மக்கள் அங்கலாய்த்தபடி இருந்தனர்.

# "மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும்!"

"வன்னியில் படை நடவடிக்கைகளின் போது மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும்." இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளதாக 'வெரித்தாஸ் வானொலி' தெரிவித்துள்ளது.

போர் நடவடிக்கைகளில் பொது மக்களோ, பொதுமக்களின் இருப்பிடங்களோ தாக்கப்படக்கூடாது. அப்பாவி மக்களின் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்படவேண்டும். என்று செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளது.

இதேவேளை, "வன்னியில் படை நடவடிக்கையானது அப்பாவி மக்களின் உயிரிழப்புகளுக்கும், பெரும் அவலங்களுக்கும் வித்திடும்" என்று மனித உரிமை அமைப்புக்கள் பல கவலை தெரிவித்துள்ளன.

விமானத் தாக்குதலுக்கு உள்ளான புளியந்தீவு மருத்துவமனைக்குள்ளும் மழைநீர் தேங்கி நின்றது. விமானத் தாக்குதல் காரணமாக செயற்பட முடியாதளவுக்குப் பாதிப்படைந்துள்ளது மருத்துவமனை.

# பெண்ணுக்கு மிரட்டல்!

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த எஸ். கிருபாதேவி; (வயது 35) இரண்டு பிள்ளைகளின் தாயார். கணவர் காலமாகிவிட்டார்.

இவர் முன்னர் புலிகளுக்கு உணவு சமைத்துக் கொடுத்ததாக சீருடையில் வந்தவர்களால் மிரட்டப்பட்டாராம். பின்னர் முகாமுக்கு அருகே உள்ள வீட்டில் வந்து இருக்குமாறு கேட்கப்பட்டாராம். இவ் விடயம் தொடர்பாக அவர் புகார் செய்திருக்கிறார்.

# இருவர் பலி!

கடந்த 10.05.97 அன்று யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி தனங்கிளப்பில் படைகள்- புலிகள் மோதல் இடம்பெற்றது. ரி. 56 ரகத் துப்பாக்கி படையினரால் கைப்பற்றப் பட்டது.

11.05.97 அன்று இரண்டு சடலங்கள் யாழ் மருத்துவமனையில் ஒப்படைக்கப் பட்டன. கொழும்புத்துறையில் ஒருவர் சயனைட் உட்கொண்டதாகவும், சண்டிலிப்பாயில் மற்றொருவர் இராணுவத்தினரால் சுடப்பட்டு பலியானதாகவும் கூறப்பட்டது. சூட்டில் பலியான இளைஞர் நெற்றியில் காயப்பட்டிருந்தார்.

# நீதியமைச்சு இணக்கம்!

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் சமாதான நீதிபதிகளுக்கு (ஜே.பி) விசேட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்று யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் திருமலை மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான திரு.மு.சந்திரகுமார் அவர்கள் நீதி, அரசியலமைப்பு அலுவல்கள அமைச்சரிடம் கோரியிருந்தார்.

அக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாகவும், அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேற்படி அமைச்சின் உதவிச் செயலாளர் திரு.காமினி காரியவசம் கடிதமூலம் திரு.மு.சந்திரகுமார், பா.உ. அவர்களுக்கு அறிவித்துள்ளார்.

# கனடிய உயரதிகாரியின் கவலை!

"சாதாரண குடிமக்களையும் புலிகள் இயக்கத்தினர் நிதிகேட்டு நெருக்கடி கொடுப்பதை வரவேற்க முடியாது. ஏழைத் தொழிலாளிகளான சாதாரண மக்களையும், மாட்டு வண்டி வைத்துப் பிழைப்போரையும் சைக்கிளில் விறகு வியாபாரம் செய்து பிழைப்போரையும் கூட புலிகள் இயக்கத்தினர் தமது நிதி வசூலிக்கும் இலக்குகளாக தெரிவு செய்வதை எங்ஙனம் அங்கீகரிக்க முடியும்" என்று இலங்கையிலுள்ள கனடிய உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். நியாயமான பிரச்சனைகள் உண்டென்பதை மறு தரப்பாருக்குத் தெளிவுபடுத்த வேண்டியது பொறுப்பாகும். அதற்காக மேலும் பல நெருக்கடிகளை உண்டாக்கினால் பிரச்சனைகளால் ஏற்படும் தொடர் பிரச்சினைகளில் மக்கள் சிக்க வேண்டியிருக்கும் என்று அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்க இராணுவப் படையில் கடமையாற்றிய அந்த அதிகாரி பின்னர் இராணுவத்திலிருந்து விலகி அங்கேயே சமாதானத்தைத் தோற்றுவிக்கும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டவராகும். தற்சமயம் இலங்கையிலும் சமாதானத்தை ஏற்படுத்தும் பணிக்காக இவர் தன்னை அர்ப்பணித்துப் பல்வேறு முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

# பொறியாக மாறிய கசிப்புக்கடை!

## 6 பேர் பலி, கடை – வீடுகள் சேதம்!

மட்டக்களப்பு- வாழைச்சேனை, கல்மடு கிராமத்தில் பொலிஸார்மீது புலிகள் இயக்கத்தினர் நடத்திய கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சமரில் 4 பொதுமக்களும் 2 பொலிஸாரும் பலியாகினர். 3 பொதுமக்களும் 3 பொலிஸாரும் காயம்பட்டனர். பி. சாமித்தம்பி (67), ரீ. தருமலிங்கம் (21), எஸ். சின்னத்துரை (45), எஸ். சௌந்தரராஜன் (35) ஆகியோரே பலியான குடிமக்களாகும்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற மோதலின் விளைவாக அவ்விடத்திலிருந்த 5 வீடுகளும், 2 கடைகளும் சேதமாக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பிரதேசச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்மடுக் கிராமத்திலுள்ள சஹ்ரான் கடையொன்றில் கசிப்பு வியாபாரம் இடம்பெற்று வந்ததாகவும், அந்தக் கடையைப் புலிகள் இயக்கத்தினர் தீயிட்டுக் கொளுத்திய பின்னர் அங்கேயே மறைந்திருந்ததாகவும் அவ்வேளையில் ஜீப் வண்டியில் பொலிஸார் கடையைப் பார்வையிட வந்தபோது அவர்கள் மீது கிரனைட் தாக்குதலும், துப்பாக்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறே சமீபத்தில் வாழைச்சேனை நகரில் அன்னை பூபதியின் நினைவு அனுஷ்டிக்கப்பட்டவேளையில் பாதாதைகளைக் கட்டிவிட்டு, அவற்றை அகற்றப் படையினர் வருவர் என எதிர்பார்த்துப் புலிகள் காத்திருந்தனர். எதிர்பார்த்த மாதிரியே படையினர் வந்து பதாதைகளை அகற்றும்போது புலிகள் சுட்டதில் பொலிஸார் இருவர் கொல்லப் பட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இழப்பை வழங்க புலிகள் நிதி வசூல்!

மட்டக்களப்பில் கடந்த இருமாதங்களுக்கு முன்னர் வவுணதீவுப் படைமுகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்காக புலிகள் பொது மக்களின் வாகனங்களையும் பயன்படுத்தியிருந்தார்கள் என்பது தெரிந்ததே. இது முரசின் செய்தியிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரமொன்று விமானக் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டது. தற்சமயம் அவ் உழவு இயந்திரத்தின் சொந்தக்காரருக்கு இழப்பீடு வழங்குவதற்காக புலிகள் இயக்கத்தினர், உழவு இயந்திரம் வைத்திருப்போரிடம் தலா 2 ஆயிரம் ரூபா கேட்டு நிதி வசூல் செய்வதாக அறியப்பட்டுகிறது.

சமீபத்தில் நடந்த மற்றொரு சம்பவமொன்றில் உழவு இயந்திரமொன்றை எடுத்துச் சென்ற புலி இயக்க உறுப்பினர் ஒருவர் அதைத் தண்ணீருக்குள் ஓட்டிச் சென்றிருக்கிறார். உழவு இயந்திரம் சேற்றில் நன்கு புதைந்துவிட்டது. அவ்விடத்திலேயே அதைக் கைவிட்டு புலி இயக்க உறுப்பினர் சென்றுவிட்டார். பின்னர் உழவு இயந்திரத்தின் சொந்தக்காரர் தமது உழவு இயந்திரம் சம்பந்தமாக புலிகள் இயக்கத்தினரை விசாரித்த பொழுதுதான் சம்பவம் தெரியவந்தது. அந்த உழவு இயந்திரத்தைப் பறித்துச் சென்று சேற்றில் புதைத்த புலி இயக்க உறுப்பினரை அடையாளம் காட்டுமாறு உழவு இயந்திரத்தின் சாரதியைப் புலிகள் இயக்கத்தினர் கேட்டிருந்தனராம். எனினும் அவர் பயத்தின் காரணமாக தம்மிடம் உழவு இயந்திரத்தை எடுத்துச் சென்ற புலி உறுப்பினரை அடையாளம் காட்ட முன்வரவில்லை என்பதாகக் கூறப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க, நெற் செய்கையின் போது வழக்கமாகப் புலிகள் இயக்கத்தினர் விதித்திருந்த நிபந்தனைகளை இம்முறை சற்றுத் தளர்த்தியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. ஆனால் நிதி வசூலிப்பில் எவ்வித மாற்றமுமில்லை.

# குறிதவறிய புலிகளின் ஷெல்கள்!

மட்டக்களப்பு-வாழைச்சேனை நகரம் புலிகள் இயக்கத்தினருக்கும் படையினருக்கும் அடிக்கடி மோதல் நடக்கும் பலப்பரீட்சைக் களமாக இன்னமும் நீடிக்கிறது. அங்கு உருவாகியிருக்கும் முறுகல் நிலையினால் பல அப்பாவிப் பொதுமக்களின் உயிர்கள் பலியாகியிருப்பதோடு மக்களின் இயல்பு வாழ்க்கை சீரழிந்து கொண்டிருக்கிறது. இப்பகுதியில் படையினருக்காகக் காத்திருக்கும் புலிகளுக்கும் புலிகளுக்காகக் காத்திருக்கும் படையினருக்கும் எந்நேரம் எது நடக்குமோ என்ற மரண பீதி மக்களைக் கிலி கொள்ள வைத்திருக்கிறது.

நாசிவன்தீவிலிருந்து வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகக் கட்டிடத்திலிருக்கும் படை முகாமை நோக்கிப் புலிகள் இயக்கத்தினர் கடந்தவாரம் ஏவிய எட்டு "ஷெல்"களில் பெரும்பாலானவை அருகிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது இலக்குத் தவறி வீழ்ந்து வெடித்தன. எனினும் அதிர்ஷ்டவசமாக குடிமக்கள் தரப்பில் உயிரிழப்புக்கள் ஏதும் இருக்கவில்லை. படைவீரர் நால்வர் காயப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ்-முஸ்லிம்களுக்கு கதவடைப்பா?
# சீர்கெட்டுவரும் ரூபவாஹினி

ரூபவாஹினி தமிழ்ச் செய்தியை மொழிபெயர்க்கவென சிங்களவர் ஒருவர் சமீபத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் பல சிங்களவர்களை தமிழ்ச் செய்தி மொழிபெயர்ப்பாளர்களாக நியமிக்கும் திட்டமும் உண்டு. இது இடம்பெற்றால், தற்போது செய்தி மொழிபெயர்த்து வரும் தமிழ், முஸ்லிம் மொழிபெயர்ப்பாளர்களது சேவை முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

ஜனாப் ஜே.எம்.காசிம் என்று ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளர் செய்திப் பிரிவில் இருந்தார். அவர் ஓய்வுபெற்றுச் சென்றுவிட, அந்தப் பதவிக்குத் தமிழ் அல்லது முஸ்லிம் மொழிபெயர்ப்பாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. இது நிர்வாகத்தின் சீர்கேடு. பின்னர், ஜனாப் நௌசாத் மொஹிதீன் என்று ஒருவர் தற்காலிகமாகக் கடமையாற்றினார். மூன்று மொழிகளும் தெரிந்தவர். தாம், தகுதி பெற்றவர் என நிருவாகம் கருதும் பட்சத்தில் தம்மை நியமிக்கும்படி அவராகவே வேண்டுகோள் விடுத்திருந்தார். அந்த விண்ணப்பம் குப்பைக் கூடைக்கு அனுப்பப்பட்டது. இதுவும் நிர்வாகச் சீர்கேடுதான்.

ரூபவாஹினி போன்ற முக்கிய கூட்டுத்தாபனத்தின் செய்திப் பிரிவின் மொழிபெயர்ப்பை சிங்களவர் ஒருவர் செய்ய முடியும் என்று எப்படித்தான் தீர்மானித்தார்களோ தெரியவில்லை. ஆனால், இதன் தாக்கம் வெளியே தெரிய ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே, ரூபவாஹினி தமிழ்ச் செய்தி சம்பந்தமாக பலர் ஆச்சரியத்தில் மூழ்கியுள்ளார்கள். தாங்கள் இதுவரை கேட்டிராத தமிழ்ச் சொற்கள் செய்தியில் இடம்பெறுவதே இதற்கான காரணம்.

நிலைமை இப்படியே போனால், காலை 5.55க்கு, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தானத்தில் ஒலிபரப்பாகும் பௌத்த நற்சிந்தனைத் தமிழ்தான் ரூபவாஹினி செய்தியிலும் இடம்பெறலாம்.

'ஆயுபோவன்' நிகழ்ச்சியிலே தமிழ் தெரிந்த சிங்களவர்கள் பங்குபற்ற ஆரம்பித்துவிட்டார்கள். எனவே, தமிழ் தெரிந்த சிங்களவர்கள் செய்தி வாசிக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்று கூறலாமா?

இதற்குப் பதிலாக தமிழர்களை அல்லது முஸ்லிம்களை சிங்களச் செய்தி மொழிபெயர்ப்புக்கும், ஆயுபோவனில் சிங்களப் பத்திரிகை வாசிக்கவும் நிர்வாகம் அனுமதிக்குமா?

## அஞ்சலக தொலைத் தொடர்பு சாதனம் பறிப்பு!
# 'ரெலிகொம்' ஊழியர்களே எடுத்துச் சென்றனர்

(மன்னார் நிருபர்)

எருக்கலம்பிட்டி பிரதான அஞ்சல் அலுவலகத்திற்குச் சொந்தமான தொலைத்தொடர்பு சாதனங்கள் கடந்த 02.05.97 அன்று காலை 9.45 மணியளவில் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இத் தபாலகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் தொலைபேசி சாதனம் சூரிய சக்தியினால் இயங்கக் கூடியதாகும். இதனால் இங்குள்ள பொலிஸ் காவலரணில் முக்கிய உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்புக் கருதியே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடந்த 02 ம் திகதி வாகனமொன்றில் வந்த சிலர் பொலிஸாரிடம் கூறிவிட்டு இதனைக் கழற்றிக் கொண்டு சென்றதாகவும், இவர்கள் ரெலிகொம் ஊழியர்கள் எனவும் தெரியவந்தது.

முன்னறிவித்தல் எதுவுமின்றி, தபால் அதிபரிடமும் எதுவும் கூறாமல், ரெலிகொம் ஊழியர்கள் மேற்கொண்ட இவ்வபகரிப்பு நடவடிக்கை குறித்து இவ்வூர் மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

மாதாந்தம் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட வருமானமுடைய இத் தொலைபேசி சாதனம் திருத்த வேலை செய்வதற்குத்தான் கொண்டு செல்லப்பட்டதாக அறியவருகிறது. ஆனால் இதில் எதுவிதமான திருத்தவேலை செய்வதற்கும் பழுது எதுவும் ஏற்படவில்லை.

முன்பு ஒரு தடவையும் மேற்படி ஊழியர்கள் இச் சாதனங்களைக் கொண்டு செல்ல முற்பட்டபோது ஊர் மக்கள் தெரிவித்த கடும் எதிர்ப்பையடுத்து அம்முயற்சி கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது விடயமாக பிரதித் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதுடன் இனிமேலும் இது போன்ற செயல்கள் இடம்பெறாத வண்ணம் பார்த்துக்கொள்ளுமாறு இங்குள்ள சில அமைப்புக்கள் கேட்டுள்ளன.

இதேவேளை மன்னார் நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள், ஹோட்டல்கள் என்பவற்றில் பொருட்களின் விலைகள் இன்னும் குறைய வில்லை, எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சீனி ஒரு கிலோ 30 ரூபாவாகவே விற்கப்படுகிறது. உணவுப் பொருட்களின் விலைகளை ஹோட்டல்காரர்கள் இன்னும் குறைக்கவில்லை எனவும், அவர்கள் தெரிவித்தனர்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் துரிதமாக இயங்கினால்தான் பொதுமக்கள் சாதாரண விலைகளில் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விபத்தை ஆராயப் புறப்பட்ட நிபுணர்கள்?
# விபத்தில் இருந்து தப்பினர்

கடந்த மார்ச் மாதம் 16ம் திகதியன்று திருகோணமலைப் பிரதேசத்துள் பிரவேசித்த- ஆர்ஜண்டீனா தயாரிப்பான புக்கார குண்டு வீச்சு விமானத்தைச் செலுத்திய விமானி, விமானம் விபத்துக்குள்ளாகப் போவதை அறிந்து பரசூட்மூலம் வெளியே குதித்தார். விமானம் கீழே விழுந்து, அதன் இறக்கைகளில் பொருத்தப்பட்ட குண்டுகள் வெடித்து விமானமும் சேதமடைந்தது நினைவிருக்கலாம்.

இந்த விமான விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய வெளிநாட்டு நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று, அண்மையில், இரத்மலானை விமானத் தளத்திலிருந்து -சீனத் தயாரிப்பான வை-12 விமானத்தில் புறப்பட்டது. தரையிலிருந்து மேலே கிளம்பிய விமானம் சில நிமிடங்களில் தளத்தில் மீண்டும் வந்திறங்கியது.

ஒரு மணிநேர மீள் பரிசோதனைகளின் பின்னர் விமானம் மீண்டும் தன் பயணத்தைத் தொடங்கியது. கடந்த வாரத்தில் மற்றுமொரு பாரிய விமான விபத்துத் தவிர்க்கப்பட்டது.

பாதுகாப்புப் பிரிவு உயர்தர அதிகாரிகள் உட்பட பெருந்தொகையான படையினர் இரத்மலானை விமானத்தளத்திலிருந்து என்-32 விமானத்தில் புறப்பட ஆயத்தமாயினர். சகலரும் விமானத்திலேறி- விமானம் புறப்பட ஆயத்தமானதும், விமானியால் விமானத்தை ஓடு பாதையில் செலுத்த முடியவில்லை. எந்திரங்கள் இயங்க மறுத்துவிட்டன. பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில், மின் உற்பத்தி செய்யும் சாதனத்தில் தேய்மானம் ஏற்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. விமானத்திலிருந்து இறங்கிய படையினர் மற்றுமொரு விமானத்தில் பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஒன்றன்பின் ஒன்றாக விமான விபத்துக்கள் இடம்பெற்று வருவதனால், படைவீரர்கள் விமானப் பயணம் என்றாலே அஞ்சி நடுங்குவதாகத் தெரிகிறது. யுத்த முனையில் மரணமடைந்தாலாவது பெருமை உண்டு. ஆனால் விமானப் பயணத்தில் உயிர்விடுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல என்று இவர்கள் கூறுவதாகத் தெரிகிறது.

## வைத்தியசாலைக்கு பத்து மில்லியன்
# அரசியல் நோக்கம் என்று புகார்

(திருமலை நிருபர்)

கல்முனை தெற்கு மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக்கென கப்பல்துறை, துறைமுகங்கள் புனர்வாழ்வு அமைச்சினால் பத்து மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

48 படுக்கை வசதிகளுடனான மாடிக் கட்டிடம் ஒன்றை புதிதாக நிர்மாணிக்க இப்பணம் செலவிடப்படவுள்ளது. இந்த வைத்தியசாலை அண்மையில் தரமுயர்த்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

மாகாண சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் "பாரம்பரிய கல்முனை, மாவட்ட வைத்தியசாலை- ஆளணி, மருந்து, உபகரணகட்டடப் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கிறது. ஆனால் அரசியல் நோக்கத்துக்காக அவை புறக்கணிக்கப்பட்டு 2 கிலோமீற்றர் தூரத்தில் புதிய வைத்தியசாலையொன்றை நிர்மாணித்து விரிவுபடுத்துவது கல்முனை ஆஸ்பத்திரியை மெல்லச் சாகவிடும் செய்கையாக இருக்குமோ என சிந்திக்க வைக்கிறது." என்று கூறினார்.

கல்முனை தெற்கு மாவட்ட வைத்தியசாலைக்கு ஆளணி இது வரையில் அங்கீகரிக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத் தக்கது. சூழ உள்ள வைத்தியசாலைகளில் இருந்து ஒரு நிபுணத்துவ மருத்துவரும் ஆறு மருத்துவர்களும் பத்துக்கு மேற்பட்ட தாதியரும் இரவல் பெறப்பட்டே கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் ஏனைய வைத்தியசாலைகளின் ஆளணிப்பற்றாக்குறை மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கட்டடத் தேவைக்காக 10.4 மில்லியன் தரும்படி மாகாண புனர்வாழ்வு அமைச்சால் புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இது வரை எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி வைத்தியசாலை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையிலிருப்பதுடன் பற்றாக்குறை வசதிகளுடன் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய இருமாவட்டங்களுக்காக இயங்க வேண்டியுள்ளது என்பதும், கடந்த மாதத்தில் மட்டும் போதிய மருத்துவ வசதிகளின்றி இருபதுக்கு மேற்பட்ட நோயாளிகள் மரணமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

## பொதுச் சந்தையும் அசுத்த நீரும்!
# சாக்கடையாகும் பிரதான பாதை!

கண்டி மாநகரத்தின் நடுவில் அதன் எழிலை அலங்கோலப்படுத்தும் முறையில் மீன், இறைச்சி விற்பனைக் கூடங்களோடு சேர்த்து மரக்கறி என்பனவும் விற்கும் நெருக்கடிமிக்க ஒரு இடமாக கண்டி மாநகர பொதுச் சந்தை நெடுங்காலமாக அடையாளங் காணப்பட்டு வந்தது.

இந்த நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு பல மாநகர முதல்வர்கள் முயன்றும் பலன்கிட்டவில்லை. ஆனால் கடந்த வருடம் இதற்கொரு தீர்வுத்திட்டமாக கடுகஸ்தோட்டை நகரத்தை அண்மித்த பகுதியில் ஒரு பாரிய கட்டடத் தொகுதியுடன் கூடிய பொதுச் சந்தை அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் கட்டட வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

கண்டி பொதுச் சந்தையை முற்றுமுழுதாக கடுகஸ்தோட்டைக் கட்டடத்திற்கு மாற்றும் நடவடிக்கையை கண்டியிலுள்ள தொகை, மற்றும் சில்லறை வியாபாரிகள்- அடிக்கல் நாட்டும் வைபவத்தன்றே- போஸ்டர்கள் ஒட்டி எதிர்ப்பை வெளிக்காட்டினர். இருப்பினும் 'கண்டி மக்கள் சந்தை' கடுகஸ்தோட்டைக்கு மாற்றும் பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்துமுடிந்து விட்டதாக அறியக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இன்னும் எத்தனை மாதங்கள் எடுக்கும் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை.

கண்டியில் தற்பொழுது மழைக்காலம். சந்தையில் உண்டாகும் கழிவுநீர் எல்லா அசுத்தங்களுடனும் சந்தைக்கு கிழக்குப் பக்கமாக அமைந்திருக்கும் பிரதான வாயிலூடாக வழிந்தோடி போகம்பறைச் சிறைச்சாலை வாசலையண்டிய வீதியில் தேங்கி வழிந்தோடுகின்றது.

இதனால் பாதசாரிகள் பெரிதும் அசௌகரியத்திற்குள்ளாகின்றனர். ஒரு வழிப்பாதையான அதனால் வாகன நெருக்கடியும் உள்ளது.

மானுடபுத்ரன்.


**பழுது பார்த்தல்**

வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்

நியூ விக்ரேஸ்
New Victors
40 1/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492



**விளம்பரப் பகுதி**

ஸ்ரூடியோ சாயா
(Photo, Video)
1 நிமிடத்தில்
விசா, பாஸ்போட்
போட்டோ.
40 1/1, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492


**2ஆவது பிறந்த நாள் வாழ்த்து**

— நவ்லி அஹமட் —

அட்டாளைச்சேனை வம்மியடி வீதி, 4ம் குறிச்சியைச் சேர்ந்த நஸார் ஹபீலா தம்பதியின் செல்வப் புதல்வன் நவ்லி அஹமட் 27.4.97 அன்று தனது 2வது பிறந்த நாளை கொண்டாடினார். இவரை உம்மா, சவுதியில் இருக்கும் வாப்பா, உற்றார் உறவினர்கள் நீடூழி காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.




ரெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411



SPOKEN ENGLISH
தபால் மூலம் கல்வி
மூன்றே மாத காலத்தில்
ஆங்கிலம் பேச, எழுத,
வாசிக்க தபால் மூலம்
கற்றுத் தரப்படும்.
விபரங்களுக்கு முத்திரை
ஒட்டிய தபாலுறையுடன்
தொடர்பு கொள்க.
BRIGHT BOOK CENTRE(PVT) LTD.
P.O.BOX-162, COLOMBO.


**பிறந்த நாள் வாழ்த்து**

**02.05.1997**

**டினேஷ்**

கனடாவில் இருக்கும் நிறைமொழி பவானி தம்பதியினரின் செல்வப் புதல்வன் டினேஷ் தனது முதலாவது பிறந்த தினத்தை வைகாசி 2ம் திகதி அன்று கனடாவில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு கனடா-அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அன்ரிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மச்சாள் மார், அண்ணா, தங்கை, இலங்கையில் இருக்கும் அத்தை, மச்சான், மச்சாள், அப்பப்பாமார், அப்பம்மாமார், பாட்டி, அத்தைமார் ஜேர்மனியில் இருக்கும் மாமா, மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் வாழ்த்துகின்றனர்.




**500 புலமைப் பரிசில்கள்**

*DIPLOMA IN INFORMATION TECHNOLOGY*

Basic Computer Concepts, Ms Dos, Ms Windows, Word, Excel, Powerpoint, Programming Concepts, Turbo Pascal, Clipper, Systems Analysis & Design

தகுதி காண் பரீட்சையில் புலமைப் பரிசில்கள் தெரிவு செய்யும் முறை

சுய விரங்கள் அடங்கிய விண்ணப்ப படிவத்தை காசுக் கட்டளையுடன் அனுப்பவும் அல்லது நேரில் வந்து தரவும்

| புள்ளிகள் % | கழிவு % |
|---|---|
| 90 – 100 | 100 |
| 80 – 89 | 75 |
| 60 – 79 | 50 |
| 40 – 59 | 25 |

| | |
|---|---|
| விண்ணப்ப முடிவு திகதி | : 28th May 97 |
| விண்ணப்ப கட்டணம் | : Rs 100 |
| பரீட்சைத் திகதி | : 1st June 97 |
| கற்கை நெறி ஆரம்பம் | : 9th June 97 |

காலம் : 4 மாதம், கட்டணம் : Rs 8,000/=

*AUSTRALIAN COMPUTER SOCIETY*
NOVEMBER 97 COMPULSORY PAPERS

காலம் : 5 மாதம், கட்டணம் : Rs 4,500/=
ஆரம்பம் : 1st June 1997 (Sun) 9am to 12pm

INSTITUTE OF INFORMATION SYSTEMS
புதிய சந்தைக்கு முன்பாக
4C, 1st Floor, Fussels Lane,
Colombo - 6. Tel : 074 - 517390



**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

மே 19 முதல் 31 **Dr. P. Arumugam**, Ahamed Tourist inn. Bang Building No:10, Reclamation Road, (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101. கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும். ஜுன் 7,8,9,10,11 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும் T.P. 065/29329 ஜுன் 3,4 Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஒட்டமாவடி, மற்ற நாட்களில் **Dr. P. Arumugam** No. 33, Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பங்கிடப்படும் இலாபங்கள்!

## காவலரண்களின் குட்டி ராஜாக்கள்!

## ஆங்காங்கே குறுநில மன்னர்கள்!

## கைமாறும் தரகுப் பணம்!

**வ**ன்னிப் படையெடுப்புக்கான மற்றொரு படைத் தொகுதி கடந்தவாரம் செட்டிகுளத்தில் குவிக்கப்பட்டது.

அதே நேரம் புலிகளின் அணிகள் வவுனியா கிளிநொச்சி வீதியில் ஓமந்தையில் தயார் நிலையில் இருக்கின்றனர்.

மரபுப் போர் முறையும், கெரில்லா போர் முறையும் கலந்த எதிர்ப்பு யுத்தத்தில் புலிகளது படை அணிகள் இம்முறை களத்தில் இறக்கப்பட்டுள்ளன.

அதேவேளை திருமலையில் புலிகளின் மூத்த தளபதி சொர்ணம் தலைமையிலான சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு நிலைகொண்டுள்ளது.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு என்றாலே திருமலையில் உள்ள பொலிஸார் மத்தியில் ஒரு கிலிதான்.

முன்னர் திருமலை ஆறாம் கட்டையில் பொலிஸ் அரண்மீது பாரிய அதிரடித் தாக்குதலை நடத்தியதும் சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவுதான்.

வன்னியில் படைக் குவிப்பு நடக்கும் போதும் புலிகளின் சிறப்புப் படையணிகளில் ஒன்றான சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவும், மூத்த தளபதி சொர்ணமும் திருமலையில்தான் நிற்கின்றனர்.

வன்னியில் புலிகளின் மூத்த தளபதி பால்ராஜ் மற்றும் பானு உட்பட அனுபவமிக்க தளபதிகள் போர் வியூகங்களை கவனிக்கின்றனர்.

படைக்குவிப்புக்கு மேலும் படைகளை ஒன்று திரட்டுவதைத் தடுக்கும் வகையில் கிழக்கில் கெரில்லாப் போரை விஸ்தரிப்பதுதான் பிரபாவின் திட்டம்.

வடக்கு யுத்த முனையை நோக்கி அரசு படைகளை நகர்த்தும்போது புலிகள் கிழக்கு யுத்த முனையில் படைத்தரப்புக்கு பாரிய இழப்புக்களை கொடுக்க நினைக்கின்றனர்.

**அதாவது, ஒன்றைப் பிடிக்க நினைத்தால் இன்னொன்றை இழக்க வேண்டும். ஒரு புறத்தில் எங்களை அடிக்க வந்தால், வேறொரு புறமாக நீ அடிவாங்கவேண்டி இருக்கும் என்பதை தமது எதிரிக்கு உணர்த்துவதுதான் பிரபாவின் உத்தி.**

திருமலையில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் நடமாட்டம் அதிகரிப்பதாக கடந்தவாரம் முரசு செய்தி வெளியிட்டது தெரியுமல்லவா.

வன்னியில் படையினர் குவியும்போது கிழக்கு மாகாணத்தில் புலிகளின் சிறப்புப் படையணியினர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் வந்து இறங்கினார்கள்.

வன்னிப் படையெடுப்பை முறியடிக்க எதிர்ப்பு யுத்தத்துக்கு தயாராக உள்ள அதே நேரத்தில், படையினர் மீதான தாக்குதல் யுத்தத்துக்கும் தமது அணிகளை பிரித்து அனுப்பியிருக்கிறார் பிரபாகரன்.

❑●❑

**அ**ரசும்-புலிகளும் இரகசியப் பேச்சு நடத்தப்போவதாக கடந்த மாதம் சூப்பர் வதந்தியை சில செய்தியாளர்கள் கிளப்பி விட்டார்கள் அல்லவா.

அவர்கள் மக்களை நம்பவைத்து ஏமாற்றியது ஒருபுறமிருக்க, இன்னொரு புறம் அரசுக்கு தர்மசங்கடமான நிலையையும் ஏற்படுத்திவிட்டனர்.

புலிகள் தம்மோடு பேசுவதற்காக ஓடுபட்டுத் திரிகிறார்கள் என்பதுபோல செய்திகள் பரவுவது அரசுக்கு ஒன்றும் நஷ்டமல்ல. புலிகள் பலவீனமாகிவிட்டால், சந்திரிக்கா அரசு அவர்களைப் பலவீனமாக்கிவிட்டது என்றே கருதப்படும், அதுவும் ஒரு அரசியல் இலாபம் என்று ஆளும் தரப்பு நினைத்திருக்கலாம்.

ஆனால் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலாகிவிட்டது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையே இரகசியப் பேச்சு நடக்கிறதோ என்று படைத்தரப்பும் சந்தேகிக்கத் தொடங்கியது.

குறிப்பாக வடக்கு-கிழக்கில் உள்ள படையினர் மத்தியில் அதிருப்திகள் எழத் தொடங்கியிருந்தன.

புலிகளுக்கு ஆயுதம் கொடுத்து வளர்த்துவிட்டதும், புலிகளுக்கு எதிராக உறுதியான போர் நடவடிக்கையை எடுக்காமல் விட்டதும் ஐ.தே.கட்சி ஆட்சியின் தவறு என்றே இன்றைய பாதுகாப்பு பிரதியமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை படையினர் மத்தியில் கூறிவருகிறார்.

இந்நிலையில் புலிகளுடன் அரசு இரகசியமாகப் பேசப்போவதாக வதந்தி பரவியதும் ஜனாதிபதி சந்திரிக்காவும் மற்றொரு பிரேமதாசாவாகிவிட்டாரோ என்று படையினர் நினைக்கத் தொடங்கினர்.

அதனால்தான் அப்படியொன்றும் கிடையாது போர்தான் தொடரும் என்று படையினருக்கு நம்பிக்கை ஊட்டுவதும் வன்னியில் படைக் குவிப்பை அவசரமாக மேற்கொண்டு படையெடுப்புக்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டமைக்கான காரணங்களில் ஒன்று.

வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரை இன்று படையினர்தான் ராஜாக்கள்.

கிழக்கில் என்றாலும் புலிகளின் பாரிய அதிரடித் தாக்குதல்களை படையினர் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. ஆனால் யாழ் குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் இதுவரை பாரிய தாக்குதல் எதனையும் படையினர் சந்திக்கவில்லை.

அது மட்டுமல்லாமல் யாழ் குடாநாட்டை கைப்பற்றியதுடன், வவுனியா-மன்னார் தரைப்பாதையையும் கைப்பற்றிய பின்னர் புலிகளை வெற்றிகொள்வது கஷ்டமல்ல என்பதுபோன்ற உளவியல்பலம் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் ஐ.தே.கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற யுத்தத்துக்கும், தற்போதைய யுத்தத்துக்கும் இடையே படையினரைப் பொறுத்தவரை இரண்டு முக்கிய வேறுபாடுகளை அவதானிக்க முடியும்.

**அன்று: யுத்தத்தில் வெற்றியீட்டப்போவதில்லை என்ற சலிப்பான மனநிலை படையினரிடம் காணப்பட்டது.**

**இன்று: இப்படியே தொடர்ந்து போரிட்டால் புலிகளை தோற்கடிக்கலாம் என்ற நம்பிக்கை படையினரிடம் ஏற்பட்டுள்ளது.**

**அன்று: யுத்தத்தினால் கிடைத்த இலாபங்கள் அரசாங்கத்துக்கு சேர்ந்ததுபோக மீதி படை உயரதிகாரிகளால் பங்கு போடப்பட்டதே தவிர சாதாரண படை வீரர்களைச் சென்றடையவில்லை. அதனால் சண்டை பிடித்து கண்டது என்ன என்னும் விரக்தி நிலவியது.**

**இன்று: சாதாரண படைவீரனும் 'தான் ஒரு குட்டி ராஜா' என்று நினைக்கும் அளவுக்கு அவனது கௌரவம் உயர்ந்திருக்கிறது.**

**அன்று: முகாம்களுக்குள் இருப்பது, புலிகளை நோக்கி முன்னேறிச் சென்றுவிட்டு மீண்டும் முகாமுக்கு திரும்புவது என்பதே யாழ் குடாநாட்டில் படையினரின் உத்தியாக இருந்தது. அதனால் படையினர் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்தனர்.**

உறவினர்களைவிட்டு பிரிந்து வாழும் ஏக்கம் ஒருபுறம், மக்களது முகங்களையே காணாது முகாம்களுக்குள் கிடப்பதால் அந்த ஏக்கமும் சோர்வும் சேர்ந்து கொண்டது. அடைபட்டுக் கிடப்பதுபோன்ற வெறுப்பான மனநிலை காணப்பட்டது.

ஆனால் இன்று அப்படியல்ல: யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் சந்தியில் சென்றிக்கு நிற்கும் படைவீரர் ஒருவர்கூட குட்டி ராஜாதான். அவர் முன்பாக பவ்வியமாக செல்லும் மக்கள், அவரைக் கண்டதும் மடித்துக் கட்டிய சாரத்தை அவிழ்த்துவிட்டும், சைக்கிளில் வந்தால் குதித்து இறங்கி மரியாதையாக செல்லும் மனிதர்கள்.

சாதாரண படைவீரர் ஒருவரின் குடும்பப் பின்னணி, கல்விநிலை, படையில் அவர் உள்ள தரநிலை என்பவற்றோடு ஒப்பிட்டால் யாழ்ப்பாணத்தில் அவருக்கு கிடைக்கும் மரியாதை நினைத்தும் பார்க்க முடியாதது.

பல்கலைக்கழக பேராசிரியர் முதல் மரியாதைக்குரிய மதகுருவரை சாதாரண படைவீரர் முன்பாக சைக்கிளில் இருந்து இறங்கித்தான் செல்ல வேண்டும். வெய்யிலுக்கு தொப்பி போட்டிருந்தால் கழற்றிக் கொள்ள வேண்டும்.

அடுத்தது பெண்கள். தொப்பி போட்டுக் கொண்டு சைக்கிளில் சென்ற ஒரு மாணவியை ஒரு சிப்பாய் அருகே அழைக்கிறார். தொப்பியை கழற்றி அவள் முகத்தைப் பார்க்கிறார். "பொம் இருக்கா?" என்றொரு கேலியான விசாரிப்பு. தேவைப்பட்டால் பொம் இருக்கா என்று அவரே சோதனை செய்யவும் முடியும்.

அத்துமீறல்கள் ஒருபுறமிருக்க, தினமும் குறிப்பிட்ட சென்ரி பொயிண்டை தாண்டிச் செல்லும் பெண்களுக்கும் அங்கு நிற்கும் சிப்பாய்களுக்கும் இடையே அண்ணலும் நோக்க அவளும் நோக்க, அடிக்கடி நோக்கியதால் மலர்ந்த காதல்களும் உண்டு.

ஒரு தலைக் காதலை நிறைவேற்ற துப்பாக்கியுடன் சென்று மிரட்டிய பொலிஸ்காரர் கதையும் இருக்கிறது. வீட்டில் ஆண் துணையில்லாத பெண்களை தப்பான நோக்கத்துடன் சிப்பாய்கள் அழைக்க, அவர்கள் சென்று அங்குள்ள இயக்கங்களிடம் முறையிட்ட சம்பவங்களும் இருக்கின்றன.

இதுதவிர சில சிப்பாய்களிடம் ரீ.வி., டெக்குகள் போன்ற விலை உயர்ந்த பொருட்கள் இருக்கின்றன. தாம் சேகரித்த (?!) பொருட்களை குறைந்த விலையில் விற்கிறார்கள். மாமரத்தில் உள்ள மாங்காய்களை ரேட் பேசி விற்பனை செய்யும் கில்லாடிகளும் இருக்கிறார்கள்.

இவையெல்லாம் சில உதாரணங்கள்தான். கைப்பற்றிய பகுதிகளில் நிலைகொள்ளும் படையினருக்கு தமது எதிரிகளின் அச்சுறுத்தல் இல்லாவிட்டால் இன்ப நாட்டவாதம் தலைவிரித்தாடும்.

ஆக, முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்காமல் நிலப்பகுதிகளை கைப்பற்றும் போர் முறை மூலமாக சாதாரண படைவீரர்களும் உற்சாகமாக இருக்கக்கூடிய, சில வகையான இலாபங்களை அடையக்கூடிய களநிலவரம் தோன்றியிருக்கிறது.

இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும்; 'முன்னர் புலிகள்தான் படையினரை தேடித்தேடி தாக்கினார்கள். புலிகள்தான் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்கிறார்கள். இலங்கையில் இரண்டு அரசாங்கங்கள் இருக்கின்றன. புலிகளின் கோட்டையான யாழ்ப்பாணத்தை பிடிக்க படைகளுக்கு சக்தி இல்லை' என்பதுபோன்ற எண்ணமே சிங்கள மக்களிடம் காணப்பட்டது. அதனால் படையினர் தொர்பான இளப்பமான பார்வைதான் சிங்கள மக்களிடம் நிலவியது.

ஆனால் இப்போது அப்படியல்ல. யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதுடன் படைகளின் இமேஜ் உயர்ந்திருக்கிறது. நன்றாக சண்டைபோடக் கூடியவர்கள் என்று நினைக்க வைத்திருக்கிறது. போதாக்குறைக்கு தொலைக்காட்சிகளிலும் படையினரை கதாநாயகர்களாக சித்தரிக்கும் விளம்பரங்களுக்கு பணம் கொட்டி உற்சாகம் தருகிறது அரசாங்கம்.

எனவே, தற்போது யாழ்ப்பாணத்தில் கடமை ஆற்றும் ஒரு சிப்பாய் விடுமுறையில் தென்னிலங்கையில் உள்ள தன் கிராமத்துக்கு சென்றால் "கொட்டியாவை வென்ற சூரன்" என்று கொலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளலாம். கிராமத்தில் ஒரு பயமும் இருக்கும். மரியாதையும் கிடைக்கும்.

அடுத்தது படை அதிகாரிகளுக்கு வருவோம். திருக்கோணமலையில் நகரசபை கொடுத்த குத்தகையை இரத்துச் செய்தார் திருமலை பிரிகேடியர். தன்னிடம் வீட்டோ பவர் இருக்கிறது என்கிறார். வல்லரசுகளுக்கு ஐ.நா.சபையில் இருப்பது மாதிரி, வடக்கு-கிழக்கில் படை அதிகாரிகளுக்கும் 'வீட்டோ பவர்' இருக்கிறது. அரசுக்கு அரசாக வடக்கு-கிழக்கில் உள்ள வல்லரசர்களாக



சில படை அதிகாரிகள் தம்மைக் கருதிக் கொள்கின்றனர். விதி விலக்குகளும் இருக்கிறார்கள் என்பதுதான் சற்று ஆறுதல்.

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் உள்ள படை அதிகாரிகள் குறுநில மன்னர்களை நினைவூட்டுகிறார்கள். தமது பகுதியில் உள்ள மக்கள் தமக்கு அடங்கி நடந்தால், சந்திரமண்டலத்தில் இருந்தும் உதவிகள் வசதிகள் பெற்றுக் கொடுக்க தாம் தயாராக இருப்பதாக காட்டிக் கொள்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான்; "மக்கள் பணிவாக நடந்து, அந்தக் 'கேடு கெட்ட பயங்கரவாதிகளை' எங்காவது கண்டால் தகவல் தந்து ஒத்துழைக்க வேண்டும்"

தற்போதைய நிலையில் பணிவான மக்களைப் பெற்றுள்ள அதிஷ்டக்கார குறுநில மன்னர்களாக அந்த அதிகாரிகள் இருக்கின்றனர்.

யாழில் கறுப்புச் சந்தை கொடிகட்டிப் பறக்கிறது. ஊழல் தலைவிரித்தாடுகிறது. கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்காக அனுப்பப்படும் பொருட்கள் கறுப்புச் சந்தையில் கொட்டிக் கிடக்கின்றன. இதன்மூலமான இலாபங்கள் கைமாறுகின்றன.

இவை எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடும் வகையான பெரிய பெரிய முறைகேடுகள் மூலமும் யுத்தம் இலாபம் கொட்டுகிறது.

சமீபகாலத்தில் கசிந்த சில தகவல்கள் யுத்தம் தொடர்வதால் சுளை சுளையாகப் பலனடையும் ஒரு சாராரை தோலுரித்துக் காட்டுகின்றன.

1985ல் நாலு புக்காரா விமானங்கள் ஆர்ஜென்டினா நாட்டில் இருந்து வாங்கப்பட்டன. அந்த விமானங்களை வாங்கும் போதே புக்காரா உற்பத்தியை ஆர்ஜென்டினா நிறுத்திவிட்டது. கையிருப்பில் இருந்த விமானங்களை மட்டுமே தலையில் கட்டிவிட்டனர். உற்பத்தி நிறுத்தப்பட்டால் உதிரிப்பாகங்களை வாங்க முடியாது. ஆகவே புக்காரா பழுதடைந்தால் பின்னர் எப்படி திருத்துவது என்றே யோசிக்காமல் நாலு புக்காராக்கள் வாங்கப்பட்டன. யோசிக்கவில்லையா அல்லது அவற்றை வாங்கியதால் கிடைத்த கமிஷன் வாயை அடைத்ததா என்று தெரியவில்லை. இப்போது இரண்டு புக்காராக்களை இழந்துவிட்டது விமானப் படை. மேலும் இரண்டு புக்காராக்கள் பழுதடைந்து திருத்த உதிரிப்பாகங்கள் இல்லாமல் கிடக்கின்றன. ஒரு புக்காராவின் விலை 26 இலட்சம் அமெரிக்க டொலர்.

கடந்த மார்ச் 16ம் திகதி புக்காரா ஒன்று இடைவழியில் வெடித்துச் சிதறியதல்லவா. அதன் இறக்கைகளில் பொருத்தப்பட்ட குண்டு வெடித்ததுதான் காரணமாம். புக்காராவுக்கான குண்டுகளை இங்கேயே தயாரிக்கும் குத்தகையை எடுத்திருந்தது ஒரு தனியார் நிறுவனம். அந்த தனியார் நிறுவனத்தின் திறன் அறிந்துதான் குத்தகை கொடுக்கப்பட்டதா? அல்லது..? என்று சந்தேகங்கள் எழாமலில்லை.

மற்றொரு தகவலும் வாயைப் பிளக்க வைக்கக் கூடியது; கடந்த வருடத்துக்கான தேசிய தராதர விருது இலங்கை விமானப் படைக்கு கிடைத்திருக்கிறது. விமானப் படைக்கு அது மகிழ்ச்சியான செய்திதான். அந்த மகிழ்ச்சியை மக்களுடன் பகிர்ந்து கொள்ள செய்த செலவுதான் பயமுறுத்துகிறது. **இந்த வருடம் பெப்ரவரி மாத்தில் கிட்டத்தட்ட 51 இலட்சம் ரூபாய் செலவிட்டு பத்திரிகைகளில் அச் செய்தி விளம்பரமாகக் கொடுக்கப்பட்டது.**

**கடந்த ஜனவரி மாதம் அரச பத்திரிகை ஒன்றில் 49 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவுக்கு விமானப்படையின் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த விளம்பரம் கொடுத்ததுக்கான தரகுப் பணமாக 10 இலட்சம் ரூபாய் கைமாறியிருக்கிறது.**

கடற்படையினருக்கான பீரங்கிப் படகுகளில் உள்ள 25 எம்.எம்.மற்றும் 35 எம்.எம். பீரங்கிகளுக்கான 15 இலட்சம் குண்டுகள் கொள்முதல் செய்யப்பட்டன. கடந்த வருடம் குண்டுகளுடன் கப்பலை அனுப்பியது சீனா. அத்தனை குண்டுகளும் நீண்டகாலப் பாவனைக்கு உதவாதவை, கடலில் கொட்ட வேண்டிய குண்டுகளை இலாபகரமாக விற்பனை செய்துவிட்டது சீனா. ஒரு குண்டின் விலை 45 டொலர். (2610 ரூபாய்) மொத்த நஷ்டத்தை கணக்குப் பார்த்தால் தலை சுழலும். சீனாவுக்கு இலாபம்.

இந்தக் கொள்வனவிலும் முறைகேடுகள் நடந்திருப்பதாகவே சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

பல நூறு கோடிகள், ஆயிரம் கோடிகள் புழங்கும் ஆயுத வியாபாரங்களில் சிலகோடிகள் தரகுப் பணம் என்ற பெயரில் கைமாறுவது சகஜம். இந்தியாவில் போஃபர்ஸ் ஊழலும் அதற்கு ஒரு உதாரணம்.


எனவே-இன்றைய யுத்தத்தில் வெளிப்படையாக தெரிவது அரசாங்கத்தை சென்றடையும் அரசியல் லாபம் மட்டுமே. ஏனைய இலாபங்கள் மறைமுகமாக பாதாளம்வரை பாய்வன. அப்படிப் பாய்ந்து யுத்தத்தை நிறுத்த முடியாதளவுக்கு நிர்ப்பந்தம் செய்யக்கூடியவை.

பிரேமதாசா அரசாங்கத்தில் யுத்தத்தின் பலன்கள் அனைத்தும் பிரேமதாசா என்ற சர்வாதிகார மனிதருக்கே சொந்தமாவதாக நினைக்கப்பட்டது. ஆனால் **இப்போது, யுத்தத்தில் கிடைக்கும் அரசியல் இலாபத்தை தனக்கு எடுத்துக் கொண்டு ஏனைய இலாபங்களை பங்கீடு செய்யக்கூடியளவில் யுத்த முறையை மாற்றியுள்ளது இன்றைய அரசாங்கம்.** முன்னைய அரசாங்கமும் இலாபம் பங்கீடு செய்தது. ஆயுத பேரங்களில் சில அதிகாரிகள் பசியாறினர். ஆனால் இப்போது படை அதிகாரிகள் மட்டுமல்ல சாதாரண சிப்பாயும் யுத்தத்தால் தனக்கும் பெருமை உண்டு, பலன் உண்டு என்று நினைக்கும் அளவுக்கு யுத்தம் செய்யும் முறை மாற்றப்பட்டுள்ளது.

எனவே யாழ்ப்பாணத்தில் உள்ள அடிமட்ட சிப்பாய்கூட போரை நிறுத்தும் யோசனைக்கு இப்போது ஆதரவாக இல்லை. காரணம் இப்போது அனுபவிக்கும் சலுகைகளை இழக்கத் தயாராக இல்லை. அரசும் போர் மூலமே புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவும், போர் வெற்றிகளை சாதகமான அரசியல் மூலதனமாகவும் நினைப்பதால் இன்றைய இலாபப் பங்கீடுகள் அரசைப் பொறுத்த வரை அவசியம்தான். புத்திசாலித்தனமானதும் கூட. ■

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாண நகரில்** முனியப்பர் கோவில் இருக்கிறது. அதன் அருகேதான் கோட்டை இருந்தது. அங்குதான் முன்னர் இராணுவமுகாம் இருந்தது. இராணுவம் வெளியே வராமல் இருக்க முனியப்பர் கோவில் பகுதியிலும் கண்ணிவெடி புதைத்தன இயக்கங்கள். இப்ப காலம் மாறிப் போச்சுது. முனியப்பர் கோவிலை திறந்துவிடுமாறு படையினரிடம் அனுமதி பெற்றது நாங்கள்தான் எண்டு இரண்டு இயக்கங்கள் ஏட்டிக்குப் போட்டியாக உரிமை கோரியிருக்கினம்.

**இதுவும் ஒரு** யாழ் காட்சிதான். யாழ்நகரில் இருக்கிறது தாராகுளம். அந்தக் குளத்தை வெட்டி துப்புரவு செய்து கொண்டிருந்தினம் இளைஞர்கள். துப்புரவு செய்யிறது யார் எண்டு தெரியாட்டி என்ன புண்ணியம்? அதனாலே தங்கள் இயக்கத் தேர்தல் சின்னம் பொறித்த ரீ சேட்டுக்களைப் போட்டுக்கொண்டுதான் சிரமதானப் பணியைச் செய்வனே செய்தவையாம். இந்த இடத்தில் ஒரு அந்த நாள் ஞாபகம். சிரமதானம் செய்த இயக்கத்தின் உபதலைவர் முன்னர் ஒரு தடவை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிச் சுவரில் "கேட்டது தமிழீழம், கிடைத்தது ஜப்பான் ஜீப்" எண்டு கூட்டணியைக் கிழிச்சு வாசகம் எழுதினவர். அதுக்காக பொலிசிலும் பிடிபட்டு தாக்கப்பட்டவர். அது துடிப்பான காலம். அதையே இப்போது திருப்பிப் போட்டால் என்னமாதிரி எழுத வேணும்? "கேட்டது தமிழீழம், கிடைத்தது தாராக்குளம்."

**கல்முனையில்** நடைபெற்ற கிழக்கின் தனித்துவக் கட்சிக் கூட்டத்தில் சல சலப்பாம். 'லீடர்' எங்கே, நேரில் பல விஷயங்கள் பேசவேண்டும் எண்டு அங்கத்தவர்கள் ஆதங்கப்பட்டனராம். தொலைபேசி வழங்கப்பட்ட விவகாரத்தில் உறவினர்களுக்கு முன்னுரிமை கொடுத்த சில உள்ளூர் பிரமுகர்களை ஒரு பிடி பிடித்து பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டதாம். இப்படியான சல சலப்புக்கள் நடக்கும் எண்டு தெரிந்துதான் அங்கத்தவர் கூட்டங்களுக்குப் போகாமல் 'லீடர்' விட்டுப்பிடிக்கிறாராம்.

**மலைப்பகுதி** தனித்துவத் தலைவர் பச்சைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் ஒரு வரி இப்படிப் போகிறது: "நிரந்தரப் பிளவுக்கு வழிவகுத்துவிடாதீர்கள்!" அங்கேதான் இருக்கு பொயிண்ட்டு. எதிர்காலத்தில் பச்சைக் கட்சியினருக்கு செல்வாக்கு சேருமானால் அவர்களுடன் சேரும் நோக்கம் ஐயாவுக்கு இருக்குதெண்டுதானே அர்த்தம்? 'சொன்னாலும் சொன்னாரய்யா, சொல்லாமல் சொன்னாரய்யா!' எல்லாம் சரி; உள்ளூராட்சித் தேர்தலை எதிர்த்துப் போட்டியிட்டுப் போட்டு, மாகாணசபையில் பதவி கேட்பானேன்? அரசியல் ஊடலை மலையக தமிழ் மக்களுக்கு எதிரான செயல் எண்டு கதைவிடுவானேன்? பதவி பெரிசில்லை எண்டுபோட்டு, பதவிக்காக ஊடலுள்ள கட்சியுடன் கூடலுக்கு நிற்பானேன்?! ஐயா குழப்புகிறார்.

**திருவான மலையின்** சம்பந்தமானவர்தான் விட்டுக்கொடுப்பு விடயத்தில் தீவிரமாக நிற்கிறாராம். தலைவர் 'ஆமாம்' மட்டும் போடுகிறாராம். அதெல்லாம் கிடக்க 'அம்பாறையை விட்டுக் கொடுக்க ஓ.கே' எண்டு பச்சைக் கட்சியிடம் கடந்தவாரம் உத்தியோக பூர்வமாக அறிவித்தது கூட்டான கட்சி. அதனை மட்டும் பத்திரிகைகளுக்குச் சொல்லாமல் அமுக்கியது ஏன்? கையெழுத்தை மட்டுமல்ல சனத்தின் தலையெழுத்தையே மாற்றிப் போட்டுவிட்டும் 'சட்டப்படி தப்பே இல்லை' எண்டு சொல்லப்போகினம். பச்சைக் கட்சி இதுவரை எதைக் கொடுக்க தாங்கள் ஓ.கே.யாக இருக்கினம் எண்டு வாயே திறக்கேல்லை. இவை மட்டும் ஏன் பறிகொடுக்க இவ்வளவு வேகம் காட்டுகினம்? இப்பவே இப்பிடி எண்டால் 'அவை'யும் இல்லாட்டி எப்பிடியெல்லாம் குனிஞ்சு குனிஞ்சு கொடுப்பினம் எண்டு பார்த்துக் கொள்ளுங்கோ?

**பறையனாலங்குளத்தை** 'சம்புமல்புர' என்ற பெயரில் வானொலியில் செய்தி எழுதியவர் யார் என்று தெரியவில்லையாம்! தேடுகிறார்களாம்! சனத்தை இந்தளவுக்கு பேய்க்காட்டக் கூடாதுங்கோ. அதெல்லாம் ஒருபுறமிருக்க பறையனாலங்குளத்தை கைப்பற்றிய நாளில் இருந்தே அதனை சப்புமல்புர என்றுதான் படையினர் அழைத்து வருகின்றனர் என்பதுகூட மேல் மட்டத்துக்குத் தெரியதோ? பெயர் சூட்டல் விவகாரம் என்ன புதுசோ? இப்படித்தான் பாருங்கோ, மட்டக்களப்பு வந்தாறுமூலையை 1950ல் பெயர் மாற்ற ஆசைப்பட்டார் அன்றைய அரச அதிபர். வந்தாறு மூலை என்பது தவறு, அதனை 'வந்துறுமூலை' என்று அழைக்க வேண்டும் என்றார். சனம் எதிர்த்ததால் பெயர் மாற்றம் கைவிடப்பட்டது. நியாயமாகப் பார்த்தால் அந்தாளைப் பின்னி எடுக்காமல் விட்டதுதான் தவறு. சிங்களத்தில் 'வந்துறு மூலை' என்றால் தமிழில் என்ன அர்த்தம் தெரியுமோ? குரங்கு ஒதுங்குமிடம்!

**ஓர் இத்தாலியப் பழமொழி**

"எல்லோரும்
சொர்க்கத்துக்குப் போக
ஆசைப்படுகிறார்கள்;
ஆனால்-யாருமே
இறப்பதற்கு விரும்புவதில்லை." ■



படிப்பகம்

www.padippakam.com

**அரசியல்தொடர்**
**அற்புதன் எழுதுவது**

# 129

# சர்வதேச அரங்கில் நடந்த போராட்டங்கள்!

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## இந்தியாவுடன் போர் நிறுத்தம்! பிரபா சொன்ன பதில்!

### உலகத்தமிழர் மாநாடு

இந்தியப் படையினருடன் போர் நடத்திக்கொண்டே சர்வதேச ரீதியில் பிரச்சாரப் போரையும் நடத்தினார்கள் புலிகள் இயக்கத்தினர்.

1988 மே மாதத்தில் இலண்டனில் 'உலகத் தமிழர் மாநாடு' நடைபெற்றது.

வெளிநாடுகளில் 'உலகத் தமிழர் இயக்கம்' என்னும் பெயரில் புலிகள் இயக்கத்தினர் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

'உலகத் தமிழர் இயக்கம்' ஒரு பொது அமைப்பு என்றே வெளியே சொல்லப்படுவது உண்டு. இதனால் 'கனடா' போன்ற நாடுகளில் பொது அமைப்பு என்ற ரீதியில் அரசாங்கத்தின் நிதி உதவியும் கிடைப்பதுண்டு.

உலகத் தமிழர் இயக்கத்தினர்தான் 1988 மேயில் உலகத் தமிழர் மாநாடு (உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அல்ல இது) ஒன்றை நடத்தினார்கள்.

இலங்கை- இந்திய உடன்படிக்கை தொடர்பாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும் ஆராய்வதே மாநாட்டின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் பல பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

நெடுமாறன், உன்னி கிருஷ்ணன் எம்.பி, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி கிருஷ்ண அய்யர், இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலாளர் வெங்கடேஷ்வரன், உபேந்திரா, வை.கோபால்சாமி உட்பட பல பிரபலங்கள் இந்தியப் பிரதிநிதிகளில் அடங்குவர்.

அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி கரேன் பார்க்கர், சுவீடனைச் சேர்ந்த திரு.பீட்டர் ஷாக், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ரிச்சர்ட் எப்.ஊட்டன் என்னும் மதகுரு, ஃபிரான்ஸ் நாட்டவரான திரு. பிக்குவா ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர்கள்.

உலகத் தமிழர் மாநாட்டை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தவர் நெடுமாறன். மாநாட்டின் நோக்கங்களை விளக்கி உரையாற்றியவர் திரு.நடேசன் சத்தியேந்திரா.

பிரபல சட்டத்தரணியான சத்தியேந்திரா திம்புப் பேச்சுவார்த்தையில் ரெலோவின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர்.

உலகத் தமிழர் நாநாட்டில் உரையாற்றிய சத்தியேந்திரா "தமிழீழப் போராட்டத்தின் உண்மையான வழிகாட்டி பிரபாகரன்தான்" என்று குறிப்பிட்டார்.

### 'சர்வதேச இராணுவக்குழு'

தந்தை செல்வாவின் மருமகனும் கனடாவில் பேராசிரியராக இருப்பவருமான டாக்டர் ஜெயரத்தினம் வில்சன் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் நெருங்கிய நண்பர்களாக கருதப்பட்ட இருவரில் ஒருவர் ஜெயரத்தினம் வில்சன். மற்றொருவர் நீலன் திருச்செல்வம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ இவர்கள் இருவரையும் தூண்டி விடுவதாக அப்போது போராளி இயக்கங்கள் குற்றம் சாட்டின.

உலகத் தமிழர் மாநாட்டில் டாக்டர் ஜெ.வில்சன் இந்தியாவுக்கு எதிரான சக்திகள் பற்றிக் குறிப்பிட்டார். ஆனால் அமெரிக் காவை மட்டும் குறிப்பிடாமல் தவிர்த்து விட்டார்.

மாநாட்டில் ஜெ.வில்சன் கூறியதில் முக்கியமான கருத்துக்கள் இவை:

"இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒருபோதும் நீடிக்கப் போவதில்லை. இந்திய- இலங்கை நட்புறவை வளர்ப்பதற்கு பதிலாக இந்தியாவுக்கு எதிரான சக்திகள் ஒன்று திரள இந்த ஒப்பந்தம் வழிவகுத்துவிட்டது. சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளின் அச்சு ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்தியாவுக்கு எதிராக விரைவில் அது வெடிக்கப்போகிறது" என்றார் வில்சன்.

"இந்தியா தனது புதிய கண்டுபிடிப்புக்களான நாசகார ஆயுதங்களை ஈழத் தமிழர்கள்மீது பிரயோகித்துச் சோதனை செய்கிறது. அதனைக் கண்டறிய சர்வதேச இராணுவக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்" என்றும் கூறினார் டாக்டர் வில்சன்.

டாக்டர் வில்சன் கூறிய கருத்துக்களில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் இந்தியாவுக்கு எதிரான சக்திகளை ஒன்று திரளச் செய்கிறது என்பது மிகத் தவறான வியாக்கியானம்.

**இந்திய-இலங்கை ஒப்பந்தம் இலங்கைத் தமிழர் நலனுக்கு உகந்ததா இல்லையா என்பதுதான் பிரச்சனையாக இருந்ததே தவிர, அந்த ஒப்பந்தம் இந்தியாவின் நலனை பாதுகாத்தது. முக்கியமாக அதற்காகவே ஒப்பந்தம் செய்யப்பட்டது என்பதே உண்மையாகும்.**

உலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதிகள் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இந்தியப் படை நடவடிக்கைகளை கண்டித்தனர்.

அமெரிக்கப் பிரதிநிதியான திருமதி கரேன் பார்க்கர் மனித உரிமைகளுக்கான சர்வதேச சட்ட நிபுணர்களில ஒருவர்.

1987ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-19ம் திகதிகளில் பாரிஸ் நகரில் நடைபெற்ற இலங்கை இனப்பிரச்சனை பற்றிய சர்வதேச மாநாட்டுக்கு தலைமை வகித்தவர்.

உலகத் தமிழர் மாநாட்டில் உரையாற்றிய திருமதி கரேன் பார்க்கர் சொன்னது இது: **"பிரபாகரனும் அவருடைய தோழர்களும் போர்க் கலையில் தேர்ந்த நிபுணர்கள் என்பதை நிலைநாட்டிவிட்டனர்."**

### தீர்மானங்கள்

உலகத் தமிழர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இவைதான்;

1. **ஈழத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைவராகப் பிரபாகரனையும், தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப் புலிகளையும் அங்கீகரிப்பது.**
2. **உடனடியாக போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைகளை தொடங்குமாறு இந்திய அரசு, இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகியோருக்கு இம் மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.**
3. **இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணும் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாகத் 'திம்பு' மாநாட்டில் அனைத்துத் தமிழர் பிரதிநிதிகளும் ஒன்றுபட்டு வெளியிட்ட திட்டத்தை ஏற்றுக்கொள்வது.**

நூற்றுக்கு மேற்பட்ட அமைப்புக்கள் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

மிக நெருக்கடியான கால கட்டத்தில் நடைபெற்றமையால் இம் மாநாடு முக்கியத்துவம் வாய்ந்த மாநாடாக அமைந்தது.

### பாரிசில்

1988 மே மாதத்தில் பாரிசில் உள்ள புலிகள் இயக்கத்தினரின் முயற்சியால் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

பிரான்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய மேதின ஊர்வலத்தின் முன்னணியில் இலங்கைத் தமிழர்கள் சென்றனர்.

ஊர்வலத்தில் காணப்பட்ட காட்சிகள் மக்களின் கவனத்தைக் கவரும் வகையில் இருந்தன.

தமிழ்ப் பெண்கள் தலைவிரிகோலமாக அழுதபடி சென்றனர். இந்தியச் சிப்பாய்கள் போல வேடமணிந்தவர்கள் இருவர் இருபுறமும் செல்ல அவர்கள் மத்தியில் ராஜீவ் காந்தி போல வேடமணிந்தவர் சென்றார். அவர் தனது ஒரு கையில் தமிழ்ப் பெண்ணையும், இன்னொரு கையில் துப்பாக்கியையும் பிடித்தபடி சென்றார்.

"இந்திய அமைதிப்படையின் நடவடிக்கை இதுதானா?" என்று ஃபிரான்ஸ் மொழியில் எழுதப்பட்ட பெரிய பதாகை ஒன்றும் ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டது.

உலகெங்கும் இந்தியத் தூதரகங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டமையும் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இந்தியத் தூதரகங்கள் முதன் முதலில் பரவலாக ஆர்ப்பாட்டங்களை சந்தித்ததும் இந்தியப்படை இலங்கை வந்த பின்னர்தான்.

வெளிநாடுகளில் நடைபெற்ற போராட்டங்கள் புலிகள் அமைப்பினருக்கு உற்சாகம் தரத்தக்கவையாக அமைந்தன.

இந்தியாவில் இருந்து வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையும் படகுகளில் ஏற்றி வந்து இந்தியப்படை நடவடிக்கைகள் தொடர்பாக அம்பலப்படுத்தினார்கள் புலிகள்.

### தொடர்ந்த பேச்சுக்கள்

இத்தனைக்கும் மத்தியில் தமிழ்நாட்டில் கிட்டுவுடன் இந்திய 'றோ'உளவு அதிகாரிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தனர்.

வன்னியில் மணலாற்றுக் காட்டுக்குள் விமானத் தாக்குதல்கள் நடத்தப்போகிறோம் என்றும் அவர்கள் மிரட்டினார்கள்.

விமானத்தாக்குதலில் பயன்படுத்தப் போகும் குண்டுகளின் எடையையும் கிட்டுவுக்குக் கூறினார்கள்.

"இவ்வாறான குண்டுகளைப் போட்டால் காட்டுக்குள் இருக்கும் உங்கள் தலைவர் தப்பவே முடியாது." இதுதான் கடைசிச் சந்தர்ப்பம். ஒப்புக்கொண்டபடி மீதிப் பணத்தையும் தருகிறோம். தனிப்பட்ட பாதுகாப்புக்கு உங்கள் இயக்கத் தலைவர்கள் ஆயுதங்களையும் வைத்திருக்கலாம். உங்கள் இயக்கத்துக்கே முன்னுரிமையும் தரப்படும். அதனால் பிரபாகரனிடம் போர்நிறுத்தம் செய்யுமாறு கூறுங்கள். இல்லாவிட்டால் உங்கள் தலைமை அழிவது தவிர்க்க முடியாதது" என்று நாசூக்காக மிரட்டினார்கள்.

கேணல் வர்மா என்பவர் கிட்டுவை அடிக்கடி சந்தித்து பிரபாகரனின் முடிவை அறிந்து சொல்லுமாறு நச்சரித்துக் கொண்டிருந்தார்.

கிட்டுவுக்கும் போர் நிறுத்தம் செய்வது தான் சரி என்ற எண்ணம்தான் இருந்தது.

"இந்திய **அரசுடன்** தற்போது உடன்பட்டுப் போகலாம். குறிப்பிட்டளவு ஆயுதங்களையும் **ஒப்படைக்கலாம்.** பின்னர் மீண்டும் இலங்கை அரசுடன் போரிடும் அவசியம் ஏற்பட்டால் இந்திய **அரசு** இப்போது தரப் போகும் பணத்தை வைத்து ஆயுதம் வாங்கிக் கொள்ளலாம்" என்று கிட்டு நினைத்தார். அதனையே பிரபாவுக்கும் ஜாடை மாடையாகத் தெரியப்படுத்தினார்.

"இந்தியாவை இனியும் நம்பமுடியாது. தாங்கள் செய்வதாகக் கூறும் விடயங்களை எழுத்து மூலமாக இந்தியா தரமுடியுமா?" என்று கிட்டுவிடம் தகவல் அனுப்பினார் பிரபா.

எழுத்துமூலமாக எதனையும் உத்தரவாதப்படுத்த இந்திய உளவுப் பிரிவினரோ, கேணல் வர்மாவோ விரும்பவில்லை.

அதன்பின்னரும் கிட்டு போன்றவர்கள் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டனர். பிரபாவின் மனதையும் மாற்ற முற்பட்டனர்.

புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் சிலரும் கிட்டுவின் கருத்துப்படி செய்தால் பிரபாகரனையும் பாதுகாக்கலாம், இயக்கத்தையும் காப்பாற்றலாம் என்று நினைத்தனர். பிரபாகரனிடமே நேரடியாகப் பேசிப் பார்த்தனர்.

அவர்களிடம் பிரபாகரன் உறுதியான குரலில் தெரிவித்த கருத்து இது:

**"நான் செத்த பின்னர் வேண்டுமானால் யார் வேண்டுமானாலும் இயக்கத்தை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்றுக் கொள்ளட்டும். நான் உயிரோடு இருக்கும் வரை அது நடக்காது."**

புலிகளை பேச்சுமூலமாக சரணடையச் செய்யவே இந்தியா விரும்புகிறது. படைகளை குவித்து வைத்து மிரட்டி பணியவைப்பதே இந்தியாவின் எண்ணம் என்பதுதான் பிரபாகரனின் உறுதியான கருத்தாக இருந்தது.

மணலாற்றுக் காடு இந்தியப் படைகளின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகலாம். முற்றுகைக்கு இலக்காகலாம் என்பது பிரபாகரனுக்கு தெரிந்தே இருந்தது.

அதனால் காட்டுப் போர்முறைக்கு உறுப்பினர்களைத் தயார்படுத்தும் பயிற்சிகள் ஆரம்பமாகின.

புதிய உறுப்பினர்களை இயக்கத்தில் சேர்க்கும் பணிகளும் நடந்து கொண்டிருந்தன. புதிய உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாம்களும் தொடங்கப்பட்டன.

### இயக்கங்களின் உதவி

புலிகள் இயக்கத்தினரை ஒழித்துக்கட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய மூன்று இயக்கங்களின் உறுப்பினர்களைக் களத்தில் இறக்கியது இந்தியப் படை.

இந்தியப் படையினரின் அத்துமீறல்களுக்கு சமமாக தம் மக்களையே கொன்று குவிக்கும் கொலை வேட்டைகளை ஆரம்பித்தன இயக்கங்கள்.

மட்டக்களப்பில் மண்டூர் கிராமத்தில் புலிகள் இயக்க ஆதரவாளராக இருந்தவர் பாக்கியராசா.

**பாக்கியராசாவை ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் பிடித்துக் கொண்டு போனார்கள். மனைவி கத்திக் குழறினார். எட்டி உதைத்துவிட்டு போனார்கள். 1988 ஏப்ரல் 4ம் திகதி பாக்கியராசா சுட்டுக் கொல்லப்பட்டார்.**

தங்கள் இயக்கங்களில் இருந்து ஒதுங்கி இருந்தவர்களை மட்டுமல்ல, தங்களால் நடவடிக்கை எடுத்து விலக்கப்பட்ட ஒழுக்கம் கெட்டவர்களையும் ஆட்தேவைக்காக தம்மோடு இணைத்துக் கொள்ள ஆரம்பித்தன இயக்கங்கள்.

இந்தியப்படை காலத்தில் இயக்கங்களின் கொலை, கொள்ளை மற்றும் ஒழுக்கக்கேடான செயல்கள் தலைவிரித்தாடியமைக்கு அதுவும் ஒரு காரணம் எனலாம்.




உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்; கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் இந்தியப்படையுடன் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இணைந்து வந்தபோது முன்னணியில் காணப்பட்டவர் கிருபா.

கிருபா என்று அழைக்கப்படும் கிருபாகரன் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர்.

காரைதீவில் வங்கி ஒன்றில் பணிபுரிந்த கிருபாகரன் அங்கு பணத்தை கையாடியதாக குற்றம்சாட்டப்பட்டது. இயக்கத் தேவைக்காகவே பணத்தை எடுத்ததாக கிருபா கூறினார். ஆனால் இயக்க உறுப்பினர்களிடம் இருந்து கிருபா பணம் வாங்குவாரே தவிர கொடுப்பது கிடையாது.

அது மட்டுமல்லாமல் தனக்கு தெரிந்த நண்பர் ஒருவரிடம் சில இயந்திரத் துப்பாக்கிகள் இருப்பதாகக் கூறி யாழ் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப் இடம் 50ஆயிரம் ரூபாய் பணம் கேட்டார் கிருபா.

யாழ் தபாலகத்தில் கொள்ளையடித்த பணத்தைக் கொடுத்தனர். பணத்தை வாங்கிச் சென்ற கிருபா பல மாதமாக தொடர்பே கொள்ளவில்லை.

பின்னர் கேட்டபோது கிருபா சொன்ன பதில்;

"வேறு யாரோ முந்திக் கொண்டனர் தோழர்!"

"சரி பணம் எங்கே?"

"ஆயுதம் வாங்கச் செல்ல வாகனம் வாடகைக்குப் பிடித்ததில் செலவாகி விட்டது"

இது நடந்தது 83ல். அப்போது 50ஆயிரம் ரூபா என்பது பெரிய தொகை.

கிருபாவின் இக் கையாடலுக்கு இன்னும் சாட்சியாக இருப்போர் ஈ.பி.டி.பி.யில் ரமேஷ், ஈ.பி.ஆர்.எல்.எஃப் இல் சுபத்திரன். இவர்கள்தான் கிருபாவிடம் பணம் கொடுத்தவர்கள்.

கிருபாவை கட்சியில் இருந்து நீக்குமாறும் மரண தண்டனை விதிக்குமாறும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பில் அன்று இருந்த உளவுப்பிரிவான மக்கள் ஆய்வுப் பிரிவு (MAP) முடிவு செய்தது.

மக்கள் ஆய்வுப் பிரிவின் பொறுப்பாளர் மணி, மக்கள் ஆய்வுப் பிரிவின் தலைமைக்குழு உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் கிருபாவுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்று மத்திய குழுவிடம் கோரினர். ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தின் மட்டக்களப்பு தளபதி சிவாவும் கிருபாவுக்கு மரண தண்டனை வழங்க அனுமதி கோரினார்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் பத்மநாபா அதனை விரும்பவில்லை. கிருபாவை இந்தியாவுக்கு அழைத்துக் கொள்ளலாம். ஊரில் விட்டுவைத்தால் தானே பிரச்சனை என்று இந்தியாவுக்கு அழைத்தனர்.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்க உட்பிரச்சனை காரணமாக கிருபாவை பயன்படுத்தும் தேவை பத்மநாபாவுக்கு ஏற்பட்டது.

தவறான சக்திகள் என்றாலும் தமது நலனுக்கு சாதகமாக இருந்தால் கண்டு கொள்ளாமல் இருக்கும் போக்கு பிரபாகரன் தவிர்ந்த ஏனைய இயக்கத் தலைவர்கள் அனைவரிடமும் இருந்தது.

சரி, கிருபா பற்றி இந்தளவுக்கு கூறக் காரணம் என்ன?

**அந்தக் கிருபாதான் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிதி அமைச்சராக இருந்தார்.** ஜோக் என்று நினைக்காதீர்கள். இவ்வாறான அணுகு முறைகளும் ஏனைய இயக்கங்கள் கெட்டுக் குட்டிச் சுவரானதற்கு ஒரு முக்கிய காரணம்.

இது மட்டுமல்ல புலிகளுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்கும் இடையே கிழக்கில் நடைபெற்ற ஒரு சுவாரசியமான சங்கதியையும் கூறுகிறேன்.

(தொடர்ந்து வரும்)






படிப்பகம்

www.padippakam.com

# சுற்றுலாவும் வெட்டுப் புள்ளியும்

**அலசுவது– இராஜதந்திரி**

யாழ்ப்பாணத்திலிருந்து மாணவர் குழாமொன்று சிலவாரங்களுக்கு முன்னர் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தது.

அம்மாணவர்கள் தென்னிலங்கையில் பல்வேறு இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும் சந்திப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

வடக்கிற்கும், தெற்கிற்குமிடையே புதிய உறவுகளைக் கட்டி எழுப்பும் நோக்கிலேயே யாழ் மாவட்ட மாணவர்களின் தென்னிலங்கைப் பயணம் ஒழுங்குசெய்யப்பட்டதாக அரச தரப்பினர் தெரிவித்தனர்.

புதிய உறவுகளைக் கட்டி எழுப்பவேண்டுமென்று ஆட்சியாளர்கள் ஆர்வங்கொண்டிருக்கலாம். ஆனால் வடக்கே காங்கேசன்துறையிலிருந்து,



தெற்கே மாத்தறைவரை ரயில்பாதை கனகச்சிதமாக இருந்த காலத்தில் நிலவிய உறவு எவ்வாறு காத்திரமானதாக இருந்தது என்பதை ஆட்சியாளர்கள் நன்குணரவேண்டும்.

கல்வி, வியாபாரம், தொழில், தலயாத்திரை என்ற ரீதியில் பன்னெடுங்காலமாகவே வடக்கிற்கும், தெற்கிற்குமிடையே நல்ல உறவு இருந்து வந்தது.

**ஆனால் இந்த அப்பழுக்கற்ற உறவை இன்று துண்டு துண்டாக வெட்டி வடக்கிற்கும், தெற்கிற்குமிடையிலான தொடர்பைப் பாதித்திருப்பது கொடிய இனவாத அரசியலே என்பதை எவரும் மறுத்துவிடமுடியாது.**

எக்காலத்திலும் சாதாரண தமிழ், சிங்கள மக்கள் தாமாகவே பகைகொண்டு, ஒருவரையொருவர் பிடித்துத்தின்ன முன்வரவில்லை.

பெருந்தலைவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள், கல்வியறிவு படைத்தவர்கள் என்று மக்கள் நம்பிக்கை வைத்தவர்களே– கொடிய இனவாதத்தைக் கக்கியதுடன் தெளிந்த தடாகமாக விருந்த இனசௌஜன்யத்தையும், சாக்கடையாக மாற்றிவிட்டுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்திலிருந்து கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்கள் சிலரை கொழும்புக்கு அழைத்து வந்து அரசு வரவேற்பு வழங்கியுள்ளது.

கடந்த பல வருடகாலமாகவே கொடிய யுத்தசூழ்நிலையில் தமது கல்வியை எவ்விதத்திலும் கைவிடாது பரீட்சைகளில் சித்தி பெற்றவர்களே அம்மாணவர்களாவர். அவர்களது விடாமுயற்சி, மனஉறுதி என்பவை நிச்சயம் பாராட்டப்படவேண்டியவையே.

யாழ்ப்பாணத்தவரின் மனந்தளராத தன்மையைப் பறைசாற்றுபவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். குண்டுகள்-வெடிகளினால் அவஸ்த்தைப்பட்டும் பின்னர் இடம்பெயர்ந்து அவலப்பட்டு, கஷ்டங்களை எதிர்நோக்கிய போதிலும் கல்வியில் அபரிமிதமான சிரத்தையை அவர்கள் காண்பித்துள்ளனர்.

இம் மாணவர்களின் வயது வட்டத்தை எடுத்து நோக்கும் பட்சத்தில் அவர்கள் பெரும்பாலும் 20 வயதுக்குட்பட்டவர்களாகவே இருப்பர்.

எனவே வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் கொடிய யுத்தமும் ஏறத்தாழ அவர்களது வயதுவட்டத்தின் காலப்பகுதியைக் கொண்டதாகவே இருக்கின்றது.

அம்மாணவர்களின் தற்போதைய வயதுவரையிலான காலப்பகுதி, வடக்கே ஓர் இருள்சூழ்ந்த சகாப்தத்தையே கொண்டதாக விளங்கிவரக் காணப்படுகின்றது.

கடந்த 17 வருடகாலமாகவே வடக்கு-கிழக்கில் சூடுபிடித்துள்ள யுத்த நிலவரம் பல்வேறு பரிமாணங்களையும் சந்தித்த நிலையில் காரசாரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் 'கந்தக வாடை'யிலேயே துவண்டு இதுவரை ஒரு விடிவைக் காணாது பரிதவித்து நிற்கும் யாழ்குடா நாட்டிலிருந்து மாணவர்களை அழைத்து வந்து வரவேற்பளித்துப் பின்னர், போர்மேகம் முற்றிலுமே நீங்காத அப்பூமிக்கு மீண்டும் அரசு அவர்களை அனுப்பிவைத்துள்ளது.

**சுமார் 20 வருடங்களுக்குமுன்னர் தென்னிலங்கையில் இருந்து எவராவது ஓர் அரசியல்வாதி யாழ்ப்பாணம் சென்றால் அவருக்கு 'முத்துச் சப்பறத்தில்' தமிழ் அரசியல்வாதிகள் வரவேற்பளித்தனர்.**

பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கும்போது, அல்லது ரயில் மூலமாக யாழ்ப்பாணம் வந்து சேரும் போது, சிங்களத் தலைவர்களுக்கு கழுத்து நிறைய மாலைகள் அணிவித்து, மேள–தாள வாத்தியங்களுடனேயே அவர்களை தமிழ் அரசியல்வாதிகள் அழைத்துச் சென்றனர்.

மாலைகள் போடுவதிலும், வடக்கே வரும் தலைவருடன் கூடவே மோட்டார் கார்களில் அமர்ந்து செல்வதிலும்கூட போட்டிகள் ஏற்பட்டு வாக்குவாதங்களையும் யாழ்ப்பாண அரசியல்வாதிகள் நடத்தியிருந்தனர்.

**எனவே தமிழபிமானம், தன்மானம் என்றெல்லாம் குரலெழுப்பிய போதிலும் சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் 'அடிவருடித் தனத்தை'க் களைய முடியாதவர்களாகவே தமிழ் அரசியல்வாதிகள் இருந்து வந்துள்ளனர். இத்தகைய தன்மைகளே தென்னிலங்கையர்களை எம்மவர் குறித்து குறைவாக எடைபோடவும் வாய்ப்பளித்திருந்தன.**

ஆனால் இன்றைய சூழ்நிலைகள் வேறு: அரசியல் ரீதியான பிணக்குகள் முறுக்கேறி ஆயுதப்போராட்டம் சூடுபிடித்த நிலையில் இருக்கின்றது.

இன்றைய சந்ததித் தமிழர்கள் ஒரு கௌரவமான, தனித்துவமான தமது நடவடிக்கைகளைத் தாமே நிர்ணயிக்கவேண்டுமென்பதில் முனைப்பாக இருக்கின்றனர்.

'அடிமேல் அடியடித்தால் மட்டுமே அம்மியும் நகரும்' என்பதைப்போல ஆயுதப்போராட்டம் மூலமாகவே தமது உரிமைகளைப் பெறமுடியும் என்று இன்றைய சந்ததியினர் துணிந்தனர்.

**அந்த ஆயுதப்போராட்டம் கொடுத்த அழுத்தங்களும், நெருக்குதல்களுமே தென்னிலங்கையின் பேரினவாத சக்திகளின் கண்களைத் திறந்ததுடன், தமிழ் மக்களும் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழவேண்டுமென்று தென்னிலங்கையர்களை உணரச் செய்வதாகவுமிருக்கின்றன.**

இந்நிலையில் யாழ்ப்பாண மாணவர்களை வரவேற்பதாகவும், சுற்றுலா நடத்துவதாகவும் செய்திகளிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. யாழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கரிசனம் காட்டுவது போன்றும் ஊக்குவிப்பது போன்றும் தம்பட்டமடிக்கப்பட்டது.

இலங்கையின் மஹியங்கனைப் பகுதியில் வேடுவ இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ் வேடுவ இனத்தவர்களுக்கு திசாஹாமி என்ற முதியவர் தலைவராக இருக்கின்றார்.

நாட்டு நடப்புகளையும், நகரங்களின் வனப்புகளையும் அறியாது காடுகளுக்குள்ளிருக்கும் இந்த வேடுவ இனத்தவர்களையும் அவ்வப்போது காட்டுக்குள்ளிருந்து நகர்ப்புறங்களுக்குக் கூட்டிவருவதுண்டு.

துறைமுகம், விமான நிலையம், பாராளுமன்றம், மற்றும் உயர்ந்து நிற்கும் கட்டிடங்கள், அலுவலகங்களுக்கெல்லாம் இந்த வேடுவ இனத்தவர்களை அரச ஸ்தாபனங்கள் அவ்வப்போது கூட்டிச் சென்று காண்பிப்பதுண்டு.

இதே பாணியிலேயே யாழ்ப்பாணத்தின் கொடிய போர்ச் சூழலிலிருந்த மாணவர்களையும் கொழும்புக்கு அழைத்து வந்து அதன் வனப்புக்கள் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டுள்ளன.

யாழ் மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதாயின், அவர்களது கல்வி வளர்ச்சிக்கான தடைகளை அகற்றுவதே முதற்படியாக இருக்க வேண்டுமே தவிர, சுற்றுலாக்கள் நடத்துவதல்ல.

ஏதோ கல்வியில் அக்கறையில்லாத ஒரு சமூகத்தின் மாணவர்களை தாம் ஊக்கவிப்பது போலவும், தாமும் இவ்வாறு கல்வி கற்றால் இப்படி சுற்றுலா வரலாம் என்று நினைத்து ஏனைய மாணவர்களும் கல்வியில் நாட்டம் காட்டுவர் என்பது போலவும் ஒரு கேலிக்குரிய நிகழ்வாகவே சுற்றுலாவுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் அமைந்துள்ளது.

யாழ் மாணவர்கள் எப்போதுமே கல்வியில் நாட்டம் கொண்டவர்கள். கல்வியை மூலதனமாக வைத்து முன்னேறியவர்கள் யாழ்ப்பாண மக்கள். பொதுவாக தமிழர்கள் என்றாலே கல்வி ரீதியாக கெட்டிக்காரர்கள் என்பதே கருதுகோளாகும். அதனால்தான் தமிழ் மாணவர்களின் கல்விக்கு குழி தோண்டுவதற்காக– 1972ல் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டது. அத் தரப்படுத்தலே தமிழ் இளைஞர்களின் எழுச்சிக்கு வித்திட்டது.

அந்த எழுச்சி கண்ட உத்வேகத்தில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தமிழ் ஈழக் கோரிக்கையை துணிந்து முன்வைத்தனர்.

**ஆயுதப் போராட்ட எழுச்சிக்கும் முதலில் அடித்தளமிட்டவர்கள் தமிழ் மாணவர் பேரவையினரே. கல்விக்கு விதிக்கப்பட்ட தடையே ஒரு பெரும் பிரளயத்துக்கு ஆரம்பமாக அமைந்தது. அது ஒன்றே கல்விக்கும் தமிழ் மாணவர்களுக்கும் இடையேயுள்ள பிணைப்பை உணர்த்தப் போதுமானது.**

எனவே எந்தவொரு அரசாங்கமும் தமிழ் மாணவர்களுக்கு கல்வியின் அவசியத்தை போதிக்கத் தேவையில்லை. அரசாங்கம் செய்யவேண்டியதெல்லாம் கல்வி கற்பதற்கான தடைகளை நீக்குவது மட்டுமே. உயிர் பாதுகாப்புக்கான அச்சம், வெட்டுப்புள்ளி முறை, போன்றவையே யாழ் மாணவர்களின் கல்விக்கு இன்று சவாலாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு மாணவி கிருஷாந்தி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். **சமீபத்தில் கூட யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மாணவன் பிரதீபன் என்பவர் (வயது 16) படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவர் ஒரு புலி என்று படையினர் கூறுகின்றனர். தம் மகனுக்கும் புலிகளுக்கும் ஒரு தொடர்புமில்லை என்று பெற்றோர் கண்ணீரும் கம்பலையுமாக புகார் செய்தும்கூட நியாயமான விசாரணை நடத்தப்படவில்லை.**

மாணவ- மாணவிகள் மத்தியில் அச்சமான சூழ்நிலையை அகற்றுவதில் அக்கறை காட்டப்படாத நிலையே அங்கு காணப்படுகிறது.

**யாழ் மாணவர்களின் கல்விக்கு இன்று வெட்டுப் புள்ளி முறையும் வேட்டு வைத்துக் கொண்டிருக்கிறது.**

யாழ்ப்பாணத்தையும், நாட்டின் தலைநகரான கொழும்பையும் ஒரேமாதிரியான தரத்தில் வைத்தே வெட்டுப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கொழும்பில்- சகல வசதிகள் மத்தியில் கல்வி கற்கும் மாணவனுக்கும் யாழ்ப்பாணத்தில் குப்பிவிளக்கில் படித்து, மரணபயத்துக்கிடையே பரீட்சை எழுதிய மாணவனுக்கும் ஒரே வெட்டுப் புள்ளிதான்.

மிகப் பின்தங்கிய பகுதியாக மாறியுள்ள யாழ்ப்பாணத்தை நாட்டின் தலைநகருக்கு சமமான முன்னேற்றம் உள்ள பகுதியாக கருதி வெட்டுப் புள்ளி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது மிகப்பாரிய தவறாகும். அப்பட்டமாகவே யாழ் மாணவர்களின் கல்விக்கு வேட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

**அது மட்டுமல்ல, கடந்த ஆண்டுகளைவிட 96/97ம் ஆண்டு கல்வியாண்டுக்கான வெட்டுப்புள்ளி யாழ் மாவட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளதுதான் மகா கொடுமையாகும். மிகப் பெரும் இராணுவ நடவடிக்கை யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட இருந்த தருணத்தில், வானில் வட்டமிடும் விமானங்களின் பேரொலிகள் மத்தியில்தான் மாணவர்கள் பரீட்சை எழுதினர். அவர்களுக்கு வெட்டுப் புள்ளி குறைப்பதுதான் நியாயமாகும். ஆனால் அரசாங்கமோ வெட்டுப் புள்ளியை மேலும் உயர்த்தியிருந்தது.**

யாழ் மாணவர்களின் கல்வியில் அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருப்பின் போர்ச் சூழலில் பொலிவிழந்து கிடக்கும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளிகளை குறைந்திருக்க வேண்டும். ஆனால் அரசாங்கமோ ஜனாதிபதியோ அது குறித்து பரீசீலிக்க முன்வரவில்லை.

இவ்வாறான நிலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களை பாராட்டுவது என்பது, இத்தனை தடை போட்டும் தாண்டி முன்னேறிவிட்டார்களே என்று அரசாங்கம், ஆச்சரியப்பட்டிருப்பதின் அடையாளமாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

# தப்புத் தாளங்கள் வழி தவறிய கோலங்கள்

மாணவர் சுற்றுலாக்கள், சலுகைகள், நிவாரணங்கள் மூலமாக யாழ்ப்பாண மக்களுக்கு தேவையானதை கொடுத்துக் கொண்டிருப்பதாக அரசாங்கம் பிரசாரம் செய்ய தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாண மக்கள் விரக்தியில் உள்ளனர், ஆயுதக் கலாசாரத்தை வெறுக்கின்றனர் என்றெல்லாம் பிரசாரம் செய்யும் தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களுக்கு தேவை உரிமைகள் அல்ல சலுகைகள் என்ற கருத்துக்கு உரமூட்டிக் கொண்டிருக்கின்றன.

நீண்டகாலப் போர் காரணமாக யாழ் மக்கள் விரக்தியுற்றுள்ளனர். மாபெரும் வரலாற்று இடம்பெயர்வு அவர்களை ஆட்டம் காணச் செய்துவிட்டது. இடிபாடுகளும், தொழில் வாய்ப்பின்மைகளும் அவர்களை சுருட்டிப் போட்டிருக்கிறது என்பதெல்லாம் உண்மைதான்.

ஆனால் போராட்டம் என்பது மாலை கட்டுவது போன்ற சுலபமான காரியமல்ல. ஏற்றங்களும், இறக்கங்களும், எழுச்சிகளும், வீழ்ச்சிகளும் மறுபடி எழுச்சிகளும் கொண்டது தான் போராட்டமாகும்.

ஆனால் புலிகள் உட்பட சகல தமிழ்க் கட்சிகளுமே போராட்டம் என்பது அடுத்த பொங்கலுக்குள் முடிவடைந்து விடக்கூடிய சுலபமான காரியம் போன்ற எண்ணத்தையே மக்களிடம் ஏற்படுத்தியிருந்தன.

நீண்டகாலப் போராட்டத்திற்கும் அதன் விளைவாக எதிர்ப்படும் காட்டாறுகள், புயல்கள், சுழிகள் என்பவற்றுக்கும் முகம் கொடுக்க தயாரான மனநிலையை மக்களிடம் வளர்க்கத் தவறியிருந்தன.

புலிகளும் யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததை தமிழ் ஈழம் கிடைத்ததற்கு சமன் என்பதுபோலவே சித்தரித்திருந்தனர். இன்னமும் சில முகாம்களே உள்ளன. அவற்றையும் அடித்துவிட்டால் அடுத்தது தமிழீழம் என்பதுபோல மக்கள் நினைக்கத் தொடங்கினார்கள்.

அதன் விளைவுதான் யாழ் குடாநாட்டை புலிகள் கைவிட்ட பின்னர் மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியாகும்.

'யாழ்ப்பாணமே போச்சுதாம், இனி என்ன செய்து என்ன? புலிகளில் வேலை இல்லை' என்ற விரக்தி மனப்போக்கு மக்களிடம் எழுந்தது.

இவ்வாறான நம்பிக்கையீனங்கள் புதியவை அல்ல. யாழ்ப்பாணம் திருநெல்வேலி வங்கியில் கொள்ளை நடந்தவுடன் "உது ஜே.வி.பிக்காரரின் வேலை" என்று சொன்னவர்கள்தான் யாழ் மக்கள். காரணம் அது ஒரு பெரிய நடவடிக்கையாக இருந்தமையால், "எங்கடை பொடியள் உப்பிடிச் செய்ய ஏலுமோ?" என்று நம்பிக்கையீனம் கொள்ளும் மனப்போக்கு இருந்தது.

துரோகிகளான தனிநபர்களை சுடுவது, எங்காவது சிறிய வங்கியில் கொள்ளையடிப்பது, அல்லது தபால் நிலையத்தில் கொள்ளையடிப்பது மட்டுமே தமிழ்ப் பொடியள் செய்யக்கூடிய காரியமாக அன்று கருதப்பட்டது.

"ஆனானப்பட்ட அமிர்தலிங்கத்தாலேயே முடியவில்லையாம், நீங்களோ போராடி கிழிக்கப் போறியள்?" என்று கேலி செய்தவர்கள் மக்கள்.

ஆனால் இன்று; தானாக விழும் விமானத்தையும் 'புலிகள்தான் சுட்டிருப்பர்' என்று (புலிகள் மறுத்தாலும்கூட அதற்கும் ஒரு உட்கருத்துக் கற்பித்து) நினைப்பதும் அதே மக்கள்தான்.

ஆங்கிலப் புலமையும், உயர் குடும்ப பின்னணிகளும் கொண்டவர்கள்தான் தலைவர்களாக இருக்க முடியும் என்று நம்பி, புலமை வியாபாரிகளால் ஏமாற்றப்பட்டவர்கள் எந்த மக்களோ, அதே மக்கள்தான், அந்தப் புலமையாளர்கள் இயக்கங்களால் துரோகிகள் என்று சொல்லப்பட்ட போது ஒத்துக் கொண்டவர்கள். தேர்தல்களில் தோற்கடித்த வர்கள்.

மாபெரும் புலமையாளர், மகா சட்டத்தரணி ஜீ.ஜீ.பொன்னம்பலத்தையே தோற்கடித்து, சி.எக்ஸ்.மார்ட்டின் என்ற பிரபலமில்லாத ஒருவரை வெற்றிபெற வைத்த வாக்காளர்களும் யாழ் மக்கள்தான்.

மக்கள் எப்போதுமே சரியாகவே சிந்திப்பர் என்று சொல்ல முடியாது. மக்கள் நினைப்பதெல்லாம் எப்போதுமே சரியாக இருக்கும் என்று கருத முடியாது. அப்படி இருக்குமானால் வரலாற்றில் மாபெரும் சிந்தனையாளர்கள், புரட்சிகரத் தலைவர்கள், கட்சிகள் என்று மக்களை வழிநடத்த, மக்களை எழுச்சியூட்ட தேவைப்பட்டிருக்காது.

மக்களின் தப்பான எண்ணங்களை களைந்தெறிந்து, அந்த மக்களின் முன் நின்று சரியான பாதையில் அவர்களை அழைத்துச் செல்வதே உண்மையான அரசியலாகும். அரசியல் தலைமையின் பணியாகும்.

யாழ் குடாநாட்டு மக்களிடம் தற்போது ஏற்பட்டுள்ள சோர்வுகளை, சலுகைகளுடன் திருப்தியுறும் மனப்போக்கு மெல்ல தலை காட்டுவதை கண்டறிந்து அவற்றுக்கு அப்பால் மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டியதே தமிழ்க் கட்சிகளுக்குள்ள கடமை.

அதற்காக ஆயுதம் ஏந்தி படையினரை எதிர்க்க வேண்டும் என்றோ, தமிழ் ஈழத்தை கோரவேண்டும் என்றோ அர்த்தமல்ல. இதுவரை இழக்கப்பட்ட பெறுமதியான உயிர்கள், உடமைகள், துன்ப துயரங்களின் பின்னரும் அரைகுறைத் தீர்வுகளை கைநீட்டி வாங்குமளவுக்கு சூழ்நிலை மாறிவிடாமல் தடுப்பதற்காவது மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும்.

போர் வேண்டாம் சமாதானம் தேவை என்பதை தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தட்டும். அதற்காக இதுவரை கால இழப்புக்கள், தியாகங்களை அர்த்தமற்றவை, தேவையற்றவை என்றெல்லாம் சித்தரிக்க முனைவது சரணடைவுப் பாதைக்கே மக்களை கொண்டு செல்லும்.

ஆயுதப் போராட்டத்தில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று கூறுவது, இன்று தமிழ் பேசும் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கே ஆயுதப்போராட்டம் தான் காரணமாக இருந்தது என்பதை மறுப்பதாகிவிடும். தமிழ்க் கட்சிகள் தம்மை நம்பி பலியான நூற்றுக்கணக்கான போராளிகளுக்கே செய்யும் துரோகமாகிவிடும்.

கௌரவமான மக்களாக தமிழ் பேசும் மக்கள் வாழக்கூடிய தீர்வொன்றைக் காணப் போராடும் அரசியல் சக்தியாக தம்மைச் சுற்றி மக்களை திரட்ட தமிழ்க்கட்சிகளால் முடியுமா? முனைவார்களா?

ஆயுதக் கலாசாரத்தில் நம்பிக்கையில்லை என்றால் ஜனநாயக கலாசாரம் மூலம் அரசியல் கோரிக்கைகளை வென்றெடுக்க தமிழ்க் கட்சிகள் வேலைத் திட்டங்களை வகுக்கட்டும்.

அதைவிடுத்து கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு நிதி கேட்டும், நிவாரணம் பெற்றுக் கொடுப்பதில் நாம்தான் முன்நிற்கிறோம் என்றும், முனியப்பர் கோவிலை திறக்க படையினரின் அனுமதி வாங்கியது நானா, நீயா என்றும் தமிழ்க் கட்சிகள் தமக்குள் போட்டியிடுவது கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலை. போராளி இயக்கங்கள் புனர்வாழ்வுக் கட்சிகளாகிவிட்டன.

இப்படியே போனால் பழைய குருடி கதவைத் திறவடி கதைதான் ஆரம்பிக்கும். அதுதான்- தென்னிலங்கைத் தலைவர்களை வரவேற்க தமிழ் கட்சித் தலைவர்கள் முன்னர் தமக்குள் முட்டுப்பட்டனரே, அதே கதைதான் மீண்டும் ஆரம்பமாகும்.

ஆனால் ஒரு கவலை, இப்படியான நிலைக்கு வரவா இத்தனை பலிகொடுப்புக்கள்? பேசாமல் துரையப்பா, போன்றவர்களை தமிழர்களின் தலைவர்களாக இருந்து தொலைக்க விட்டிருக்கலாம். யாழ்ப்பாணத்தை சிங்கப்பூராகவே மாற்றிக்காட்டியிருப்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

கடந்த வாரம்

விக்கிரம் மல்லாவின் ஆட்களுடன் மகேஷ்பூர் கிராமத்துக்குள் புகுந்த பூலான் தேவி தன் முன்னாள் கணவன் புத்திலாலை பழிவாங்கத் துடிக்கிறாள். இனி... அவன் கையை முறிக்கிறாள்.

# கொள்ளை ராணி

பாகம் 02




பூலான்தேவி புத்திலாலின் கையை மடக்கி முறித்தபோது அவன் போட்ட கூக்குரலால் கிராமமே விழித்துக்கொண்டது.

யாருமே வெளியே வரவில்லை யென்றாலும், வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து பயத்தில் நடுங்கிக்கொண்டு தம் வீடுகளுக்குள்ளேயே அடங்கிக் கிடந்தனர்.

புத்திலால் கத்திய கத்தில் பூலானும் வெறி சற்று அடங்கி, ஒரு நிதானத்துக்கு வந்திருந்தாள்.

"கயிறு எடுத்துவா!" என்று தன்னுடன் வந்தவர்களில் ஒருத்தனுக்கு கட்டளையிட்டாள்.

புத்திலால் வீட்டுக்குள் புகுந்ததில் இருந்தே பூலானின் நடவடிக்கைகள் அனைத்தையும் பிரமிப்போடு கவனித்துக் கொண்டிருந்தான் மல்லா.

இப்போது, பூலான் கயிறு எடுத்து வரச் சொல்லி ஆணையிட்டதுகூட ஒரு தலைவி கட்டளையிடுவதுபோலவே இருந்தது.

தான் ஒருவன் அங்கிருப்பதையே பூலான் மறந்து போனாள். தானே தலைவி போல துணிந்து செயற்பட பழகிக்கொண்டாள் என்பதை நினைத்து மல்லா பொறாமைப்படவில்லை: பெருமைப்பட்டான்.

தன் ஆட்களும் பூலானின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு செயற்படுவதையும், பூலானிடத்தில் அவர்களுக்கும்கூட ஒரு மெல்லிய பயம் ஏற்பட்டுவிட்டதையும் மல்லா கவனித்தான்.

கயிறு கொண்டுவந்தவனிடம் "ம்.... இவனைக் கட்டி இழுத்து வாருங்கள்!" என்று உத்தரவிட்டாள் பூலான்.

புத்திலாலோ புயலில் அடிபட்டு வீழ்ந்த மரம்போல உணர்வின்றிக் கிடந்தான். அவன் மனைவி வித்யாதான் ஒப்பாரிவைத்துக் கொண்டிருந்தாள்.

புத்திலால் முகத்தில் தண்ணீர் கொண்டுவந்து கொட்டச் சொன்னாள் பூலான்.

தண்ணீர் முகத்தில் பட்டதும் வலியால் முனகியபடி மெல்ல மெல்லக் கண்களைத் திறந்து, பூலானைப் பார்த்ததும் பயத்தில் கைகூப்பிக்கொண்டு அரை மயக்கத்தில் பேசினான்; "என்னைக் கொன்றுவிடு பூலான். உனக்குச் செய்த பாவத்துக்கு, அநியாயத்துக்குத் தண்டனை அதுதான்!"

பூலான் வெறிவந்தவள்போல் சிரித்தாள்.

"கொல்லத்தானடா போகிறேன். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லப் போகிறேன். துடி! கத்து! மன்றாடு! பின்னர் செத்துப்போ பீடையே! செத்துப்போ! நான்... டேய்... நான் என்னடா செய்தேன் உனக்கு! அரைக்கிழட்டு நாய்க்கு... தூ கையாலாகாத நாயே! உனக்குச் சின்னப் பெண் கேட்குதாடா பீடையே!"

அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தபோதே பூலானுக்குள் கோபம் சுழன்றடித்தது.

அப்படியே பாய்ந்து தன் பூட்ஸ் கால்களால் அவன் முகத்தில் உதைத்தாள்.

மூக்கு உடைபட்டு இரத்தம் வழிய, மறுபடி மயக்கமான புத்திலாலை பூலான் உத்தரவுப்படி வெளியே தெருவுக்கு இழுத்துப் போனார்கள்.

திடீரென்று பூலானின் கால்களில் விழுந்து, கால்களை கட்டிக்கொண்டு கதறத் தொடங்கினாள் வித்யா.

"உனக்கு நாங்கள் செய்ததெல்லாம் கொடுமைதான். இந்தப் பாழாய்போன மனுசன் உன்னை மட்டுமா நாசமாக்கினான்? என்னையும்தானே நாசமாக்கினான். நான் என்ன சுகத்தைக் கண்டேன். அதுக்காக இந்த மனுசனைக் கொன்று போட்டால் எனக்கு என்ன வழி? கண்ட கண்ட நாயெல்லாம் துரத்துமே தாயி. எனக்காக இந்தப் பாவி மனுசனை உயிரோடுவிடு தாயி!" தலையில் அடித்துக் கொண்டு புலம்பினாள்.

பூலான் வித்யாவையே பார்த்தாள். புத்திலால் இல்லாவிட்டால் அவளுக்கு பாதுகாப்பில்லை என்பது மட்டுமே பூலானுக்கு உறுத்தியது.

ஒரு முடிவுக்கு வந்தவளாக தன் காலைப்பிடித்துக்கொண்டிருந்த வித்யாவின் தலையைத் தடவினாள்.

இறைஞ்சும் விழிகளுடன் நிமிர்ந்து பார்த்த வித்யாவிடம்: "உனக்காக இந்த நாயை உயிரோடு விடுகிறேன். ஏன் தெரியுமா? நீயும் நானும் ஒரே ஜாதி. அதுதாண்டி பெண் ஜாதி!" என்றுவிட்டு கடைசியாக ஒருமுறை புத்திலாலின் அருகே சென்று அவன் முகத்தை நோக்கி காறி உமிழ்ந்துவிட்டு விறுவிறுவென்று நடந்து சென்றாள் பூலான்.

பூலான் சென்ற திசையைப் பார்த்து கைகூப்பி கும்பிட்டபடி வித்யா அழுது கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே பூலானின் பின்னால் மல்லாவும், அவன் ஆட்களும் ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருந்தனர்.

மகேஷ்பூர் கிராமத்துக்குள் ஒரு புயல் புகுந்து வீசியடித்துவிட்டுச் சென்றதுபோல இருந்தது பூலான் சென்ற காட்சி.

முகாம் திரும்பிய பின்னர் கிடைத்த தனிமையில் பூலானை இறுகத் தழுவிக் கொண்டு அவளது கன்னம், நெற்றி, கழுத்து, உதடுகள் என்று மாறி மாறி முத்தமழை பொழிந்தான் விக்கிரம் மல்லா.

"நீ தலைவியாகிவிட்டாய் பூலான். தலைவியேதான்! நான் இல்லாமல் போனாலும் நீ இனிமேல் சமாளித்துக்கொள்வாய். இனிநான் சண்டைகளில் சாவது என்றால் சந்தோசமாக நிம்மதியாகச் சாகலாம்.."

என்றவனை மேற்கொண்டு பேசவிடாமல் தன் உதடுகளால் அவன் உதடுகளை மூடிக்கொண்டாள் பூலான்.

மல்லா பூலானின் ஆவேசமான முத்தத்தால் மூச்சுத்திணறிப்போனான். அவன் மேல் உதட்டையும், கீழ் உதட்டையும் தன் நாவால் ஈரப்படுத்தினாள்.

அன்று பூலான் மிகச் சந்தோசமாக இருந்தாள். தன் பழிவாங்கும் படலம் ஆரம்பமான சந்தோசம் அது.

அந்தப் படலம் நிறைவேற தானாகவே முன்வந்து வாய்ப்பு ஏற்படுத்தித்தந்த மல்லாவை சந்தோசப்படுத்த விரும்பினாள் பூலான்.

முத்தமிட்டபடியே அவன் சட்டையை தானே கழற்றினாள். அவன் உடம்பை ஆசை ஆசையாக பார்த்துக்கொண்டு, தன் விரல்களால் அவன் நெஞ்சைத் தடவிக் கொடுத்தாள்.

மல்லாவுக்குள் பூலானின் செயல்களால் சுடர் எழுந்தது. அவள் முதுகை வளைத்து தன்னுடன் இறுக்கிக்கொண்டான்.

பூலான் சந்தோசத்தில் திணறினாள். அவன் இறுக்கம் இதமாயிருக்க, கிறங்கினாள்.

தானும் அவனை இறுக்கிக் கொண்டு அவன் இறுக்கத்தில் எப்போதுமே இருக்கும் வரத்துக்காக துர்க்கையை வேண்டினாள்.

பூலானின் காதுக்குள் மல்லா "நீ ஆண்களை விட பலசாலி," என்றான். அதனால் உற்சாகமான பூலான் தன் பலத்தை அதிகமாக்க, மல்லா "இப்படியே செத்துவிடலாம் போல் இருக்கிறது. என்னைக் கொன்றுவிடு பூலான்," என்றான்.

சட்டென்று திமிறிவிடுபட்ட பூலான், அவன் கன்னங்களில் மாறி மாறி அறைந்தாள். மல்லாவுக்கு வலிக்கவில்லை.

"சொல்லுவியா? இனிமேல் சாவது பற்றி பேசுவியா? சொல்லு, சொல்லடா?" என்றாள்.

"மாட்டேன் தலைவியாரே. சொல்ல மாட்டேன்!" என்று மல்லா கெஞ்சுவதுபோல பாவனை செய்ய, அவனை இழுத்து கட்டிக் கொண்டு "என் ராஜா, என் தெய்வமே!" என்று முனகினாள்.

"இவ்வளவு ஆசையா, என்மீது இவ்வளவு விருப்பமா?" என்றவன் அவளை ஒரு குழந்தைபோல தன் கைகளில் தூக்கிக் கொண்டுபோனான்.

மறுநாள் காலையில் ஸ்ரீராம் அனுப்பிய ஆள் ஒருவன் வந்திருந்தான்.

தங்கள் குடும்பத்தினரைப் பார்க்கச் சென்ற ஸ்ரீராமும், லாலா ராமும் பொலிசாருக்குப் பயந்து ஒளித்திருக்கிறார்கள்.

மறைந்திருக்கும் இடத்தில் இருந்து வெளியே வந்தால் பொலிசாரின் கையில் சிக்க வேண்டியிருக்குமாம்.

அதனால் மல்லாவின் உதவியைக் கேட்டிருந்தார்கள். வந்தவனிடம் பணமும் கொடுத்து, ராஜ்பூர் என்ற இடத்துக்கு அவர்கள் இருவரும் வந்து சேரக்கூடிய வழியையும் சொல்லி அனுப்பினான். "ராஜ்பூரில் நான் காத்திருப்பேன். வரச் சொல்லு!" என்றான்.

அன்று மாலையில் பூலான்தேவி உட்பட தன் கூட்டத்தினர் அனைவரையும் அழைத்து தனது புதிய திட்டம் ஒன்றை அறிவித்தான் மல்லா.

"பாபா மஸ்தக் எம்முடன் இணைந்து செயற்படத் தயாராய் இருக்கிறான். அவன் குழுவும் நம் குழுவும் இணைந்தால் நம்மை யாராலும் அசைக்க முடியாது. பொலிஸ்காரர்களும் நம்மை நெருங்கவே பயப்படுவார்கள். என்ன சொல்கிறீர்கள்? எனக்கு விருப்பம்தான் உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான்.

பாபா மஸ்தக் என்பவன் மற்றொரு கொள்ளைக் கோஷ்டித் தலைவன். சம்பல் பள்ளத்தாக்கில் பிரபலமான கொள்ளைக் கோஷ்டியில் அவனது குழுவும் ஒன்று.

பாபா மஸ்தக் ஒரு முஸ்லிம். ஆனால் இந்து, முஸ்லிம் என்று பேதம் பார்க்காதவன். அவனது குழுவில் இந்துக்களும் இருந்தனர்.

பாபா மஸ்தக் வழிப்பறிகளில் ஈடுபட மாட்டான். கிராமங்களைக் கொள்ளையிட மாட்டான்.

பணக்காரர்களை, பெரும் பண்ணையார்களை கோழியை அமுக்குவதுபோல தூக்கிக் கொண்டு போய்விடுவான்.

அவர்களை பணயம் வைத்து பணம் பெறுவான்.

பாபாவின் வழிமுறை மல்லாவுக்கும் பிடித்திருந்தது. கடத்திப் பணம் பெறும் நடவடிக்கை ஏனைய கொள்ளைகளைவிட பாதுகாப்பானது என்று மல்லா நினைத்தான்.

பூலானுக்கும் பாபாவைப் பற்றி விளக்கமாகச் சொன்னான் மல்லா.

ஸ்ரீராம், லாலா ராம் இருவரும் மறுபடி வரப்போகிறார்கள் என்பதால் பூலான் கவலையோடு இருந்தாள்.

பாபாவுடன் சேருவதால் ஸ்ரீராமின் ஆதிக்கம் ஏற்படாமல் போக வழி இருக்கிறது என்று பூலான் நினைத்தாள்.

அப்படி பூலான் நினைக்க ஒரு காரணமும் இருந்தது. பாபாவுக்கு உயர் சாதித் திமிர் பிடித்தவர்களையும், பண்ணையார்களையும் கண்ணில் காட்டக் கூடாது என்று மல்லா மூலம் அறிந்த சேதி பூலானுக்குத் தெம்பாக இருந்தது.

ஸ்ரீராம், லாலா ராம் இருவருமே உயர் சாதி திமிர் பிடித்த பண்ணையார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

"பாபாவுடன் சேருவது நல்லதுதான். தனித்தனியாக இருப்பதைவிட சேர்ந்திருப்பது பலம்தானே!" என்று பூலான் சொன்னதை அனைவருமே மறுபேச்சில்லாமல் ஆதரித்தனர்.

அன்றிரவே பாபாவைச் சந்திக்கப் புறப்பட்ட மல்லாவுடன் பூலானும் மேலும் இருவரும் சென்றனர்.

பூலானின் மற்றொரு பழக்கமும் கொள்ளைக் கோஷ்டியினருக்கும் மல்லாவுக்கும் பிடித்திருந்தது.

நல்ல சகுனம் எது? கெட்ட சகுனம் எது? என்று கண்டு பிடித்துச் சொல்வது பூலான்தான். தனது தாய் மூலாவிடம் பூலான் கற்றுக் கொண்டது அது.

பாபாவைச் சந்திக்கவும் பூலான் சொன்ன நல்ல சகுனத்தில்தான் புறப்பட்டனர். நல்ல சகுன நேரம் வருவதற்காகவே நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருந்தது.

தன் சொல்லுக்காக அவர்கள் கட்டுப்பட்டு இருப்பதும், தன் சகுனம் பார்க்கும் திறமையில் அனைவரும் நம்பிக்கை வைத்திருப்பதும் பூலானுக்குப் பிடிபடாத பெருமையாக இருந்தது.

பாபா இருக்கும் இடத்துக்குச் செல்வதற்கு இரண்டு நாட்கள் வேண்டியிருந்தன.

மல்லாவைக் கண்டதும் பாபா தன் இரு கைகளையும் விரித்தபடி அவனை நோக்கி வந்தார்.

பாபா உயர்ந்த- திடகாத்திரமான தேகத்துடன், நீண்ட கைகளுடன், யாரையும் ஊடுருவிப் பார்க்கும் கூரிய விழிகளுடன் நடந்துவந்த காட்சியே பூலானுக்கு மலைப்பாக இருந்தது.

பார்ப்பவர்கள் யாரும் அவரை கொள்ளைக் கூட்டத் தலைவர் என்று நம்ப மாட்டார்கள். தோளில் புரளும் அளவுக்கு நீண்ட முடியுடன், நீளமான அங்கியுடன் அவரைப் பார்ப்பவர்கள் துறவி என்றும் நினைக்கலாம். இடைப்பட்டியில் தொங்கிய அந்த கைத்துப்பாக்கி பாபாவின் தோற்றத்தோடு ஒட்டாமல் தனியாகத் தெரிந்தது.

"மல்லாஜி வா நண்பா! வா!" மல்லாவை தன் இரு கைகளாலும் வாரியணைத்து கட்டிக்கொண்டார் பாபா.

பாபாவின் கரங்களுக்குள் சிறு பையன் போலத் தெரிந்தான் மல்லா. பூலானுக்குச் சிரிப்பாக இருந்தது. உதடுவரை வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாலும் அது சின்னப் புன்னகையாக மலர்ந்திருந்தது.

அதே நொடியில் பூலான்மீது பட்ட பாபாவின் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன.

அடுத்து நடந்தவையும் பாபா வீசிய கேள்வியும் பூலானின் நம்பிக்கைகளைப் பொடியாக்குவதுபோல அமைந்தன.

**(தொடர்ந்து வரும்)**

## சிறைக்குள் ஒரு விபரீதம்! உள்ளே இருந்த கில்லாடிக் கைதி



துருக்கியில் நடைபெற்ற ஒரு சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

வேறொன்றுமில்லை; பாதுகாப்பான சிறைக்குள் பத்திரமாகப் பூட்டி வைத்த பெண் கைதி ஒருவர் கர்ப்பமாகிவிட்டார்.

பெண் கைதிகளும், ஆண் கைதிகளும் வேறு வேறான பகுதிகளில்தான் சிறை வைக்கப்படுவர். ஆண் கைதிகளும், பெண் கைதிகளும் சந்திக்கவே வாய்ப்பில்லை. பெண்களுக்கான சிறைக்காவலர்களும் பெண்கள்தான்.

இத்தனை கட்டுப்பாடு இருந்தும், பாதுகாப்பு இருந்தும் பெண் கைதி ஒருவர் கர்ப்பமாவது என்றால் கலக்கமான விவகாரம்தானே?

பதறிப்போன சிறை நிர்வாகம் கண்களில் விளக்கெண்ணெய்விடாத குறையாக விழிப்போடிருந்து விசாரணை நடத்தியது.

வெளிப்பட்டது விவகாரம். மாட்டிக் கொண்டது பட்சி.

பெண்ணாக நடித்த ஆண் ஒருவர் கொலைக் குற்றம் செய்தார். அவர் ஆண் என்பது தெரியாமலேயே விசாரணை நடந்து, 15 வருட கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

சிறையிலும் குட்டு வெளிப்படவில்லை. பெண் கைதிகளுடன் போட்டுப் பூட்டி விட்டார்கள். தனது சிறை அறையில் இருந்த பெண் கைதிகளை கணக்குப் பண்ணத் தொடங்கினார் உகுர் கிலிக்- அதுதான் அவர் பெயர்.

அவருடன் இருந்த பெண் கைதிகளும் நீண்டகால சிறைவாசம் அனுபவிக்கும் கைதிகள்தான். அதனால், இருக்கும் காலத்தை ஜாலியாகக் கழிக்க நினைத்தவர்கள். உகுர் கிலிக், ஆண் கைதி என்று தெரிந்தும் அவருக்கு இடம்கொடுத்தனராம்.

ஐந்து பெண் கைதிகளுடன் உறவு வைத்திருந்தாராம் உகுர் கிலிக். அவர்களில் ஒரு பெண் கைதி மட்டுமே கர்ப்பமானதால் தான் விஷயம் விபரீதமாகி, விசாரணைக்குச் சென்று, உண்மை அம்பலமாகிவிட்டது. இல்லாவிட்டால் தொடர்ந்து ஜமாய்த்திருப்பார் உகுர் கிலிக்.

## கல கல குடும்பம்

இந்திய மொடல் அழகிகளுக்கு மகாமகா சந்தோசம். மொடலிங் செய்வதை இழிவாக இனிமேல் யாரும் நோக்கமாட்டார்கள் என்பதுதான் பெருமிதத்துக்கு காரணம்.

அப்படி என்ன திருப்பம் ஏற்பட்டது? இந்தியப் பிரதமரின் மருமகளே ஒரு பிரபல மொடல்தான் என்று இனிமேல் நெத்தியடியாகக் கூறலாம். மொடலிங் செய்யும் பெண்களும் கௌரவமான குடும்பப் பெண்கள்தான் என்று மரியாதையும் கிடைக்கும்.



மொடல் மருமகள்

இந்தியப் பிரதமர் குஜ்ராலின் சகோதரரின் மகனது மனைவியான ஃபெரோஸ் குஜ்ரால் இந்தியாவின் பிரபல மொடல்களில் ஒருவர். அதுதான் இந்திய மொடல் அழகிகளின் சந்தோசத்துக்கு காரணம்.

இந்தியப் பிரதமர் குஜ்ராலின் மனைவி ஷீலா ஒரு பெண்கவிஞர். குஜ்ராலின் சகோதரர் சதீஷ் குஜ்ரால் பிரபலமான ஓவியர்.

'பழமையில் இருந்து விடுபட்ட கல கல குடும்பம் எமது குடும்பம்' என்று குஜ்ரால் குடும்பத்தினர் சொல்வது நூறுவீதம் உண்மைதான்.

## வித்தியாசமான பிறந்தநாள்



உலகில் தரம்வாய்ந்த புகையிலை கோஹிபா. கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோ ஒரு சுருட்டுப்பிரியர். அதனால் கோஹிபா புகையிலையின் 30வது ஆண்டு பிறந்தின விழாவை நடத்தி புகையிலைக்கு மரியாதை செய்திருக்கிறார் காஸ்ட்ரோ. கியூபாவின் பிரதான உற்பத்திப் பொருட்களில் புகையிலையும் முக்கியமானது.

பிறந்தநாள் விழாவில் முக்கிய சங்கதியாக, ஹொலிவூட் நடிகைகளும் கலந்து கொண்டனர். அழகின் ரசிகரான காஸ்ட்ரோ கொடுத்த சுருட்டுக்களை புகைத்துத் தள்ளினார்கள் நடிகைகள். இரும்பு மனிதரான காஸ்ட்ரோ நடிகைகளின் இடைகளை வளைத்தபடி நடனமும் ஆடினார்.

அமெரிக்காவோடு கியூபா மல்லுக்கு நின்றாலும் அமெரிக்க நடிகைகளை வரவேற்றிருக்கிறார் காஸ்ட்ரோ. அழகுக்கு மரியாதை.

## 'எய்ட்ஸ்' பரவாயில்லை

இந்தியாவில் மும்பாய் உயர்நீதிமன்றம் ஒருவழக்கில் திருப்பமான தீர்ப்பை வழங்கியிருக்கிறது.



அரச நிறுவனம் ஒன்றில் வேலை செய்த ஒருவர் திடீரென்று வேலை நீக்கம் செய்யப்பட்டார். அவரது உடலில் எய்ட்ஸ் இருந்ததுதான் காரணம்.

இது நடந்தது 1994ல். வேலை நீக்கம் செல்லாது என்று உயர் நீதிமன்றத்தில் அவர் வழக்குத் தொடுத்தார்.

"இது காலப்போக்கில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் நோய். அதனால் வேலை நீக்கம் செய்தது சரி" என்று அரச தரப்பு வாதிட்டது.

"எயிட்ஸ் நோய் உள்ளவர் அதன் அறிகுறியே தெரியாமல் 18 வருடகாலம் வாழமுடியும். எனவே இவரை நீக்கியது செல்லவே செல்லாது" என்று எய்ட்ஸ் நோயாளி சார்பில் வாதிட்டனர்.

இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த உயர் நீதிமன்றம் "வேலை நீக்கம் செல்லாது என்று உத்தரவிட்டது. அத்தோடு அவரது சம்பளப் பாக்கியாக 80 ஆயிரம் ரூபாயையும் கொடுக்குமாறும்" தனது சமீபத்திய தீர்ப்பில் கூறிவிட்டது.

எய்ட்ஸ் நோய் காரணமாக நீக்கப்பட்ட ஊழியரின் பெயரையும், வேலை நீக்கம் செய்த நிறுவனத்தின் பெயரையும் வெளியிடக்கூடாது என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## எச்சரிக்கைத் தகவல்



எய்ட்ஸ் நோயாளி ஒருத்தன் பல பெண்களை ஏமாற்றி 'எய்ட்ஸ்' பரப்பிய செய்தி ஒன்றை முன்னர் படித்திருப்பீர்கள். தற்போது அந்தக் கயவன்மீது விசாரணை நடந்துவருகிறது.

இப்போது மற்றொரு செய்தி. டார்னல் மெக்கின் என்றொரு எய்ட்ஸ் நோயாளி. பார்வைக்கு சூப்பராக இருப்பானாம். தனக்கு 'எய்ட்ஸ்' இருப்பது தெரிந்ததும் வக்கிர எண்ணத்தோடு வேட்டையில் இறங்கினான்.

தினமும் பெண்கள் பாடசாலைகள் முன்பாக நின்று வலைவிரிப்பானாம். வலையில் மாட்டிய மாணவிகளை அப்படியே கூட்டிப்போய் 'எய்ட்ஸ்'தானம் செய்துவிடுவான்.

இப்படியே இவன் 'எய்ட்ஸ்' பரப்பிய மாணவிகளின் எண்ணிக்கை 61 என்பது வெளிப்படையாகத் தெரிந்த புள்ளி விபரம்.

கடந்த ஜனவரி 15ம் திகதி ஒரு பெண்ணை நைசாகப் பேசி காரில் அழைத்துச் சென்று கொண்டிருந்தான். திடீரென்று அவனது காரை மறித்தான் ஒரு வாலிபன். காரை நிறுத்தியதும் டார்னல் மெக்கினை சுட்டுத் தள்ளிவிட்டு ஓடிவிட்டான் அந்த வாலிபன்.

சுட்டவனுக்கு நன்றி. பல இளம் பெண்கள் காப்பாற்றப்பட்டார்கள். இப்படி இன்னும் எத்தனை பேர் புறப்பட்டிருக்கிறார்களோ? இளம் பெண்கள் ஜாக்கிரதை!



படிப்பகம்

www.padippakam.com

# பற்றரியில் உயிர்





↑ பற்றரிகளால் கார் இயங்கலாம். வானொலி இயங்கலாம். ஆனால் மனிதனும் இயங்கலாம் என்பது புதிய ஆச்சரியச் செய்தி. மருத்துவ உலக அசத்தல் முன்னேற்றம் இது.

படத்தில் காணப்படுகிறார் பாருங்கள், இவரது பெயர் திரு .வில்லியம் லோ. பற்றரி மட்டும் இல்லையானால் இவர் செத்து புதைத்த இடத்தில் புல்லும் முளைத்திருக்கும்.

மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னரே வில்லியம் லோவுக்கு பற்றரி பொருத்தப்பட்டுவிட்டது. சிறு பற்றரிகள் மூலம் மனிதனை இயங்கச் செய்யும் சோதனை முயற்சியாக இரண்டு நோயாளர்களுக்கு பற்றரி பொருத்தப்பட்டது. அதில் ஒருவர் வில்லியம் லோ. மற்றவர் பெயர் போங் சியா சோங். அவருக்கு 74 வயது. பற்றரி உபயத்தில் குடு குடுவென்று இயங்கிக்கொண்டிருக்கிறார். இந்த சிகிச்சைகள் நடந்தது சிங்கப்பூரில். மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் டாக்டர் வூடார்சிங் தான் இச் சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்த புண்ணியவான்.

அப்படி ஒன்றும் பெரிதல்ல சின்ன பற்றரிதான் உள்ளங்கையில் பாதியிருக்கும். விலைதான் அதிகம், 40 ஆயிரம் வெள்ளிகள்! நம்மூர் மதிப்பில் 16 இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாய்கள். ஒரு முறை பொருத்தினால் ஆறு ஆண்டுகளுக்கு மின் சக்தி வழங்கும் ஆற்றல் இருக்குமாம்.

உடலின் ஒரு பகுதியில் பொருத்தப்படும் சிறு பற்றரி இதயத்தைச் சுற்றியிருக்கும் நரம்புகளுடன் இணைக்கப்படுகிறது. மின் சக்தி பெறும் நரம்புகள் இதயத்தின் இரத்த ஓட்டத்திற்கு உதவுகிறது. இதயத்தின் தசைகள் பலவீனமானவர்களுக்குத்தான் இந்தச் சிகிச்சை.

வில்லியம் லோவுக்கு ஆறுமாதகாலம்தான் உயிர்வாழும் உத்தரவாதம் கொடுக்கப்பட்டதாம். ஆனால் பற்றரி பொருத்தப்பட்டதால் இப்போதும் சீவிக்கிறார். கடந்த மார்ச் மாதம் பற்றரியின் சக்தி குறைந்துவிட்டது. அதனால் புதிய பற்றரி பொருத்தியிருக்கிறார்.

"என்னால் நடக்க முடிகிறது, எளிதாகச் சுவாசிக்க முடிகிறது. நான்றாகச் சாப்பிடவும் முடிகிறது" என்கிறார் இந்த பற்றரி மனிதர். அதிசயம் ஆனால் உண்மை என்பது இதுதான்.

## தகவல் பெட்டி

## வளையும் அரும்பு

↑ சித்திரமும் கைப்பழக்கம் என்பார்கள். பயிற்சியும் முயற்சியும் இருந்தால் சாதிக்கலாம். அதற்கு சான்று இந்த துடியான சின்னப் பெண். கரும்பைக் கூட ஒரு அளவுக்குமேல் வளைத்தால் உடைந்துவிடும், இந்த அரும்பு தனது கால்களை என்னமாய் வளைக்கிறது?! அரும்பின் வயது ஆக 11 மட்டுமே. சீனாவின் றெனான் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமி இவள். உடற்பயிற்சி சாகச விளையாட்டிற்காக பயிற்சி செய்கிறாள். ஐந்தில் வளைந்தால்தான் ஐம்பதிலும் வளையலாம்.

↓ எடை ஏறிக்கொண்டிருப்போருக்கு ஒரு பாரமான சோகச் செய்தி இது.

படத்திலே பாருங்கள், அண்ணன்களுக்கெல்லாம் அண்ணரான ஒரு அண்ணாச்சியை தம் பிடித்துத் தூக்குகிறார்கள் அல்லவா.

அண்ணாச்சியின் எடை 350 கிலோ. பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர். அப்படியே காற்றாட நடந்து போயிருக்கிறார். பூமி தாங்காமல் இவர் கால்வைத்த இடம் உடைந்து பொத்துக்கொண்டு போனதாம். நிலத்துக்குள் இருந்த கழிவுத் தொட்டிக்கு மேலே இருந்த தரை மூடியில்தான் அண்ணாச்சி கால்வைத்திருக்கிறார். அதனால் மூடி பொத்துக் கொண்டதும் கழிவுத் தொட்டிக்குள் தூக்கிக் கொண்டார்.

யாராலும் அண்ணாச்சியை வெளியே தூக்கவே முடியாததால் தீயணைப்புப் படையினருக்கு தகவல் சொல்ல, அவர்கள்தான் வந்து தூக்கிப்போனார்கள்.

அண்ணாச்சியின் பெயர் அல்டைன். வயது 33. மருத்துவமனையில் துரித சிகிச்சை அளிக்கப்பட்டும் அண்ணாச்சியைக் காப்பாற்ற முடியவில்லை என்பதுதான் சோகம். மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் உயிர் பிரிந்தது.

# தாங்காது பூமி!



# பெரிதிலும் பெரிது

→ படத்தில் இருப்பது காண்டாமிருகம். தாயும் சேயும். இதிலே உள்ள விசேஷம் யாதெனில், அந்தக் காண்டாமிருகக் குட்டியைப் பாருங்கள், அதுதான் ஐரோப்பாவிலே பிறந்த காண்டாமிருகக்குட்டிகளில் மிகப் பெரியது. பிறந்த ஆறு மாதத்தில் இப்படி புஷ்டியாக கொழு கொழுவென்று இருக்கிறது.



மேலதிகமாக காண்டாமிருகம் பற்றி சில தகவல்கள்: உலகில் இன்றுள்ள மிருகங்களில் யானைக்கு அடுத்த இடத்தில் உள்ள பெரிய மிருகம் காண்டாமிருகம்தான்.

இதன் மூக்குப் பெரியது. கால்கள் குள்ளமானது. உடல் உருண்டு திரண்டு குண்டானது. தோல்கள் மிகமிகத் தடிப்பமாக மடிப்புக்களுடன் காணப்படும். துப்பாக்கிச் சன்னத்தால் கூடத் துளைக்கப்பட முடியாத தடித்த தோல்கள்.

மூக்கின் மேல் இரண்டு கொம்புகள் (ஒன்று பெரியது மற்றது சிறிது) உண்டு. இக் கொம்புகள் மயிர் மற்றும் நகச் சேர்வையால் ஆனது. நல்ல வன்மையானது. சண்டையின்போது இக் கொம்புகளால் எதிரியைத் தாக்கும்.

இக் கொம்பில் மருத்துவக் குணாம்சம் இருப்பதால் காண்டாமிருகம் வேண்டையாடப்பட்டு அருகி வருகின்றது.

சில காலங்களில் இவற்றை நாங்கள் படங்களில் மட்டுமே காண நேரலாம். ஐரோப்பாவில் இதனைப் பாதுகாத்து வருகின்றனர். காண்டாமிருகங்களில் ஐந்து ரகங்கள் இருக்கின்றன. எழுந்து நின்றால் புஷ்டியான காண்டாமிருகம் ஒன்றின் உயரம் இரண்டு மீற்றர். எடை சுமார் 3 மெற்றிக் தொன். (3000 கிலோ)

# பொதியில் ஆபத்து!

→ நம்நாட்டில் பொதிகளைக் கண்டால் குண்டு ஞாபகம்தான் வரும். அதனால் பொதிகளைக் கண்டால் யாரும் நெருங்குவதில்லை. பெல்ஜியத்திலும் ஒரு பொதி விபரீதம். பாலம் ஒன்றின் கீழே கிடந்த 10 பொதிகளைப் பொலிசார் கைப்பற்றி பிரித்துப் பார்த்தார்களாம். அடித்தது முடை நாற்றம். பொதிகளுக்குள் கிடந்தவை எல்லாம் மனித உறுப்புக்கள். மூன்று பெண்களை கொலை செய்து நிதானமாக காய்கறி நறுக்குவதுபோல உறுப்புக்களை நறுக் நறுக் பண்ணி போட்டிருந்ததாம். பதறிப்போன பொலிசார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். பொதி என்றாலே பிரச்சனைதான் போலிருக்கிறது.






படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

*'துரோக்கால்' என்ற இந்திப் படத்தைத் தமிழில் 'குருதிப்புனல்' என்று உருவாக்கிய கமல், அண்மையில் இந்தியில் வெற்றி பெற்ற 'மாச்சீஸ்' என்ற படத்தைத் தமிழில் தயாரிக்கும் உரிமையை வாங்கியுள்ளார்.

*பஞ்சு அருணாசலம் தயாரிக்கும் 'சபாஷ் பாண்டியா' படத்தை கேயார் இயக்குகிறார். இதில் பாண்டியராஜன்-ரோஜா முதன் முறையாக ஜோடி சேர்ந்து நடிக்கிறார்கள்.

*கார்த்திக்-நக்மா நடிக்கும் 'பிஸ்தா' படத்தில் நக்மாவுக்கு தகப்பனாக நடிப்பவர் மௌலி. இந்த வேடத்தில் முதலில் நடிக்க இருந்தவர் யார் தெரியுமா? விசு.

*'ஊமை விழிகள்' புகழ் ஆர்.அரவிந்தராஜ் இயக்கத்தில், விஜயகாந்தி தமிழில் 'நியூஸ்' என்ற படத்தில் நடிப்பதாக இருந்தார். இப்போது என்ன நடந்ததோ தெரியவில்லை அந்தப் படத்தை நிறுத்தி விட்டார்கள்.

*'நந்தினி', 'பிஸ்தா' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் 'பிரமிட்' நடராஜன், அடுத்து பிரபு கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இந்தப் படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்குவார்.

*தமிழில் 'காதல் கிராமம்', 'இனி எல்லாம் சுகமே' ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் லக்ஷி, மலையாளத்தில் 'இலவங்கோடுதேசம்' என்ற படத்தில் இரண்டை வேடத்தில் நடித்துவருகிறார்.

*பொங்கலுக்கு வெளியான மணிரத்தினத்தின் 'இருவர்' படத்திற்கு முதலில் வைத்த பெயர் 'ஆனந்தம்'. இந்தப் பெயரைத் தற்போது கார்த்திக் நடிக்கும் புதிய படமொன்றுக்கு வைத்துள்ளார்கள்.

*இந்தியில் வெளியான 'தேரே மேரே சப்னே' படத்தில் கதாநாயகிகளாக அறிமுகமானவர்கள் சிம்ரான், ப்ரியா கில். இவர்கள் இருவரும் தற்போது தமிழில் நடித்து வருகிறார்கள்.

*காதலைக் கருவாகக் கொண்ட புதிய படமொன்றுக்கு 'சார்மினார்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை மணிரத்னத்திடம் உதவியாளராக இருந்த ரவீந்திரா என்பவர் இயக்குகிறார்.

*பாரதிராஜாவின் 'சிறகுகள் முறிவதில்லை' படத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கவிருந்த வேடத்தில் இப்போது நடித்து வருகிறார் ரூபன்ராஜ். இவர் முன்னாள் நடிகை மாதவியின் சகோதரர்.

தமிழ் சினிமா உலகின் பிரபல நடிகர்கள், நடிகைகள் சிலரின் மறுபக்க தகவல்கள். தமிழக பிரபல பத்திரிகை ஒன்றில் மித்ரவாசு என்பவரா எழுதப்பட்டதில் தொகுக்கப்பட்டது. பிற்குறிப்பு மட்டும் நாம்.



விக்னேஷ்-தேவயானி
படம்:-காதலி

## கதாநாயகி கட்

என்றாலும் ரொம்பத்தான் தைரியம். அதாகப் பட்டது, கதாநாயகியே இல்லாமல் படம் எடுக்கத் துணிந்திருக்கிறது ஒரு நிறுவனம். கதாநாயகிக்கு போதிய துணியில்லாமல் எடுக்கத் துணிவதுதான் வசூலுக்கு வழி என்று நினைக்காமல், கதாநாயகியே இல்லாமல் படமெடுப்பது என்றால்?

கதாநாயகி இல்லாத இப் படத்தில் கதாநாயகனாக நடிப்பவர் சாய்குமார். ஸ்ரீசாய்பாபா மூவிஸ் என்ற நிறுவனம்தான் படத்தை தயாரிக்கிறது. மாணவர் பிரச்சனையை மையமாகக் கொண்ட படம்.

எச்.எஸ். ராஜசேகர் இயக்குகிறார். இசை: சாது கோகிலா. படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'தைரியம்.' பொருத்தமான பெயர்தான்.



ஸ்வாதி

## முகப்பில்

| அஞ்சு அரவிந்த் | அஜித்குமார்-ஏஞ்சலா |
|---|---|
| படம்:ஆசைத்தம்பி | படம்:பகைவன் |

## சுகமான குளியல்

'இனியெல்லாம் சுகமே' படத்தில் சுகமான சங்கதிகள் நிறைய இருக்கின்றன. சங்கவி இருக்கிறார் என்றாலே கவர்ச்சி வாசனை கதிகலக்கும் என்பது சொல்லாமல் தெரியும் தானே!

அது என்னவோ தெரியாது சங்கவியை குளிக்க வைப்பதில் இயக்குநர்களுக்கு ஒரு அலாதி ஆசை. 'இனியெல்லாம் சுகமே' படத்தில் சங்கவியின் குளியல் காட்சியை மட்டும் விடிய விடிய கலாரசனையுடன் படமாக்கினாராம் இயக்குநர். குளித்தது சங்கவி, அதுவும் மெல்லிய ஆடையுடன் என்பதால் கமராக்காரரும் கண்சோராமல் களைப்பில்லாமல் படமாக்கினாராம்.

விடிய விடிய படமாக்கி முடித்தபோது ஐந்து லொறித் தண்ணீர் விரயமாகியிருந்தது. ஒரு லொறித் தண்ணீரில் படமாக்கக்கூடிய காட்சி என்றாலும் இயக்குநர் அத்தனை சுலபத்தில் திருப்தி அடையவில்லையாம். அதுதான் மேலதிகமாக நாலு லொறித் தண்ணீர் விரயம். இந்தப் பாடல் காட்சிக்காகவே படம் ஓடும் என்கிறார் தயாரிப்பாளர்.

'இனியெல்லாம் சுகமே' படத்தில் இன்னொரு நாயகியும் இருக்கிறார். அவர் லக்ஷி. அப்பாசுக்கு இரு நாயகிகளை சமாளிக்கும் சவாலான பாத்திரம். ஜோருதான் போங்கள்.

## வந்தது புது வரவு

மும்பாயிலிருந்து தமிழுக்கு இறக்குமதியாகும் மற்றொரு நடிகை ஸ்வாதி. 'தலால்' என்ற இந்திப்படத்தில் முக்கிய வேடத்தில் நடித்தவர் ஸ்வாதி.

ஸ்வாதியின் சிக்கென்ற உடம்பைக்கண்டதும் தமிழ்ப் பட தயாரிப்பாளர் ஒருவர் அவரை சென்னைக்கு இறக்குமதி செய்துவிட்டார். சுவாதி என்ற பெயரில் ஏற்கனவே தமிழில் ஒரு நடிகை இருப்பதால் இவரது பெயரை மாற்றப்போகிறார்கள்.

அப்பாஸின் ஜோடியாக நடிக்கவைக்கப் போகிறார்களாம். ஸ்வாதிக்கு தமிழ் கற்றுக் கொள்ள ஆசையாம். நல்ல உபாத்தியாயர் தேடுகிறார். மற்றொரு விஷயம்: "தேவைப்பட்டால் முத்தக்காட்சியில் நடிக்கலாம் தப்பில்லை!" என்று வெட்கப் பட்டுக் கொண்டே சொல்லுகிறாராம் ஸ்வாதி.



## விருது பெற்ற மஞ்சு

மலையாளத்தில் இருந்து அழகான பெண்குட்டி ஒன்று தமிழுக்கு வருகிறது. மலையாளத்தில் பெண்குட்டி என்றால் பெண்பிள்ளை என்று தமிழில் அர்த்தம். பெண்குட்டியின் பெயர் மஞ்சுவாரியார். அனுபவம் உள்ளவர். உதாரணம்: கேரள அரசிடம் சிறந்த நடிகைக்கான விருது பெற்றவர்.

இந்தப் பெண்குட்டியுடன் ஜோடி சேரும் ஆண்குட்டி பிரபு. படத்தின் பெயர் 'அன்புள்ள மன்னவனே.' படத்தை இயக்குபவர் சீமான். இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து.



கலாரஞ்சனி-குஷ்பு-சங்கீதா
படம்:-தாலி புதுசு

## "எல்லாமே போயே போச்!"

முன்னணி ஹீரோ என்ற பெயர் இல்லாவிட்டாலும் பின்னணிக்கு தள்ளப்படாமல் கதாநாயகனாக நிலைத்திருப்பவர் ராம்கி. அவரது பெரும் கவலை ஒன்றை பகிர்ந்து கொள்கிறார். கண்ணீர் விடத் தயார் நிலையில் தொடர்ந்து படிக்கவும்.

"காதல் காட்சிகளிலோ, படுக்கையறை சீன்களிலோ நெருங்கி நடிக்கும்போது எந்தவிதமான உணர்ச்சிக்கும் இடம் கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட காட்சியில் நடிக்கும்போது முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் சுற்றிலும் நிற்பார்கள். இந்தச் சூழ்நிலையில் எப்படி மூட் வரும்?

நான் காலேஜில் படிக்கிறபோது பஸ்ஸில் போவேன். அப்போது ஒரு பெண்ணின் தாவணி என்மீது பட்டால் ஏற்படும் சந்தோஷம்கூட இப்போது கிடைப்பதில்லை. எல்லா உணர்ச்சிகளும் போயே போயாச்சு. இயக்குநர் ரெடி என்றால் நடிகையைக் கட்டிப் பிடிக்க வேண்டும். 'கட்' என்றால் விலகிவிட வேண்டும். இப்படியே எல்லாவற்றையும் செயற்கையாக செய்து பழகிப் போய்விட்டது." என்று அலுத்துக் கொள்கிறார் ராம்கி.

ராம்கியிடம் ஒரு கேள்வி. அப்படியானால் படப்பிடிப்பில் தீப்பிடிக்காது என்கிறீர்கள். நிரோஷாவுடன் மட்டும் காதல் மலர்ந்ததும் பொய்தானே?!

## தாலி

குஷ்பு முன்ன
கட்டிய தாலியை
திருந்தார். இப்போ
தத் தாலியை கழட்டிப்
விட்டார். விரைவில் சுந்தர்
புதிய தாலி கட்டப் போகிறார்
நேரத்தில் 'தாலி புதுசு' படம் வ
கிறது. இது குஷ்புவின் புதிய தாலி
கூறுவது போல் இருக்கிறதாம்.

## ரசிகர்கள் கிண்ட

போனி கபூரை மணந்து கொண்டு அம்
விட்டார் ஸ்ரீதேவி. அதன் மூலம் அனில் க
அண்ணியாகிவிட்டார்.

இந்த நேரம் 'பார்த்து அனில் கபூர்-ஸ்ரீதேவி
'ஜுடாய்' படத்தை திரையிட்டு வெறுப்பூட்டுகிறார்களாம்.
அனிலும், ஸ்ரீதேவியும் கட்டிப்புரளும் நெருக்கமான கா
திரையில் வந்ததும் ரசிகர்கள் கிண்டல் செய்து கூச்சல் போடுகிறார்
'பாபிஜி, தேவர்ஜி' என்று கத்துகிறார்களாம். 'பாபிஜி' என்றால் அ
'தேவர்ஜி' என்றால் மச்சான்.

## கதை கோட்

சித்திரைப் புத்தாண்டு படங்களில் அருணாச்சலம் மட்டும்தான் அமோக வசூல் அறுவடை செய்து கொண்டிருக்கிறது. அப்படி இருந்தும் பிரமாண்
விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு திரையரங்கில் உருத்திராட்சக் கொட்
பெரிய அளவில் செய்து வைத்திருக்கிறார்களாம்.

சித்திரைப் படங்களில் தனது படம் காலைவாரியதால் கவலையுடன் இரு
அஜித்குமார். காதல் கோட்டைக்குப் பின்னர் அஜித் படங்கள் தோல்வியைச் சந்திப்பது
கதையை கோட்டை விடுவதுதான் காரணமாம்.

## ரஜினி தேற்றினார்

"ரஜினி சேர் என்றாலே எல்லோருக்கும் ஒரு பயம் கலந்த மரியாதை இருக்கும். எனக்கும் அப்படித்தான். எத்தனையோ படங்களில் நடித்த அனுபவம் இருந்தாலும் 'அருணாச்சலம்' முதல் நாள் படப்பிடிப்பில் நான் மிரண்டு போனேன்.

என்னைத் தேற்றி தெளிவு படுத்தியது ரஜினிசேர்தான். பெரிய நடிகர், சூப்பர் ஸ்டார் என்ற பந்தா எதுவும் இல்லாமல் பழகினார்." இப்படிச் சொல்லியிருப்பவர் சவுந்தர்யா. இன்னமும் மிரட்சி போகவில்லையோ?!

## குஷ்புவின் சிபார

குஷ்புவும், ஊர்வசியும் நெருங்கிய தே
அதனால் ஊர்வசியின் அக்காவான கலா ரஞ்
தாலி புதுசு படத்தில் நடிக்க சான்ஸ்
கொடுத்தார் குஷ்பு. கலா ரஞ்சனி நீண்ட க
சான்ஸ் இல்லாமல் இருந்தவர். ஊர்வசியின் ம
அக்காவான 'சின்ன வீடு' புகழ் கல்பனா
சூடவா' படத்தில் அப்பாஸின் அக்காவாக நடி
அக்காக்கள் இருவரும் மறுபடி நடித்து சம்பாதி
ஊர்வசிக்கு, பாரம் குறைந்த திருப்தியாம்.


படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 3

# அந்தப் பெரிய நடிகரும் தொழிலதிபரும்! கவிஞரின் காதலியும் — கதாசிரியரும்

பெண்கள் விஷயத்தில் ஆண்களின் ஆசை எப்படியெல்லாமோ இருக்கும். அந்தத் தொழிலதிபரின் ஆசை வேடிக்கையானது. விபரீதமானது. அவரது எண்ணமெல்லாம் ஒரு பெரிய நடிகரையே சுற்றி இருக்கும். எதற்காக?

அந்தப் பெரிய நடிகர் எந்தப் பெண்மீது எந்த நடிகர்மீது ஆசை வைக்கிறாரோ, அவர்களையெல்லாம் சமயம் பார்த்து தன் பணம், அந்தஸ்து போன்ற பல விஷயங்களைக் காட்டித் தன் விருப்பத்துக்கு இணங்க வைத்துவிடுவார்.

இதையெல்லாம் நடிகரும் கவனித்துக் கொண்டுதானிருந்தார். ஒரு கட்டத் தில் அவரால் தாள முடியவில்லை. தன் உதவியாளரை அனுப்பித் தன் கோபத்தை வெளிப்படுத்தும்படி சொன்னார்.

உதவியாளர் போய் "ஏங்க, இப்படிப் பண்றீங்க? எங்க 'எஜமான்'கிட்ட இருக்கிற பெண்களாகப் பார்த்து வலை வீசுகிறீங்க? இது சரிதானா? எங்க 'எஜமான்' உங்கமேலே ரொம்ப ஆத்திரமாக இருக்கார்" என்றெல்லாம் சொன்னது கேட்டு தொழிலதிபர் முதலில் சிறிது நடுங்கினார்.

பின்னர் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு "இத பாருங்க தம்பி! உங்க எஜமான் ரசனையும் என் ரசனையும் ஒரே மாதிரி இருக்கு. சமீபத்திலே உங்க எஜமான் சம்பந்தப்பட்ட அந்த நடிகையோட பேசினேன். அடேங்கப்பா அந்தப் பெண்ணோட அழகும், குரலும், தளுக்கும், மினுக்கும் என்னை ரொம்ப மயக்கிடுச்சு. வேணுமின்னே உங்க எஜமான் பாதையிலே நான் வர்றதில்லை. யதார்த்தமா அமைஞ்சிடுது" என்று சமாதானமாகக் கூறி அனுப்பிவிட்டார்.

குறிப்பு: நடிகையை 'மீன்' நடிகை என்றும் அழைப்பர். பெரிய நடிகர் ஒருவரின் படங்களில் தொடர்ச்சியாக நடித்து ஆச்சரியப்பட வைத்தவர். சரி, நடிகர் யார்? அதனை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்களேன்.

### தெரிந்தே வந்தேன்

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களுக்கு கவிஞர் எழுதிக் கொண்டிருந்த நேரம். அப்போது அவர் ஒரு பெண்ணின்மீது காதல் வசப்பட்டிருந்தார். அவரை மணந்து கொள்ளும் நோக்கோடு, தான் சேலத்தில் தங்கியிருந்த இடத்திற்கே வரவழைத்துவிட்டார்.

கவிஞரோடு அப்போது நல்ல நட்புக் கொண்டிருந்தவர் ஒரு கதாசிரியர். அவர் அரசியலிலும் ஈடுபட்டவர். பெண் சபலம் உள்ளவர். கவிஞரைக் காணவந்த கதாசிரியருக்கு அவர் காதலிமீது கண். ஒருநாள் கவிஞர் இல்லாத சமயமாக அவரது இருப்பிடத்திற்கு வந்தார்.

"கவிஞர் வெளியே போயிருக்கிறார். எப்போது வருவார் என்று தெரியாது." என்று கூறியிருக்கிறார் காதலி.

"அது தெரிந்தேதான் வந்தேன்" என்று கூறியபடியே கதாசிரியர் அந்த அறையின் கதவை மூடினார்.

"எதற்கு கதவை மூடுகிறீர்கள்?"

"கொஞ்சநேரம் உன்னோடு கொஞ்ச வேண்டும் அதற்குத்தான்!"

"அவர் இல்லாதபோது நீங்கள் இங்கே வந்தது தவறு. வெளியே போய் விடுங்கள்!"

"கவிஞனை நம்பாதே கண்ணே. ஏமாறாதே பெண்ணே!"

"மரியாதையா வெளியே போயிடு. கூச்சல் போட்டு கலாட்டா பண்ணுவேன்."

கதாசிரியர் வெளியே போனது ஏதோ மாயம் போலிருந்தது.

பிற்குறிப்பு: கவிஞர் என்பது கண்ணதாசனைக் குறிப்பது. அரசியல்வாதி யார்? இப்போது முன்னணியில் இருப்பவர்தான். நீங்களே கண்டுபிடித்துக் கொள்ளுங்கள். ▭



கரிஷ்மா கபூர்

டோண்ட் வொறி கரிஷ்மா

## சினிவிசிட்



அப்பாஸ்-லக்ஷ்மி
படம்:-இனி எல்லாம் சுகமே

## தாவினார் ரம்யா

தமிழில் தாக்குப் பிடிக்க முடியாமல் தெலுங்கில் போய் கவர்ச்சிக் கொடி பறக்கவிட்டவர் ரம்யா கிருஷ்ணன். பிடிக்க வேண்டியவர்களை பிடிக்கவேண்டிய முறையில் பிடிப்பதில் ரம்யா கில்லாடி.

இப்போது தெலுங்கில் இருந்து இந்திக்கு தாவி அங்கும் பிஸியாகி விட்டார். மனிஷா கொய்ராலாவுடன் மோதலுற்று அதனால் சோகமுற்று இருந்தவர் நானா பட்டேகர். இப்போது அவருக்கு ஆறுதல் ரம்யாதான். இருவரும் இணைந்து நடிக்கும் படம் 'வஜூட்'.

## "கண் அசைவு போதுமே!"

முகப்பில் முத்துப் பல் காட்டிச் சிரிப்பவர் அஞ்சு அரவிந்த். ரஜினியுடன் 'அருணாச்சலம்' படத்தில் தங்கை வேடம் கிடைத்தது. சிவாஜியுடன் ஒன்ஸ் மோர் படத்திலும் நடிக்கிறார். இரண்டுமே பெரும் பாக்கியம் என்கிறார்.

'பூவே உனக்காக' படம் மூலம் ரசிகர்களின் மனதை கொள்ளையடித்தவர் அஞ்சு அரவிந்த். எத்தனை கொட்டிக் கொடுத்தாலும் கவர்ச்சி மட்டும் அதாவது உடல் கவர்ச்சி மட்டும் காட்டவே மாட்டேன் என்கிறார்.

"கண் அசைவிலும் கவர்ச்சி காட்ட முடியும். சேலை கட்டி நடித்து சிறந்த நடிகையாக முடியும். முந்தானை விலகுவதும், முழங்காலுக்கு மேல் ஆடை அணிவதும் மட்டுமே கவர்ச்சி இல்லை" என்று அடித்துச் சொல்கிறார் அஞ்சு அரவிந்த்.

## எது இங்கே பிடிக்கும்?

"மும்பாய் நடிகைகள் தங்கள் உடம்பை கொடி மாதிரி வைத்திருக்கிறார்கள். தென்னிந்திய நடிகைகள் மட்டும் புஸ் புஸ் என்று சதைபோட்டு காணப்படுகிறார்களே ஏன்?" நடிகை ஸ்ரீவித்தியாவிடம் கேட்கப்பட்ட கேள்வி அது.

ஸ்ரீவித்யாவின் பதில்; "இங்கு எல்லாமே சதைப் பிடிப்போடு புசு புசுவென்று இருந்தால்தான் எல்லோருக்கும் பிடிக்கும். எலும்பும் தோலும் இங்கு எடுபடாது." என்கிறார்.

ரவீணா, ஷில்பா, கஜோல், தபு போன்ற நடிகைகள் தமிழ்ப்பட உலகில் எடுபடாமல் போனதற்கு அதுதான் காரணமோ?

## சிம்ரான் முன்னேற்றம்

கால்களின் அழகால் கவர்ச்சிச் சிகரத்தில் ஏறிய புயல் ரம்பா. அவரது சம்பளமோ ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. அதனால் சிம்ரானின் பக்கம் தயாரிப்பாளர்கள் மொய்க்கத் தொடங்கிவிட்டனர். பல படங்கள் சிம்ரானுக்கு குவிந்துள்ளன என்று சென்னை சினி உலக அவதான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வி.ஐ.பி. படத்திலும் அப்பாஸ், பிரபுதேவா இருவருமே சிம்ரான் அழகில் சொக்கிப் போனதாக தகவல்கள் உறுதி செய்கின்றன. சிம்ரானும் மின்னலுடன் கூடிய கவர்ச்சி மழையை பொழிவதில் சற்றும் வஞ்சகம் பண்ணுவதில்லையாம்.



விக்னேஷ்-கீர்த்தனா
படம்:-சன்னதிப் பூக்கள்

## பறந்து போனார்

'ஜீன்ஸ்' படப்பிடிப்புக்காக அமெரிக்காவில் உள்ள மகனுக்கு பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல பறந்திருக்கிறார் தியாகராஜன்.

பிறந்தநாள் வாழ்த்துச் சொல்வது போல சென்று பிரசாந்த்தின் நடவடிக்கையை கண்காணிப்பதும் நோக்கமாம். 'நல்ல பையன்' என்று பிரசாந்த்தை ஐஸ்வர்யா ராய் பாராட்டிய செய்தி அப்பா காதில் விழாமல் போகுமா?

## குறைந்த நெருக்கம்

பார்த்திபனைப் பற்றி சங்கீதா நல்லவிதமாகப் பேசுவதில்லையாம். நெருக்கத்தை மறைக்கும் தந்திரம் இது. புறத்தில் வெறுப்பு, அகத்தில் இனிப்பு! இதெல்லாம் தெரியாதோ? என்று கேலி செய்கிறார்கள் சக நடிகைகள்.

ஆனாலும் ரவளியைக் கண்டபின் பார்த்திபன் சங்கீதாவுடன் நெருக்கத்தை சில சென்ரி மீட்டர்கள் குறைத்துக் கொண்டது மட்டும் உண்மையிலும் உண்மை.

அதே நேரம் பார்த்திபனோ அரசியல்வாதிகள் பாணியில் "கொடிய விஷமிகள் என்னைப் பற்றி புரளி கிளம்புகிறார்கள். அவர்கள் கனவு பலிக்காது." என்று முழங்கிக் கொண்டிருக்கிறார்.

## சேலைகள் போட்டி

தற்போது தேவயாணி எதிர்பார்த்துக் கொண்டிருப்பது 'சூர்யவம்சம்' படத்தைத்தான். 'காதல் கோட்டை' படத்தின் பின்னர் பல படங்களில் நடித்தும் சூப்பர் ஹிட் படங்கள் அமையவில்லை.

சரத்குமாரின் ஜோடியாக நடிக்கும் சூர்யவம்சம் வெளியானால் தனது மார்க்கெட் மேலும் உயரும் என்று மலைபோல நம்புகிறார் தேவயாணி.

கவர்ச்சியாக நடிப்பதில் போட்டி இருப்பது மாதிரி சேலைகட்டி நடிக்கும் நடிகைகள் மத்தியிலும் போட்டா போட்டி நிலவுகிறது. சுவலட்சுமி, தேவயாணி, கௌசல்யா, அஞ்சு அரவிந்த் என்று அந்தப் பட்டியல் நீள்கிறது.

## பஞ்சம்

அஜித்குமார் முன்பொரு பழக்கம் வைத்திருந்தார். ஒரு படத்தை பணத்துக்காக ஒப்புக்கொள்வார். இன்னொரு படத்தை கதைக்காக ஒப்புக் கொள்வார்.

இப்போது இரண்டு விதத்திலும் ஒத்துக்கொள்ளும் அளவுக்கு அஜித்துக்கு புதிய ஒப்பந்தங்கள் எதுவும் இல்லையாம்.

## போன் தொல்லை

நடிகைகளின் தொலைபேசி இலக்கங்களை தெரிந்துவைத்துக் கொண்டு சிலர் டயல் செய்து ஆபாசமாகப் பேசுகிறார்களாம். சில துணிச்சலான பொழுது போகாத நடிகைகள் பதிலுக்கு பதில் வம்பளப்பது உண்டாம். வேறு சில நடிகைகளோ முகம் சுளிக்கிறார்கள். நடிகை ரூபஸ்ரீ போனையே தொடுவதில்லை. உதவியாளர்தான் எடுப்பாராம். "நடிகை என்பதற்காக ஆபாசமாகப் பேசுகிறார்கள். பணத்துக்காக கிளாமராக நடிக்கிறோம். அதற்காக எதை வேண்டுமானாலும் போனில் பேசுவதா? சிலர் பேசும் வார்த்தைகளை சொல்ல முடியாது, அத்தனை விரசம்" என்கிறார் ரூபஸ்ரீ.

## பண அவசரம்

கல்லூரி மாணவியைத் திடீர் திருமணம் செய்து கொண்டவர் விக்னேஷ். அதுதவிர சுவாதியும் விக்னேஷின் நண்பியாகவே தொடர்கிறார். விக்னேசுக்கு பணத்தேவை அதிகம். அதனால் யார் ஒப்பந்தம் செய்யப் போனாலும் உடனே ஓ.கே. சொல்லிவிடுகிறார்.

தற்போது அதிக படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ள நடிகர் விக்னேஷ்தான். இப்படியே கண்டமாதிரிப் படங்களை ஒப்புக்கொண்டால் எந்தப் படத்திலும் தேற முடியாமல் போகப் போகிறார். மனைவி சொல்லே மந்திரம். புதுமனைவி புத்தி சொல்வாரா?



படிப்பகம்

# கர்ப்பிணிப் பெண்களுக்கான உணவு

(தருவது – ஜஹ்னாவிபால்)

கர்ப்பிணிப் பெண்கள்-தங்கள் வயிற்றில் வளரும் சிசுவுக்கும் சேர்த்து, இருவருக்கான உணவை ஒரே சமயத்தில் உண்ண வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன். உண்மையில் இது உணவின் அளவைப் பொறுத்ததல்ல. ஒரு பிளேட் சோறு உண்ணும் பெண் இரண்டு பிளேட் சோறு உண்ண வேண்டும் என்பதும் அர்த்தமல்ல.



குழந்தை சீராக வளர்ச்சியடைவதற்குத் தேவையான போஷாக்கும் தாய்மையைத் தாங்கும் வலுவினை ஊட்டவல்ல நிறை உணவும் உட்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தவே அவ்வாறு கூறப்பட்டது. தாய்க்கு வேண்டிய ஊட்டங்களை-வயிற்றில் வளரும் குழந்தையும் பங்கேற்பதால், போதிய புரதம், விட்டமின் மற்றும் தாதுக்கள் கூடிய அளவு உட்கொள்ளப்பட வேண்டும்.

வயிற்றில் வளரும் சிசு ஒரு சுயநலமி. தன்னைச் சுமந்து வளர்த்தெடுக்கும் தாய்க்குத் தேவையிருக்குமே என்பதைக் கொஞ்சங்கூட உணராமல் தனக்கு வேண்டிய ஊட்டத்தை மளமளவென்று உறிஞ்சி எடுத்துக் கொள்ளும். ஆகவேதான் கர்ப்பிணிகள் ஊட்டம் தரும் உணவு வகைகளை போதிய அளவு உண்ணுதல் வேண்டும்.

### உணவுப்பட்டியல்:

குழந்தை வளர்ச்சிக்கு இரும்பு, கல்சியம் (சுண்ணாம்புச்சத்து) மற்றும்-புரதம் பொதிந்துள்ள உணவுகள் இன்றியமையாதவை. பின்வரும் உணவு வகைகளில் எவையேனும் ஒன்றிணைந்தவற்றை உண்ணுவதற்கு வகை செய்து கொள்ளுங்கள்.

அ. குழந்தைகளின் எலும்புகளை உறுதியாக்க உகந்தவை கல்சியம் சேர்ந்த உணவுகள். தயிர், மோர், பாற்கட்டி (சீஸ்) போன்ற பால் உணவுகளில் கல்சியம் பொதிந்துள்ளது.

ஆ. புரதம் பொதிந்த உணவுகளான முட்டை, பருப்பு வகைகள், கோதுமை, அரிசி, இறைச்சி, விதைகள், சோயா அவரை ஆகியவை உடலின் சகல பாகங்களும் வளர உதவுகின்றன.

இ. பச்சைக் காய்கறிகள், கீரைவகைகள், கருப்பட்டி, பசளைக்கீரை, கருவாடு போன்றன இரும்புச் சத்துள்ளவை.

### முழுமையான உணவு:

* தானிய உணவுவகை, காய்கறிக் கலவை, இடியப்பம், பிட்டு, இட்லி, தோசை மற்றும் சோறு ஆகியவை முழுமையான உணவாகும்.
* பயறு, பருப்பு (விதைகள்) கடலை ஆகியவற்றை வேகவைத்து உண்ணலாம்.
* மலச்சிக்கல் ஏற்படாமலிருக்க நார்ச்சத்து அதிகமுள்ள உணவினை உட்கொள்ள வேண்டும். தவிட்டுப் பாண், சோறு, சோளம், காய்கறி, பழங்கள் ஆகியவற்றில் நார்ச்சத்து உண்டு.
* எண்ணெயில் பொரிக்கும் உணவுகள் எப்போதும் கொழுப்பினைச் சேர்ப்பவை. கொழுப்புக் கூடிய அளவுள்ளவர்கள் பதார்த்தங்களை அவித்தோ சூடு காட்டியோ அல்லது நீராவியில் வேக வைத்தோ உண்ண வேண்டும்.
* காலத்துக்குக்காலம் வரும் பழங்களான தோடம் பழங்கள், அன்னாசிப் பழங்கள், கொய்யாப் பழங்கள், வாழைப்பழங்கள், மாம்பழங்கள் ஆகியவற்றை தாராளமாகப் புசிக்கலாம்.
* கரட், கோவா ஆகியவற்றைப் பச்சையாக உண்பதில் நல்ல பலனுண்டு. இவற்றை நன்றாகக் கழுவி நீராவியில் இரண்டு மூன்று நிமிடங்கள் படவிட்டு எடுத்து உண்பதனால் இவற்றில் உறைந்திருக்கும் கிருமிகள் அழிந்துவிடும். பின்னர் மீண்டுமொருமுறை சுத்தமான நீரில் கழுவிய பின்னர் உண்ணலாம். இவற்றுடன் வெள்ளரிக்காய், வத்தாளைக் கிழங்கு பசளிக்கீரை, ஈர வெங்காயம் ஆகியவையும் சேர்த்துக் கொள்ளப்படலாம்.
* கூடுமானவரை மிதமிஞ்சிய இனிப்புப் பண்டங்களைத் தவிர்க்கவும். குளிர் பானங்கள் (சோடா சேர்ந்தவை), சீனி மற்றும் கேக் வகைகளையும் நீக்கிவிட வேண்டும்.
* கர்ப்பவதிகள் நெய் கலந்த உணவினை அதிகம் உட்கொள்வதால் கர்ப்பப்பை வாசலில் சுரப்பிகள் அதிகமாகி குழந்தை பிறப்பது சுலபமாகிவிடும் என்று தப்பான கருத்து நிலவுகிறது. கர்ப்பிணிகள் நெய் சேர்ப்பதால் கொழுப்பு அதிகரிக்க அதிக வாய்ப்பு இருக்கிறது.
* தேனீர், கோப்பி போன்ற பானங்களை அதிகம் பருகுவது தவிர்க்கப்படவேண்டும். கொதித்து ஆறிய நீர் போதுமான அளவு பருகலாம்.
* உணவில் உப்பு அதிகம் சேர்த்தல் நல்லதல்ல. உப்பு அதிகமானால் இரத்த அழுத்தம் கூடும். கர்ப்பிணிகள் இரத்த அழுத்தத்துக்கு இடம் தரலாகாது. இறைச்சி, மீன், முட்டை மற்றும் பாலில் உள்ள உப்பே உடலுக்குப் போதுமானது.
* உடலின் எடை அளவுக்கு மீறிக்கூட இடம் தரலாகாது. இருப்பினும் கொழுத்து விட்டோமோ என்ற அனாவசியக் கவலை கொள்ளலாகாது. தாய்ப்பால் சுரப்பதற்கு ஓரளவான கொழுப்பும் தேவை. பால் கொடுக்கத் துவங்கியதும் கொழுப்புக் கரைந்து உடம்பு பழைய நிலையினை அடைந்து விடும். ■

## கம்பியூட்டர் மேக்கப்



உங்கள் முகத்துக்கு ஏற்றவாறு எத்தகைய ஒப்பனையைச் செய்யலாம் என்று நீங்கள் இனிமேல் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. இதனை ஒரு நவீன கருவி முடிவு செய்துவிடுகிறது. ஜப்பானியர்கள் இக்கருவியைக் கண்டு பிடித்துள்ளனர்.

கம்பியூட்டரின் உதவியுடன் இயங்கும் இக்கருவியின் முன் நீங்கள் போய் நின்றதும் அது உங்களைப் படம் பிடித்து விடுகிறது. பின்னர் உங்கள் முகத்திலுள்ள குறைபாடுகள் என்னென்ன என்பதை பலவர்ணக்கோடுகள் மூலம் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

இது மட்டுமல்ல இத்தகைய குறைபாடுகளை நீக்குவதற்கு என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும் என்ற ஆலோசனைகளையும் கூறிவிடுகிறது.

ஜப்பானியப் பெண்களின் சருமத்துக்கும் உடலமைப்புக்குமேற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட இக்கருவியை அப்படியே கொண்டு வந்து நாம் பயன் படுத்திவிட முடியாது. எமது நாட்டுப் பெண்களின் உடலமைப்பு சருமத்தின் நிறம் ஆகியவற்றை அனுசரித்து அவற்றுக்கேற்றவாறு புதிய சாதனங்களைக் கொண்டு இவற்றை அமைத்தால் மட்டுமே எம்நாட்டுப் பெண்களுக்கு இது உதவும். ■

# பெண்களின் எதிரி பொல்லாத புற்றுநோய்

## வரமுன் தடுக்க யோசனை!



புற்றுநோய் வந்து விட்டால் அதனைக் குணமாக்குவது கடினம். புற்றுநோயாளி தனது வாழ் நாட்களைக் கணக்கிட்டுக் கொண்டு மருத்துவமனையிலோ அல்லது பராமரிப்பு முகாமிலோ காலத்தைக் கடத்த வேண்டியதுதான். ஆனால் புற்று நோய் வராமல் தடுக்கப் பல வழிகளுண்டு

எந்த வயதிலும் எவருக்கும் புற்றுநோய் வரலாம். ஆனால் வயதானவர்களுக்குத்தான் இந்நோய் அதிகமாகப் பீடிக்கிறது.

உலகளாவிய நிலையில் ஒவ்வொரு வருடமும் 60 இலட்சம் வரையிலான புற்று நோயாளிகள் இனங் காணப்படுகின்றனர். இவர்களில் வளர்முக நாடுகளில்தான் அதிகமான நோயாளிகள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

வந்த பின் சிகிச்சையை நாடி ஓடுவதைவிட வருமுன் காப்பதே நல்லது.

முக்கியமாக எமது பழக்க வழக்கங்களும் கவலையீனங்களும் புற்றுநோய் வந்து பற்றிப் பிடிக்க வழி வகுக்கின்றன. நாம் உட்கொள்ளும் உணவுகளினாலும் இந்நோய் பீடிக்க வாய்ப்புண்டு.

புகையிலையினால் 35 முதல் 40 வீதம் வாய், தொண்டை, நுரை ஈரல் புற்று நோய் தோன்றுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பெண்களைப் பொறுத்தவரை அதிக கொழுப்புள்ள பண்டங்களால் மார்புப் புற்று நோய் ஏற்படுகிறது. பெருங்குடல் மற்றும் பெரும் சுரப்பிகளில் புற்று நோய் தோன்றவும் கொழுப்புச் சத்தே காரணமாகும்.

பதப்படுத்தி விற்கப்படும் உணவுப் பண்டங்களில் சேர்க்கப்படும் பாதுகாப்புச் சாதனங்கள், சமப்படுத்தும் பண்டங்கள் ஆகியவற்றால் அதிக தீங்கு ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. மதுபானமும் அளவுடன் பாவித்தால் பிரச்சனை இல்லை. ஆனால் புகைத்தலால் புற்று நோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்கும்.

### தடுக்கும் வழிகள்

நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகளை உங்கள் உடலிலேயே வளர்த்துக் கொள்ள வேண்டும். வயதானவர்கள் போதுமான அளவு ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும். அதே போல் சோம்பலைத் தடுக்கும் உடற்பயிற்சி அவசியம். முக்கியமாக தேகாரோக்கியத்துடன் வாழ்வதற்கான நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப் பிடித்தல் வேண்டும். மது மற்றும் புகைத்தலைக் கைவிட வேண்டும்.

உங்கள் வயது, உயரம், எடை ஆகியவற்றை அளவுடன் நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். மாமிச உணவைவிட தாவர உணவு பிரதானமானது. நார்ச்சத்து அதிகமாகவுள்ள உணவுகளும் குறிப்பாகப் பழ வகைகளும் உண்ணலாம்.

தேனீர், கோப்பி, ஆகியவற்றையும் தவிர்ப்பது நல்லது.

பெண்களைப் பொறுத்தவரை வருடத்தில் ஒரு தடவையாவது தரமான மருத்துவரிடம் உடலைப் பரிசோதனை செய்வது அவசியமாகும். இளமையிலிருந்தே நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். எமது பிள்ளைகளுக்கும் அவற்றைப் பழக்கப்படுத்துதல் வேண்டும்.

### மார்புப் புற்று நோய்

பெண்களுக்கு மார்புப்புற்றுநோய் சுலபமாக ஒட்டிக் கொள்கிறது. இந்நோய் பீடித்தால் மார்பகத்தையே முற்றாக- சத்திர சிகிச்சை மூலம் இழக்க வேண்டி வரும். 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தகுதிவாய்ந்த மருத்துவரை நாடி., காலத்துக்குக்காலம் தங்கள் மார்பகங்களைப் பரிசோதனை செய்து பார்ப்பது இன்றியமையாதது. இடைக் காலங்களில் தாங்களாகவே இப்பரிசோதனையைச் செய்துபார்க்கலாம்.

தனி அறையில் நிலைக் கண்ணாடி முன் நின்று மார்பகங்களில் புதிதாக அடையாளங்கள், வேண்டாத புள்ளிகள், தடிப்பங்கள், புதிய மச்சம் மறுக்கள் தோன்றியுள்ளனவா? என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். சந்தேகத்துக்கிடமான வளர்ச்சிகள் போன்றவை தென்படுமானால் உங்கள் மருத்துவரை நாடுங்கள்.

### புற்று நோய்க்கான ஆரம்ப அறிகுறிகள்

* மலசலம் கழிப்பதில் ஒழுங்கின்மை.
* நாட்பட்டும் மாறாத புண்.
* பெண்களுக்கு மாதவிடாய் ஒழுங்கீனம். அடிக்கடி இரத்தப் பெருக்கு,
* மார்பகத்தில் அல்லது வேறு இடங்களில் வேண்டாத வீக்கம்.
* மச்சம், மறு போன்றவற்றின் அசாதாரண இடமாற்றம்,
* தொடரும் இருமல்–தொண்டைக் கரகரப்பு,

பெரும்பாலும் இத்தகைய அறிகுறிகள் புற்று நோய்க்கான எச்சரிக்கையாகவும் இருக்கலாம். இவற்றை அவதானித்தால் தகுதியான மருத்துவரின் உதவியை நட வேண்டும். ■

## லேடீஸ் ஸ்பெஷல்

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? பத்தனை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

திருமதி யோ. றிச்வே,
மௌண்வேணன் எஸ்டேட், பத்தனை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

### பரிசு பெற்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர். இவர்தான்: மேரி ஜோ குரூஸ்
64ம் கட்டை, சகாயபுரம்,மூதூர்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** BQ

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-05-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## தெரிந்து கொள்ளணும் பெண்ணே!

ஒரு ஆரோக்கியமான பெண்ணின் எடை எவ்வளவு இருக்க வேண்டும் தெரியுமா? அவரவர் உயரத்திற்கு ஏற்றவாறு கீழே எடைகள் போடப்பட்டுள்ளன. சரியா? என்று உங்களை நீங்கள் ஒருமுறை எடை போட்டுக் கொள்ளுங்கள்.

| உயரம்(சென்டி மீட்டரில்) | எடை (கிலோவில்) |
|---|---|
| 147.3 | 43.5 - 48.5 |
| 149.9 | 44.5 - 49.9 |
| 152.4 | 45.8 - 51.3 |
| 154.9 | 47.2 - 52.6 |
| 160.0 | 49.9 - 55.3 |
| 162.6 | 51.3 - 57.2 |
| 165.1 | 54.4 - 61.2 |
| 167.6 | 56.0 - 62.6 |
| 172.7 | 58.1 - 64.9 |
| 175.3 | 59.9 - 66.7 |
| 177.8 | 61.7 - 68.5 |
| 180.3 | 63.5 - 70.3 |
| 182.9 | 65.3 - 72.0 |



<u>பின் குறிப்பு:</u>

இவற்றுடன் ஒன்று அல்லது இரண்டு கிலோ கூடக்குறைய இருக்கலாம். பிரச்சனை இல்லை.

***

**கண் திருஷ்டி**

கண்ணுக்குத் திருஷ்டி போடும் சக்தி உண்டா? உண்டு. சிலருடைய பார்வைக்கு நம்ப முடியாத அளவுக்கு சக்தி உண்டு. அப்போது மனதில் நினைப்பதன் மூலம் திருஷ்டி படும். கிட்டத்தட்ட மெஸ்மரிசம் போல உள்ள இதை 'சைக்கோ கைனசிஸ்' என்று கூறுகிறார்கள்.

***

**அந்த அதிகாலை..**

இருதய நோயாளிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டியது அதிகாலை நேரத்தில் தான். காரணம் பெரும்பாலான மாரடைப்புக்கள் (ஹார்ட் அட்டாக்) அதிகாலையில்தான் ஏற்படுகின்றன. எனவே அதிகாலையில் ஏதாவது அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக டாக்டரைப் பார்த்து விடுவது நல்லது.

***

**ஹைய்யா முட்டை**

ஒரு முட்டையில் 8 விதமான 'பி' விட்டமின்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட மனிதனுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களுமே இதில் அடங்கியுள்ளது.

***

**நல்லா தூங்குங்க**

சராசரியாக மனிதர்களுக்குத் தினசரி 7 மணி நேரத் தூக்கம் அவசியம். இதற்குக் குறைந்து தூங்கினாலும், 10 மணிநேரத்திற்கு அதிகமாகத் தூங்கினாலும் அது உடல் நலத்திற்குக் கேடுதான். தூங்கும் போது கவலையை மறந்து நிம்மதியாகத் தூங்க வேண்டும்.

***

**மேக்-அப் ஆபத்து**

பெண்களே! அதிகமாக மேக்-அப் போடாதீர்கள். போட்டால் அதில் உள்ள இரசாயனக் கலவைகள் வியர்வைத் துவாரங்களை மெல்ல மெல்ல அடைக்கும். இதனால் முகச்சுருக்கமும், தோல் மூப்பும் அடைகின்றன. 35 வயதிற்குப் பிறகு நீங்கள் கிழவியாகத்தான் காட்சி அளிப்பீர்கள். ■

## தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 11

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## அதுவரையும் வாழவேண்டும்! தேன்கிண்ணம்

எனது வாழ்வு காணத்துடித்த
வசந்தத்தின்
உதயமும் அஸ்தமனமும்–உன்
வார்த்தைகளைப் பொறுத்தே
உருவாகக் காத்திருந்தது!
–0–
நடைப்பிணமான எனை
உயிரூட்ட–உன்
வார்த்தைகளுக்கு மட்டுமே
வல்லமை இருந்தது!
–0–
கல்லும் உருகும்–என்
கண்ணீரின் முன்னால்
அசையாமல் இருக்க–உன்
இதயத்துக்கு மட்டும்
எப்படி இயலுமாயிருந்தது?
–0–
காலையும் மாலையும்
மனது சுமந்த
வேதனைகளினாலேயே–என்
விழிகளிரண்டும்
ஊற்றெடுத்து வழிந்தன!
–0–
உன் உலகுக்குச்
சூரியனும் சந்திரனும்
வந்து சேர்வதற்காகவா
என் வானத்தை
வெறுமையாக்கினாய்?
–0–
உன் வாழ்வுக்கு
ஊன்று கோலாக
எனது எலும்புக்கூடுதானா
தேவைப்பட்டது?
–0–
கண்ணீரிலும்
இரத்தத்திலும்
முணுமுணுத்தோடும்
வேதனைகளோடு–நான்
வாழவேண்டும் என்பது தானா
உன் காதலின்
கோரிக்கையானது?
–0–
மின்னலைப் போலத்
தோன்றி மறையும்–உன்
நினைவுகளின் பின்னால்
கோடை இடிபோல
இதயம் குமுறி ஓய்கிறது!
–0–
உன் வாழ்வின் தலைப்பை
எனது குருதி தொட்டு
எழுதிக் கொண்டது
தவறென்பதை
எப்போது நீ உணர்வாய்?
–0–
பதினாறு பேறுகளோடும்–நீ
பெருவாழ்வு காணும் போது,
எல்லாச் சாபங்களோடும்
நானிருந்து போராடுகிறேன்!
–0–
என் பாதைகள் எல்லாம்
கண்ணீர் நிரம்பியவை;
என் பாடல்கள் எல்லாம்
சோகம் ததும்பியவை!
இருந்தும் நான்
இன்னும் வாழவேண்டியுள்ளது,
எனது மண்ணறையைச்
சென்று சேரும் வரை!
–0–

பஹீமா ஜஹான்,
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## தவிர்க்க முடியாத உணர்வுச் சொட்டு!

கனவு வரும்
ஒன்றிரண்டு போக
மற்றெல்லாம் இரவினிலும்
எனக்குள்ளும் கனவு வரும்!
••
நெடிதாய் சிலதும்
புள்ளிகளாய் சிலதும்
நறுக்குத் தெறித்தாற் போல்–
சிலதுமாய்
எனக்குள்ளும் கனவு வரும்!
••
பல நேரம் வாழும்–
சிலகனவு என்னுள்!
பல கனவு என்னுள்–
சில நேரமே வாழும்!
கிழட்டுக் கனவுகளும்
சில வேளை வரும்;
வந்ததுமே பாய் விரித்து
என்னுள்ளே உறங்கிப் போகும்!
••
பாம்பாய் வரும் சில கனவு
பூவாய் வரும் சில கனவு
முகமெல்லாம் கருகிப் போய்–
முடமாய் வரும் வேறோர் கனவு!
எப்படியோ.....
எனக்குள்ளும் கனவு வரும்!
••
மனசுக்குள் வந்து
மலங் கழித்துப் போனது–
நேற்றிரவு ஒரு கனவு!
உடம்பெல்லாம் பல்லாக
ஒரு கனவு வந்து,
என் உச்சி உறுஞ்சி
மூளை குடித்து
அதிகாலைப் பொழுதினிலே
தத்துவம் சொல்லியது!
••
வடிவான கனவுகளும்
வராமலில்லை...!
ஒரு பொழுது
ஒரு பெண் கனவு
இரவெல்லாம் என்னோடு–
படுத்துக் கிடந்து
விடி காலை விடை பெற்று–
போனதுவுமுண்டு!
••
நெருப்பாய்....
கறுப்பாய்....
கழுத்தில் வாலும்,
இடுப்பில் கொம்பும் முளைத்த
பொக்கை வாய் கிழவியாய்.....
பேயாய், ரத்தமாய்
பெயர் தெரியாத இன்னுமாய்....
எனக்குள்ளும் ஏதேதோ–
கனவு வரும்!
••
அதிசயமாய்,
குரோதங் கொண்டு–
உயிர்குதற
சில கனவு எனை விரட்டும்;
ஓடி வரும்!
••
விரட்டுகின்ற கனவுக்கு
பயந்ததில்லை மனசு!
எக்கனவு, எதற்காக
எனை நோக்கி வந்தாலும்;
குதித்தெழுந்து நான் விழிக்க....
முனகிச் சாகும்
கனவு...!!!
••

அட்டாளைச்சேனை யூயெல்
மப்றூக்.

## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப் போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர்விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ.

1. செல்வி. சுலைம் யூசுப், 80/12, பெமிலி வீதி, நாவலப்பிட்டி.
2. திருமதி. எல். சிவஜோதிமலர், 43/1, ஆரியபுர, பொகவந்தலாவ.
3. ரி. தேவபாலன், 60, நல்லையா வீதி, மட்டக்களப்பு.
4. செல்வராஜா சஞ்சயன், 63, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா.
5. எஸ். சசிகுமார், சாரதா தி'யட்டர் எதிரில், செங்கலடி.
6. செல்வி. எல். கஜேந்திராதேவி, கண்ணகியம்மன் கோவிலடி, திமிலை, சிலாபம்.
7. எஸ். புவிராஜ், பிரதான வீதி, துறைநீலாவணை-6.
8. எம். சலீம், வேப்பமடு, 4ம் கட்டை, மன்னார் வீதி, புத்தளம்.
9. எஸ். சுகீந்திரன், 199/1, இறத்தோட்டை வீதி, மாத்தளை.
10. கே. முரளி, எச். 1/8, அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டி.
11. எஸ். வசந்தகுமார், பலாவலை எஸ்டேட், உட நிரி எல்லை.
12. சம்சுதீன் ஹம்சார், சரீப் ஹாஜியார் வீதி, அட்டாளைச்சேனை-2.
13. ஏ. அச்சுதன், சேனையூர்-6, மூதூர்.
14. திருமதி. மெற்றில்டா, 61/2, லூவிஸ் பிளேஸ், நீர்கொழும்பு.
15. யுஸ்டஸ் வெல்ற, 60/1, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை.
16. பரிக்கா ஏ. சமத், வெலிகபொல, வேவுட.
17. செல்வி. றினோசா பாறூக் 99, வத்தேகம வீதி, மடவளை பசார்.
18. ரி. குன்றக்குமரன், 55, டிக்மன் வீதி, கொழும்பு-5.
19. எம். நஸீர், ரத்மல்ஹகாவெவ ரோட், ரம்பாவ, அனுராதபுரம்.
20. இ. கப்ரியேல் 5/ஏ, மல்லியப்பு, ஹட்டன்.

(ஏனைய விபரங்கள் அடுத்தவாரம்)

## புரியுமா காதல் கணக்கு?

விடைகளில்லா வினாவேந்தி....
விழிநீர் விடை தேடி வர
இரு கரை அணை போட,
கண்ணுக்குள் கருவிழியாய்
வந்தவனும் நீதான்!
▫▫▫
நெஞ்சுக்குள் புதுராகம்
தந்தவனும் நீதான்!
தனிமையிலும் இனிமையை
இணைத்தவனும் நீதான்!
▫▫▫
மௌனமாய் என் வாழ்வை
கொல்பவனும் நீதான்!
முன்னூறு நிலவாக
எழுந்தவனும் நீதான்!
▫▫▫
மனம் திறக்க மறுத்து
மனதில் குத்துவதும் நீதான்!
காதல் உணர்வுகளை
தந்தவனும் நீதான்!
▫▫▫
நான் கை நீட்டும் போது
கண் மூடுவதும் நீதான்!
காலமெல்லாம் காதலை
தந்ததும் நீதான்!
▫▫▫
விழி தேடும் தூக்கமதை
விரைந்திடச் செய்ததும் நீதான்!
விழி வழியும் குருதியில்...
இரவுகள் விடியாமல்
விழி சுமந்த நம் காதல்
வழிமாறிப் போனதுவே!
▫▫▫
என் யாசிப்பு தெரியாதா?
நான் மூச்சு விட மறக்கும்
போதுதான்
புரியுமா காதல் கணக்கு?

தெ. ரஞ்ஜனா, இறம்பைக்குளம், வவுனியா.

## காதல் நதியே!!!

சுடுகாட்டில் மட்டும் வீசிய
சூறாவளி நான்....
நந்தவனம் காட்டி
நறுமணத் தென்றலாக்கியவளே!!!
▾▾▾
காதல் தாகத்திற்கு
தண்ணீர் கேட்டேன்– நீயோ
கானல் நீர் காட்டி,
கனவுலகில் மட்டும்
வாழ வழி காட்டினாய்!
▾▾▾
சுவரில் மாட்ட
சித்திரம் கேட்டேன்– நீயோ
சிதையை மூட்ட
சுள்ளி தந்தாய்!!!
▾▾▾
எப்பொழுதும்
உனக்காக நான்
பூபாளம் பாடுகிறேன்– ஆனால்
நீயேன் குயிலே?
மௌன ராகம் ரசிக்கிறாய்...!!
▾▾▾
எல்லாவற்றிற்க்கும்
எதிர்ப்பதம் கற்பிப்பவளே!
தீர்மானித்துக்கொள்...!
என் காதலுக்கு
பதில் சொல்வதா???
எனைக் கொல்வதா???

அகன் கபிலன்



## யார் இவர்?

➜ இன்றும் பிரபல கவிஞராக இருப்பவர் இவர். திரைப்படப்பாடல்களில் காலததால் அழியாத பல பாடல்களை தந்தவர்களில் ஒருவர். என்ன இவர் யார் தெரிகிறதா? யோசியுங்கள். ஊகியுங்கள். பின்னர் பக்கம் 18ஐ புரட்டுங்கள்.

## சாம்பராகும் கவிதைப் பூக்கள் ** 

சுட்டுத் தீய்க்கும்
உக்கிர எறிப்பில்
உணர்விடை எரியும்
தீயென
கவிதை கூட
சாம்பலாகும்!
**
இன்னும் என்னதான்
வாழ்வின் வழியிருக்கிறது?
மீண்டும் மீண்டும்
அழிவின் தழும்புகள்
வரும்!
**
நிழல் வாகைப்பூ உதிரும்
இலைச் சாவும் நிகழும்.
அலைக் காற்றிடை
கருகு மணிகள் உதிரும்
பின்னரொன்று பூக்கும்
காலம் வரும்வரை
சுமைதான்!
**
ஒற்றுமைக் கருக்கள்
விதையூன்றி வளரும்
காலத்தில் எங்கள்
உயிர்கள் இருக்குமா என்பது
கேள்வி!
**
இந்தத் தேசத்தில்
கால்கள் ஊன்றிய
ஒரு நற்காலை
உதயமாக வேண்டும்.
எப்பொழுதாகினும்
ஏற்றுக் கொள்வோம்!
**

மானுடபுத்ரன்

## இந்த வாரம் உங்கள் பலன்

(18.05.1997 தொடக்கம் 24.05.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன், வெள்ளி. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| மேடம் | - புதன். |

★ சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சிகளில் வெற்றி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், புதிய முயற்சி. | பகல் 11 மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பணவரவு. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- காரியானுகூலம், இனசன நன்மை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி மேன்மை, பண விரயம். | பி.ப. 4 மணி |
| திங்கள்- பொருள் வரவு, உயர்ந்த நட்பு. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 4 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர் அதிகம், தேககம்-பாதிப்பு. | பகல் 11 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- இனசன நன்மை, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, கௌரவ மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- சுபகாரிய மகிழ்ச்சி, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் நன்மை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. 4 மணி |
| புதன் - வெளியிடப் பயணம், பொருள் வரவு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பயனுள்ள செயல். | மு.ப. 11 மணி |
| சனி- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- சுபகாரிய மகிழ்ச்சி, அந்நியர் நட்பு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- கடன் சுமை, பிரயாண மிகுதி. | பகல் 11 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக் குறை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், கௌரவக் கேடு. | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தொழில் பிரச்சனை. | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, பண வரவு. | மு.ப. 10 மணி |
| வியாழன்-உறவினர் உதவி, காரியத் தடை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கௌரவம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, செல்வாக்கு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- காரியானுகூலம், பிரயாண மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- காரியானுகூலம், முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், தேகசுக நன்மை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- செல்வாக்கு மேன்மை, பெரியோர் நட்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## சி ன் ன ப் பா ப் பா

சின்னப் பாப்பா சின்னப் பாப்பா சிந்திக்க வேண்டும்- நல்ல
திறமையென்னும் செல்வங்களைச் சேமிக்க வேண்டும்!
மனமென்னும் தோட்டத்திலே நல்லன்பை வளர்க்க வேண்டும்- நம்
மானங்காக்கும் வீரத்தையும் அதில் சேர்க்க வேண்டும்!

அதிகாலை ஐந்து மணிக்கு நீ எழுந்திடல் வேண்டும்- உன்
அன்னை, தந்தை இருவரையும் தினந்தொழுதிடல் வேண்டும்!
சுகமளிக்கும் உடற்பயிற்சி செய்திடல் வேண்டும்- பின்
சுறுசுறுப்பாய் உனையியக்கி கடமை முடித்திடல் வேண்டும்!

பள்ளியென்னும் அறிவுக்கோயில் தினம் சென்றிடல் வேண்டும்- நல்ல
பாடமென்னும் கரும்புச்சாற்றைச் சுவைத்திடல் வேண்டும்!
தேர்வில் வென்று முதன்மையாக வந்திடல் வேண்டும்- நல்ல
தேசமதை உயிர் மூச்சாய் நினைத்திடல் வேண்டும்!

-கவிதாசன்-

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# எறும்பின் தீர்ப்பு

அந்த வீட்டு நாய் மிகவும் சோகமாகக் கண்கள் கலங்கியவாறு உட்கார்ந்திருந்தது. அந்த நாயின் சோகத்திற்குக் காரணம் இருந்தது.

அந்த நாயின் எஜமானர் மிகவும் நல்லவர். அவர் நேற்று வெளியூர் சென்றிருந்தார். அவர் பயணம் செய்த பேரூந்து விபத்துக்குள்ளாகிப் பலர் மாண்டனர். அதில் நாயின் எஜமானரும் ஒருவர்.

எஜமானரை இழந்த நாய் எதுவும் உண்ணாமல், கவலை தோய்ந்த முகத்துடன் இருந்தது.

அந்த நாயின் அருகில் எறும்புகள் வரிசையாகச் சென்று கொண்டிருந்தன. துக்கத்துடன் அழுது கொண்டிருந்த நாயை ஒரு எறும்பு பார்த்தது. அது நாயைப் பார்த்து,

"ஏன் சோகமாக அழுது கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டது.

"எனது எஜமானர் நேற்று விபத்தில் சிக்குண்டு இறந்து விட்டார். அதுதான் எனது சோகத்திற்குக் காரணம்," என்று சொன்னது நாய்.

"நன்றியுள்ளவரே! உமது சோகம் எமக்குப் புரிகிறது. என்ன செய்வது? அவருடைய ஆயுட்காலம் முடிந்துவிட்டது. இது இறப்பிற்குரிய வயதல்ல. அவர் என்ன பாவம் செய்தாரோ?" என்று கூறி ஆறுதல் சொன்னது எறும்பு.

"எறும்பே! என் எஜமானரைப் பற்றி உனக்குத் தெரியாது. அவர் மிகவும் நல்லவர்," என்று மறுமொழி சொன்னது நாய்.

"பின்னே ஏன் அவர் சென்ற பேரூந்து விபத்துக்குள்ளானது?" என்று கேட்டது எறும்பு.

"யாரோ சில பாவிகள் அந்த வண்டியில் பயணம் செய்திருக்கலாம். அவர்களுடன் எனது எஜமானரையும் விதி அழைத்துக் கொண்டு விட்டது. இது எந்த விதத்தில் நியாயம்?" என்று கேட்டது நாய்.

"நியாயமில்லைதான்! ஆனால் என்னைப் பொறுத்தவரை நியாயமுள்ளது," என்று சொன்னது எறும்பு.

"என்ன சொல்கிறாய்? சில பாவிகளுக்காக எப்படி நல்லவர்களை அழிப்பது நியாயமாகும்?"

என்று கேட்டது நாய்.

"சென்ற மாதம் உன் எஜமான் இந்த வீட்டின் வாசலில் அமர்ந்திருந்தார். நீயும் அவர் அருகில் இருந்தாய். அப்பொழுது எங்கள் கூட்டத்தில் உள்ள எறும்பு ஒன்று அவரைக்கடித்து விட்டது." என்றது எறும்பு.

"ஆம் எனக்குத் தெரியும்?" என்றது நாய்.

"ஓர் எறும்பு கடித்ததும் அவர் கோபமுற்று, அங்கிருந்த எறும்புக் கூட்டத்தையே மண்ணெண்ணெய் ஊற்றி அழித்துவிட்டார். ஓர் எறும்புதானே அவரைக் கடித்தது. அவர் ஏன் எல்லா எறும்புகளையும் அழித்தார்?" இப்படிக் கேட்டது எறும்பு.

"மற்ற எறும்புகள் இருந்தால் பிறகு கடித்துத் துன்புறுத்தலாம் அல்லவா? அதற்காகத்தான் கொன்றிருப்பார்," என்று சொன்னது நாய்.

"அப்படியானால், இதையும் அவ்வாறே நினைத்துக்கொள். இப்போது நல்லவர்களாக இருப்பவர்கள், நாளை பாவம் புரியலாம் அல்லவா?" என்று எறும்பு சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தது.



## வாரம் ஒரு நாடு
### உக்ரைன்

தலைநகர்- கீவ்
பரப்பு- 6,03,700 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை- 5.14 கோடி
மொழி- உக்ரேனியன், ரஷ்யன்
சமயம்- கிறிஸ்தவம், இஸ்லாம்.
நாணயம்- கார்பொவனட்ஸ்
புதிய நாணயம்- ஹறிவ்னியா
தனிநபர் வருமானம்- 1670 டொலர்.

**அமைவிடம்:**

ஐரோப்பாக் கண்டத்தில் அமைந்துள்ளது. முன்னாள் சோவியத் யூனியனின் அங்கமாக முன்னர் இருந்தது.

**வரலாறு:**

1991 டிசம்பரில் சோவியத் யூனியனில் இருந்து சுதந்திரம் அடைந்தது. உலகின் மிகப் பெரும் அணு விபத்து நடந்த செர்னோபில் உக்ரைனில் தான் உள்ளது.




**பொருளாதாரம்:**

மிகச் சிறந்த விவசாய நிலங்களைக் கொண்டுள்ளது. கோதுமை, புகையிலை. பழவகைகள் மிக அதிகளவில் விளைகின்றன. நிலக்கரி மிக அதிகமாகக் கிடைக்கின்றது. எண்ணெய் வளமும் உண்டு.

## பெங்குவின்

பெங்குவின் பறவை நீரில் வாழக் கூடியது. அண்டார்டிக்கா கண்டத்திலும், அதனைச் சுற்றியுள்ள தீவுகளிலும் பெங்குவின் பறவை காணப்படுகின்றது. அவுஸ்திரேலியாக் கண்டத்திலும், தென் அமெரிக்கா கண்டத்திலும் பரவலாக வசிக்கின்றன.

பெங்குவின் பறவைகளில் 17 வகை உள்ளன. இதில் எம்பரர் பெங்குவின் தான் மிகப் பெரியது. இவற்றின் உயரம் 4 அடி. பெங்குவின் பொதுவாக 16 அங்குலத்தில் இருந்து 4 அடி உயரம் வரையே இருக்கும்.




முட்டை போன்ற வடிவத்தில் இவற்றின் தோற்றம் இருக்கும். உடல் முழுவதும் சிறு இறக்கைகள் காணப்படுகின்றன. இவைதவிர ஒரு சோடி துடுப்புக்களும் உள்ளன. இந்தத் துடுப்புக்கள் நீந்துவதற்கும், கடலில் மூழ்கி எழுவதற்கும் பெரிதும் உதவுகின்றன. நீரின் தன்மைக்கேற்ப இவை இலாவகமாக நீந்தும்.

சிறு சிறு மீன்களைப் பிடித்து விரும்பி உண்ணும் பெங்குவின், நிமிர்ந்த நிலையிலேயே நடந்து செல்லும். இவை கூட்டம் கூட்டமாக வாழும்.

பெங்குவின் மனிதர்களைப் பார்த்தால் ஓடி ஒளியாமல் மெதுவாகச் சுற்றி வந்து அமர்ந்து கொண்டு உற்று உற்றுப் பார்க்கும்.

19ம் நூற்றாண்டில் இவை அதிகமாக மக்களால் வேட்டையாடப்பட்டன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.05.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 193
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 191

பரிசுக்குரியவர்:
தவராஜா ராஜாஜீ,
கம்பளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தமிழ் வித்தியாலயம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி பாத்திமா முப்ராஸா உசைன், மா/ ஆமீனா ம.வி., மாத்தளை | செல்வி லக்ஷினி ரவீந்திரன், விஹார லேன், கொழும்பு-06. |
| பி. பல்லவி, இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலயம், கல்முனை. | செல்வி சுபுகி, வாசல வீதி, கொட்டாஞ்சேனை. |
| பி. டிலிஸா, புனித சவேரியார் மகளிர் பாடசாலை, மன்னார். | ந. கார்த்திக், புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, அட்டன். |
| நௌஷாத் அப்துல்கபூர், தி/ அல்ஹிஜ்ரா ம.வி., முள்ளிப் பொத்தானை. | செல்வன் ஐ. சேதுபதி, மா/ கந்தேநுவர த.வி. அல்வத்த. |
| த. பாபுஜி, தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | ஏ.எம். வஹ்பீக், பு/ எருக்கலம்பிட்டி மு.ம.வி, பாலாவி. |

## புலிமியா

**★ புலிமியா என்றால் என்ன?**
அளவில்லாமல் அடிக்கடி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஒரு வகை நோயின் பெயர்தான் புலிமியா. பொதுவாக 13 முதல் 40 வயது வரை உள்ள பெண்கள் தான் அதிகளவில் இந்நோய்க்கு ஆளாகின்றனர்.



**★ இந்நோய் உள்ளவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?**
நாம் ஒவ்வொருவரும் ஒரு அளவுக்கு மேல் சாப்பிட முடியாது. வயிறு நிறைந்து விட்டால் எழுந்து விடுவோம். ஆனால் இந்நோய் உடையவர்கள் வயிறு நிரம்ப நிரம்ப சாப்பிட்டுக் கொண்டே இருப்பர்.

**★ இப்படி இவர்கள் தொடர்ந்து சாப்பிட்டால் எப்படி உணவு சமிபாடு அடையும்?**
ஒன்று வாந்தி எடுப்பர்; அல்லது மலமிளக்கி மருந்து உட்கொண்டுதான் வயிற்றைக் காலி செய்ய வேண்டும்.

**★ இந்நோயினால் உடல் நிலை பாதிக்குமா?**
ஆம். தொண்டை வலி, வறட்சி ஏற்படும். இந்நோய் உள்ளவர்கள் அடிக்கடி வாந்தி எடுப்பதால், அதில் உள்ள அமிலத்தின் மூலம் பல், ஈறுகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

**★ இந்நோய் எதனால் வருகிறது?**
சிறு வயதுப் பாதிப்புகள், பாரம்பரிய பழக்க வழக்கங்கள், மற்றும் சுற்றுச் சூழ்நிலைகள் தான் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. ஆனால் மருத்துவ ஆய்வின்படி மூளையில் ஏற்படும் ஸ்திரமற்ற தன்மையினால்தான் இந்நோய் வருகிறது என்கின்றனர். எனவே மருத்துவர்கள் மன அழுத்தத்தை நிவர்த்தி செய்யும் மருந்துகளைத்தான் கொடுக்கின்றனர்.

## பத்திரிகைச் செய்திகள்

### அதிக விற்பனை
★ உலகிலேயே அதிகம் விற்பனையாகும் தினசரிப் பத்திரிகை 'யோமுரி ஷிம்பன்' ஆகும். ஜப்பான் நாட்டுத் தினசரியான இது 14 கோடி பிரதிகள் விற்பனையாகின்றது.

### பழமையான பத்திரிகை
★ இன்றுள்ள பத்திரிகைகளில் மிகவும் பழமையானது ரோயல் ஸ்வீடன் அகாடமி வெளியிடும் 'போஸ்ட் டிட்னிங்கர்' ஆகும். இது 1645ல் இருந்து வெளிவருகிறது.

### முதல் தினசரி
★ உலகில் முதன் முதலில் வெளியான தினசரிப் பத்திரிகை 'ட்சிங்பா'. சீனத் தலைநகர் பீக்கிங்கில் 6ம் நூற்றாண்டில் வெளியானது.

### சிறிய பத்திரிகை
★ உலகிலேயே மிகச் சிறிய பத்திரிகை ரோம் நகரில் இருந்து வெளிவரும் 'டயோடியோ டிரோமா' பத்திரிகை ஆகும். இதன் அகலம் 12.7 சென்டி மீட்டர். நீளம் 6.8 சென்டி மீட்டர்.

### அதிகம் படிப்பவர்கள்
★ உலகில் பத்திரிகை படிக்கும் பழக்கம் அதிகம் உள்ளவர்கள் சுவீடன் நாட்டு மக்கள். அங்கு 1000 பேருக்கு 554 பத்திரிகைகள் என்ற கணக்கில் விற்பனையாகின்றன.

## விடுகதைகளும் விடைகளும்


1. மேலிருந்தும் வருவான், கீழிருந்தும் வருவான்.
அவன் யார்?
2. உச்சியிலே கிரீடம், உடம்பெல்லாம் கண்.
அது என்ன?
3. மேலும் கீழுமாய்க் கோடுகள், நனைந்தாலும் அழியாத கோடுகள்.
அது என்ன?
4. இளம் வயதில் பச்சை நிறத்தாள், முதிர் வயதில் சிவப்பு நிறத்தாள், ஆனால் இரண்டு பருவத்திலும் குணம் ஒன்றே.
அவள் யார்?
5. விதையில்லாச் செடி, மழையிலே பிறந்து வெயிலில் காயுது.
அது என்ன?
6. ஆயிரத்தில் ஒருத்தி அவள், ஆயிரத்திற்கும் ஒருத்தி அவள்.
அவள் யார்?
7. கசப்பவன், ஆனால் உடலுக்கு உகந்தவன்.
அவன் யார்?
8. கறுத்த மனிதனின் கண்ணீர் வெள்ளை.
அது என்ன?

**விடைகள்**

1. தண்ணீர் 2. அன்னாசிப்பழம்
3. ரேகைகள் 4. மிளகாய்
5. காளான் 6. ராணித்தேனீ
7. பாகற்காய் 8. கார்மேகம்-மழை

தொகுப்பு: ஏ. நஸ்ரின்.

## 3 இலட்சம் பேர்



சீனப் பெருஞ்சுவரைக் கட்டும் பணியில் 3 இலட்சம் பேர் ஈடுபட்டு, அதை 10 வருடங்களில் கட்டி முடித்தனர்.

## நீர் வீழ்ச்சிகள்

உலகில் உள்ள உயரமான நீர்வீழ்ச்சிகளும், அவை அமைந்துள்ள நாடுகளும், அவற்றின் உயரங்களும் வருமாறு:

| பெயர் | நாடு | உயரம்(மீட்டரில்) |
|---|---|---|
| 1. ஏஞ்சல் | வெனிசுலா | 807 |
| 2. குகேனம் | வெனிசுலா | 610 |
| 3. ரிப்பன் | அமெரிக்கா | 491 |
| 4. கிங் ஜோர்ஜ் IV | கயானா | 488 |
| 5. அப்பர்யோஸ்மைட் | அமெரிக்கா | 436 |
| 6. காவரினே | ஃபிரான்ஸ் | 422 |
| 7. துகேலா | தென்னாபிரிக்கா | 411 |
| 8. உல்லோமோம்பி | அவுஸ்திரேலியா | 335 |
| 9. டக்காங்கொங் | கனடா | 305 |

www.padippakam.com

# அங்கம் 09



# காயத்ரி

## இதுவரை

பழைய புத்தகக்கடையில் அந்த நோட்டுப் புத்தகம் கிடைக்கிறது. கையெழுத்தில் தனது கதையை எழுதியிருக்கிறாள் காயத்ரி. கதையைப் படித்துவிட்டு வந்து தன்னைக் காப்பாற்றும்படி எழுதியிருக்கிறாள். கதை விரிகிறது.

காயத்ரி-ரத்னா என்பவனை மணக்கிறாள். அவன் வீட்டுக்கு செல்கிறாள். ரத்னாவின் நடவடிக்கைகள் புதிராய் உள்ளன. ரத்னாவின் சகோதரி சரசு விதவை. அவளது செயல்கள் சந்தேகம் தருகின்றன. வீட்டு சமையற்காரன் மகள் இந்திராவை உடலில் நகைகளை மட்டும் அணிவித்து நிறுத்தியிருக்கிறாள் சரசு. சிகரெட்டால் இந்திராவின் உடலை சுடுகிறான் அவள் தந்தையான சமையற்காரன்.

கதவு இடுக்கு வழியாக அக்காட்சியைக் காண்கிறாள் காயத்ரி. ரத்னாவிடம் தான் கண்டதை காயத்ரி சொல்கிறாள். சரசை வீட்டை விட்டுப் போகச் சொல்கிறான் ரத்னா. பின்னர் ரத்னாவும், சரசுவும் இரகசியமாகப் பேசுவதைக் கேட்கிறாள் காயத்ரி. எல்லாம் அவர்களின் நாடகம் என்று தெரிகிறது. தன்னை என்னவோ செய்யப்போகிறார்கள் என்று பயப்படுகிறாள் காயத்ரி. வீட்டுக்குப் பின்புறம் அவுட் ஹவுசில் ஒரு பெண்ணை அடைத்து வைத்திருப்பதையும் காண்கிறாள் காயத்ரி. அதிர்கிறாள். அடைக்கப்பட்டிருப்பவள் நிர்மலா என்று அறிய முடிகிறது.

காயத்ரியின் கதையைப் படித்தறிந்த எழுத்தாளர் உடனடியாக கணேஷ்-வசந்த் ஆகியோரின் உதவியை நாடுகிறார். காயத்ரியைக் காப்பாற்றப் புறப்படுகிறார்கள்.

இனி...

"என்ன செய்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அப்புறம் சொல்கிறோம். நாங்கள் பிஸினஸ் பேசுகிற மாதிரிப் பாசாங்கு செய்துகொண்டு இங்கு வந்திருக்கிறோம். நாங்கள் கிளம்புகையில் எங்களுக்கு வழியனுப்ப வருகிற மாதிரி வந்து புறப்படுகிற காரில் பாய்ந்து ஏறிக் கொண்டு விடுகிறாயா?"

"செய்கிறேன்...! செய்கிறேன்.... அப்படியே போட்டது போட்டபடி ஓடிவந்து விடுகிறேன்:" என்றாள். சிறு குழந்தை போல் உற்சாகமாகக் குதித்தாள்.

"எங்கே இரண்டு பேரும் கிளம்புவதாக உத்தேசம்?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால் கையில் ஒரு துப்பாக்கியுடன் சரஸ்வதி!

அந்தக் காட்சியின் முழு அர்த்தம் எனக்குப் பதிவு ஆவதற்குக் கொஞ்சம் செகண்டுகள் ஆயிற்று. வாட்டசாட்டமான சரஸ்வதி கையில் அசந்தர்ப்பமாகத், துப்பாக்கியை வைத்துக் கொண்டு நிற்கிறாள். துப்பாக்கி நிஜம் என்பதில் எனக்கு சந்தேகம் ஏற்படவில்லை. கன்னங்கரேல் என்று பளபளப்பாக, இருட்டு வாயுடன்... அதன் முஞ்சியைப் பார்த்தாலே அதன் உண்மை தெரிந்தது. என்னை நோக்கி நீட்டிக் கொண்டிருந்தது.

சரஸு என்கிறவள் நிதானமாக அதை என் முக்கிய பாகத்தில் குறி பார்த்தபோது எனக்கு வியர்த்து விறுவிறுத்தது. கடன்காரி! எங்கேயாவது ஒன்றுகிடக்க ஒன்று ஆகிவிடப் போகிறது. "வேண்டாம், வேண்டாம்" என்றேன் அவசரத்துடன். தீரச் செயல்களுக்கெல்லாம் என் 'பாடி'யின் லாயக்கற்ற தன்மையை நினைத்து வருந்தி, என் இரண்டு கைகளையும்..... வெட்கமாக இருக்கிறது- ஒரு பெண் எதிரில் ஒரு ஆண் இப்படியா நடுங்க வேண்டும்!

"கணேஷா! வசந்தா!" என்று கூவினேன்!

"எனக்கு அப்போதே சந்தேகமாக இருந்தது. நீ திருதிருவென்று விழிக்கிறதைப் பார்த்தேன். ஏண்டா ராஸ்கல்! அராத்து! என்ன தைரியண்டா உனக்கு? எங்கள் வீட்டில் நுழைந்து என் தம்பி பெண்டாட்டியைக் கடத்திக் கொண்டு போகப் பார்க்கிறாயா? முழங்கால் சில்லைப் பேர்க்கட்டுமா? சப்பையைக் கழற்றட்டுமா... ஒதுங்கு அப்படி! (ஒதுங்கினேன்) மூலைக்குப் போ," (போனேன்) காயத்ரியைப் பார்த்தாள்.

"ஏண்டி ஓடுகாலி! உனக்குப் பாலீஷ் போட்டு வேளா வேளைக்குச் சோறு போட்டு சொகுசாக வைத்துக் கொண்டால், இப்படிக் கண்ட ஆண்பிள்ளைகளுக்கு கடுதாசிகள் எழுதி வரவழைத்து என் தம்பிக்கு மோசம் செய்கிறாயா?"

"தம்பியாம் தம்பி! மடியில் படுக்க வைத்து பால் கொடு. சரஸு! உன் குட்டெல்லாம் அம்பலம் ஆகிற தேதி வந்துவிட்டது. அவர்கள் எல்லாம் ஊர் பெரியமனுஷாள். அவர்களுக்கு இந்த வீட்டில் நடக்கிறது எல்லாம் தெரியும்."

"பெரிய மனுஷன் நிற்கிறான் பார். இடுப்புப் பாண்டைப் பிடித்துக் கொண்டு மூலையில்... இவன் தான் உன்னைக் காப்பாற்றப் போகிறானோ?"

"என்னம்மா சேதி?" என்று அய்யர் வந்தார்.

"வா அய்யர், இந்த ஆசாமியைக் கவனி. காயத்ரியைக் கூட்டிப் போகப் போகிறார்களாம். இந்த அம்மா லெட்டர் போட்டு வரவழைத்திருக்கிறாள். மூன்று பேரும் திருடர்கள்! எங்கே மற்ற இரண்டு பேர்?"

"படம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்." அய்யர் என்னைக் கடுகடு என்று பார்த்தது.

"அவர்கள் படம் பார்க்க வரவில்லை. காயத்ரியைக் கடத்திக் கொண்டு போக வந்திருக்கிறார்கள்."

"நான் அப்பவே நினைச்சேன் சரஸ்வதி அம்மா!"

"நினைச்சே, உன் மூஞ்சி! தரித்திரமே! ஏதாவது செய். அந்தப் பெண்ணைக் கட்டி ரூமுக்குள் தள்ளு."

"செஞ்சால் போச்சு."

"கிட்டே வராதே. கிழித்து விடுவேன் கிழித்து!" என்றாள் காயத்ரி.

"நீ கிழித்தால் நான் தாங்கிக் கொள்கிறேன் காயத்ரி! என் செல்லம்! என் கண்ணு! உன்னை அங்கம் அங்கமாகப் போட்டோ பிடித்திருக்கிறேனே! தெரியாதா உனக்கு! உன்னை எத்தனை நாளாக இப்படிக் கட்டிப் போடக் காத்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? இதோ பார்! இது என்ன! பேனாக் கத்தி. நேத்திக்குத்தான் சாணை பிடித்துக் கொண்டு வந்திருக்கிறேன். டிர்ர்ர்ர்ர்ர் டிர்ர்ர்ர்ர்ர் பொறி பறக்க! இதை வைத்து உன் கழுத்தை கேக் வெட்டற மாதிரி வெட்டலாம். என்னடா சொல்றே சோம்பேறி?"

"அவளை விடு. பாப்பாரப் பயலே அவளை விடு!" என்றேன்.

அய்யர் திசை மாறி நோக்கி, "சரஸ்வதி அம்மா! கீறிப் பார்க்கலாமா கீரணிப்பழம் மாதிரி?" என்றார். அய்யர் செய்வார் போலிருந்தது. கரிமுனிமாதிரி இருந்தார்.

"நீ இவனை விடு. அவளைக் கவனி. கழிசடையை உள்ளே தள்ளு." அய்யர் மிக்க சந்தோஷத்துடன் காயத்ரியை நெருங்கி, அவள் புஜங்களைப் பிடித்துத் திருப்ப, அவள் அவரைக் கன்னத்தில் அடிக்க, அவர் மதிக்காமல் வெற்றிச் சிரிப்புச் சிரித்துச் சரக்கென்று அவள் ரவிக்கையைக் கிழிக்க, அவள் போர்த்திக் கொள்ள, நான் சரஸ்வதியின் துப்பாக்கியை ஒரு கணம் மறந்து அவனை நோக்கி ஓடினேன்.

"டுமீல்!"

நிஜமாகவே வெடித்தது. ஒரு கணம் என்மேல் பட்டுவிட்டதோ என்று பயந்து வெலவெலத்து உறைந்து நின்று உடம்பெல்லாம் பார்த்துக் கொண்டேன்.

சரஸ்வதி, "அடுத்த தோட்டா மேலே படும். குறி தவறாது. இந்த இடத்தை விட்டு நகராதே. ஏய் போடீ உள்ளே. போ உள்ளே!" என்றாள்.

காயத்ரி அறை வாசலில் அடம்பிடித்து நின்றுகொண்டிருக்க, அய்யர் அப்படியே சாஷ்டாங்கமாக அவளைத் தூக்காத குறையாக உள்ளே தள்ள, அந்தப் பெண் அவரைக் கண்ட இடத்தில் நகத்தால் கீற...தடதடவென்று மாடிப்படியில் ஜனங்கள் ஏறிவரும் சப்தம் கேட்டது.

ரத்னா நுழைந்து, "என்ன சரஸு இது? என்ன வெடிச் சப்தம்?" என்றான். அவனுக்கு இரைத்தது. கூடவே கணேஷும் வந்தான். அவன் பின்னால் கூர்க்காவும் கையில் தடியுடன் ஓடிவந்தான். நான், "கணேஷ் ஜாக்கிரதை!" என்றேன். சில செகண்டுகளில் கணேஷ் நிலைமையை உணர்ந்து கொண்டான். அறைக்குள்ளிருந்து காயத்ரியின் அலறல் கேட்டது. கீச்சுக் குரலில் சரஸு துப்பாக்கியை கணேஷின்பால் காட்டி, "அங்கேயே நில்!" என்றாள். அவன் சிரித்து, "தோட்டா இருக்கிறதா?" என்றான். அவள் "காது செவிடா? மறுபடி சுட்டுக் காட்டவா?" என்றாள். "தேவையில்லை" என்றான்.

"என்ன சரஸு? என்ன இதெல்லாம்? இவர்கள் எல்லாம் நம் விருந்தாளிகள்."

"விருந்தாளி! ரத்னா உன்னைப் போல ஏமாளியை நான் பார்த்ததில்லை. மூன்று பேரும் காயத்ரிக்காக வந்திருக்கிறார்கள். அந்தப் பெண் விச்சுளி மாதிரி இருந்து கொண்டு அவர்களுக்குத் தகவல் அனுப்பி வைத்து, அவளைச் சப்தம் போடாமல் கொண்டு போக வந்திருக்கிறார்கள். நீ இவர்களுக்குக் காப்பி கொடுத்து படம் போட்டுக் காட்டுகிறாய். இந்திரா டான்ஸ் வேறு காட்டினாயா? முட்டாள்! பிலிம் வாங்குகிறார்களாம் பிலிம்! எல்லாம் ஏமாற்று வேலை. எங்கே இன்னொருத்தன்?"

"அவன் வாசலில் நிற்கிறான்." என்றான் கணேஷ்.

ரத்னா கணேஷை முறைத்து, "ஏண்டா, ஈஸ்ட் ஆப்பிரிக்காவா? எக்ஸ்போர்ட்டா! ஒரு நிமிஷம் இரு. உன்னைப் பார்ஸல் பண்ணி அனுப்புகிறேன்!" நேராக வந்து புறங்கையால் கணேஷை அடிக்க, அவன் தடுத்து நிறுத்தி, "கைகலப்பு வேண்டாம் அப்புறம் துன்புறுவீர்கள்!" என்றான்.

"என்ன செய்யலாம் இவர்களை?"



## நவீன எழுத்துலக வேந்தன் — சுஜாதா

என்றான் ரத்னா. "ஏன்! பொலிசுக்குப் ஃபோன் பண்ணுங்களேன்." என்றான் கணேஷ்.

அய்யர், "அவுட் ஹவுஸில் தள்ளிக் கதவைச் சாத்தி வைக்கலாம்," என்றார்.

"உத்தமமான காரியம்" என்றான் கணேஷ்.

"வாயை மூடு. வாய்யா அய்யர். நீ இந்த கணேஷைக் கவனித்துக் கொள்! பகதூர்! நீயும் பார்த்துக் கொண்டு இரு.... சரஸ்வதி துப்பாக்கியை விட்டுவிடாதே.... நான் இந்த ஒல்லி ஆசாமியைக் கவனித்துக் கொள்கிறேன். ஏய், நட இரண்டு பேரும்!"

கதவு தடதடவென்று தட்டும் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருந்தது. காயத்ரி களைப்படைகிறாள்.

என்னையும் கணேஷையும் ஒட்ட வைத்து மூன்று பேரும் மரப்படியில் இறங்கினார்கள். துப்பாக்கி என் முதுகில் பதிந்திருக்கக் கீழே இருந்து அந்த இந்திரா பயம் நிறைந்த கண்களுடன் தெரிந்தாள்

"என்னம்மா தக்கத்தை!" என்றான் கணேஷ், படிகளில் இறங்கும்போது. "நீங்கள் செய்வது ரொம்ப முட்டாள்தனமான காரியம். நான் ஒரு வக்கீல், இந்த வீட்டிற்குக் கிளம்புவதற்கு முன்னால் என் நண்பர் பொலிஸ் அதிகாரியிடம் சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். நான் இன்னும் அரை மணியில் வீடு திரும்பவில்லை என்றால் தேடிக்கொண்டு வந்து விடுவார். விலாசம் சொல்லியிருக்கிறேன். இந்தா பார் பெண்ணே! ராத்திரிக்கு ஜெயிலுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்து விடு!"

"நடடா! சும்மா- பேசிக்கொண்டிருக்காதே!"

"முட்டாள்தனமாக மாட்டிக்கொள்ளப் போகிறார்கள்!"

"உங்களை யார் ஒரு இடத்திலேயே அடைத்து வைக்கப் போகிறார்கள்? எங்களைப் பற்றி உனக்குத் தெரியாது... என்ன அய்யர்?"

"காலிப் பசங்களுடன் என்ன பேச்சு? நாளைக்கே குழி தோண்டிப் புதைத்து விடலாம்."

"என்னது?" என்றேன்.

"இந்த வீட்டைவிட்டு உயிரோடு திரும்பிப் போவதாகக் கனவு கண்டுகொண்டிருக்கிறாயா?"

அப்போது கணேஷ் வினோதமாக ஒரு காரியம் செய்தான். மாடிப்படியின் கடைசிப் படியில் அப்படியே உட்கார்ந்து விட்டான்.

"ஏய் எழுந்திரு! மாரில் உதை வேண்டுமா?"

"உதை பார்க்கலாம்!" என்றான்.

உதைத்த ரத்னாவின் காலைக் கவ்விப் பிடித்துக் கொண்டு வாரிக் கவிழ்த்தான். திடீரென்று எழுந்து வாயிற்பக்கம் ஓட, கூர்க்கா அவனைத் துரத்த, அவன் ஹாலைச் சுற்றிவர, அய்யர், எழுந்த ரத்னா, கூர்க்கா எல்லோரும் அவனைத் துரத்தி ஓட..... நானும் சரஸுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு மிக அருகில் தனியாக மாடியருகில் நிற்க, "இவனைச் சுடப்போகிறேன்! இவனைச் சுடப்போகிறேன்!" என்று ஆவேசம் வந்தவள் போல் உரக்கக் கத்தினாள். எனக்கு வெலவெலத்தது. ஏற்பட்ட அசட்டுத் தைரியத்தில் துப்பாக்கியை ஒரு தட்டுத் தட்டிவிட்டேன். அது அப்பால் விழுந்தது. அதை அவசரமாகப் பொறுக்கிக் கொள்ளச் சென்ற சரஸ்வதி, அய்யரின் பேரில் மடேர் என்று சத்தமாக மோதி அப்படியே கீழே விழுந்து தற்காலத்துக்கு மௌனமானாள். கணேஷ் பிடிக்கு அடங்காமல் சுற்றிச்சுற்றி ஓட அவனை அவர்கள் மூவரும் துரத்த American Football மாதிரி இருந்தது. கணேஷ் அய்யரைத் தாவாங்கட்டையில் பலமாகக் குத்த அவருக்கு இரண்டு பல்லாவது வெடித்திருக்க வேண்டும். கணேஷ் சண்டை செய்யும் விதத்தில் அனுபவமும் பயிற்சியும் தெரிந்தது. சந்தர்ப்பம் வரும்வரை பாயலாக் காட்டி ஓடி கிடைத்தபோது செம்மையாகக் கொடுத்தான். அந்தக் கூர்க்காவை மிக அழுத்தமாக வயிற்றில் உதைத்து அவன் அப்படியே சப்பளமிட்டு உட்கார்ந்து கொள்ள, "ரைட்டர் ஸார்! ஓடுங்கள்! வாசலில் கார்! ஓடுங்கள். ஓடுங்கள்!" என்றான். ரத்னாவின் கழுத்தில் மாலைபோல் கையை சுற்றிப் பின்பக்கம் அவன் கையை மடக்கி ஒரு சுழற்று சுழற்றி ரத்னாவைப் பொட்டலமாக மடித்துவிட்டான். அவன் குடிகாரன் போல் சாய்ந்தான். அடிபட்டவர்கள் எழுந்து துரத்துவதற்குள் நாங்கள் ஓடி வாசலை அடைய, வசந்த் காரைக் கிளப் பிக் காத்திருக்க, நாங்கள் காரில் பாய்ந்து விட, கார்க் கதவை மூடுவதற்குள் சர்ர்ர் என்று வளைந்து, ஏழெட்டு பூந்தொட்டி களை உருட்டித் தூள் பறந்து தெருவிற்கு வந்து விட்டோம்.

"Made it" (செய்து விட்டோம்) என்றான் வாயால் மூச்சு விட்டுக்கொண்டு. "சரியான கும்பல்!"

வசந்த், "எப்படி இருந்தது பாஸ்! ரொம்ப ஓடிப்பிடித்து விளையாடினீர்கள் போலிருக்கிறதே?"

"வெறுப்பேற்றாதே வசந்த்!" என்று இரைந்தான்!

"பாவம் காயத்ரி" என்றேன்.

"பாவம் கணேஷ்....! இந்த ஓட்டம் எனக்கு இனித் தாங்காது ரைட்டர் ஸார்...! இந்த மாதிரி ஒரு வீட்டுக்குள் நுழைந்து கண்ட பெண்களைக் காப்பாற்று கிற பிஸினஸ் இனிமேல் வேண்டாம்!"

"நாம் தப்பித்துக் கொண்டு விட்டோம்! இனி அவள்?" என்றேன்.

வசந்த், "பாஸ்! என்ன வினோதமான ஜாயிண்ட் பார்த்தீர்களா? நான் சொன்ன மாதிரியே இருந்தது. பார்த்தீர்களா?" என்றான்.

"என்ன சொன்னாய்?" என்றேன்.

"காயத்ரியின் புஸ்தகத்தைப் படித்ததும் சில பாயிண்ட்ஸ் மட்டும் எனக்குத் தனிப்பட்டுத் தெரிந்தது. பாத்ரூம் கதவின் துவாரம், காயத்ரியின் அடிக்கடி சந்தேகம்... யாரோ என்னைப் பார்க்கிறார்கள்!....அய்யர், "மறுபடி எடுக்க வேண்டுமா" என்று அலுத்துக் கொண்டது.... எல்லாவற்றையும் ஒரு சேரப் பார்த்தால் அவர்கள் ப்ளூஃபிலிம் எடுத்துக் கொண்டிருப்பது சுலபமாகத் தெரிந்துவிட்டது. காயத்ரிக்கு தெரியாமல்... அய்யரின் காமிரா உருண்டிருக்கிறது"

"புரிகிறது" என்றேன்.

காயத்ரி! காயத்ரியைக் காப்பாற்ற முடியவில்லை. காயத்ரி... ஒரு வினோத வீட்டில் வாழ்க்கைப்பட்டு.. சரஸு! ரத்னா! அய்யர்! இந்திரா ஒழுக்கமற்று, செக்ஸ் செக்ஸ் என்று இனக் கவர்ச்சியின் வேட்கையில் இருப்பவர்களுக்காக, அவர்கள் கோரமான, இயற்கைக்கு மாறான வேட்கைகளைத் தணிப்பதற்குப் படம் பிடித்துக் காசு பண்ணும் கூட்டத்தில் வந்து மாட்டிக்கொண்டு, அங்கு நடப்பது என்ன என்றே இனம் புரியாமல் நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்து, அதை அனுப்பி எங்களை வரவழைத்து... சே! காப்பாற்ற முடியவில்லையே! என்ன செய்வோம்!

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எம்.லரீப்.
வயது: 18
முகவரி: 4ம் வட்டாரம், திரேப்பூர்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம்.லோகநாதன்.
வயது: 24
முகவரி: 4, டொரிங்டன் எஸ்டேட், அக்கரப்பத்தனை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை.

பெயர்: பி.ரமனேஸ்வரி.
வயது: 24
முகவரி: 236/8, லேயாட்ஸ் ப்ரோட்வே, கொழும்பு-14.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: கே.ஐங்கரன்.
வயது: 22
முகவரி: SEE STR-80, 8806 BACH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: உதைபந்து, பத்திரிகை

பெயர்: எம்.பர்சான்.
வயது: 26
முகவரி: 70/3, புளுகொஹதென்ன, அக்குறணை.
பொழுதுபோக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: எல்.நஜீமா.
வயது:
முகவரி: 149 எச், கடற்கரைப்பள்ளி வீதி, கல்முனைக்குடி-2.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: ஏ.இஸ்ஹாக்.
வயது: 22
முகவரி: P.O.BOX-18562, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: செய்யுதன் முகமட்
வயது: 27
முகவரி: 32, புங்கா வீதி, இரத்மலானை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: கே.புஷ்பராஜ்.
வயது: 17
முகவரி: டெல்வின் ஏ, இறக்குவானை.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: என்.விஜே.
வயது: 24
முகவரி: 21, காலி வீதி, கொழும்பு-4.
பொழுது போக்கு: வானொலி, பேனாநட்பு.

பெயர்: எஸ்.யோகராசா.
வயது: 32.
முகவரி: 1480, RUE POIRIER # 24 SAINT LAURENT, QUEBEC H4L 1H3, CANADA.
பொழுது போக்கு: பேனாநட்பு, ரீ.வி.

பெயர்: எம்.ரியாஸ்.
வயது: 18
முகவரி: பாடசாலை வீதி, கெகுணகொல்ல.
பொழுது போக்கு: கிரிக்கெட், பேனாநட்பு.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

**புதுமைத் தொடர்**

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான்.

கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள். உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா.

கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள்.

**இனி....**

## அத்தியாயம் 11

**—பிரபஞ்சன்—**

"எனக்கு மூணு மாசம்...." சொல்லி விட்டு, அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள் அவள், பரீட்சை முடிவு சொல்கிற ஆசிரியரைப் பார்த்துக் கொண்டு நிற்கிற பள்ளி மாணவன் போல!

இதயம் திக்திக்கென அடித்



துக் கொண்டது. 'அப்படியா' என்று பொங்கிப் பூரித்துப் புளங்காகிதம் கொள்வான் கணேசன் என்று எதிர்பார்த்து இருந்தாள் அவள்.

"இந்த இழவுக்கு இப்போ என்ன அவசரம்?" என்றான் அவன் நிதானமாக.

ஊறுகாயைத் தொட்டு நாக்கில் வைத்துச் சாப்பிட்டுக் கொண்டு மேலும் சொன்னான்:

"பொம்பிளைக்கு அவசரம் அவசரமா புள்ளை வாங்கிக்கணும். அப்பத்தான், புருஷனை வளைச்சுப் போடலாம்னு நினைப்பு."

சத்தமில்லாமல், ஒரு துப்பாக்கிக் குண்டு அவள் இருதயத்தை ஊடுருவியது போல் உணர்ந்தாள். தலை சுற்றியது. உணவு மேஜையைப் பற்றிக் கொண்டாள்....

ஆறடி உயரமும், அகன்ற பயிற்சி செய்கிற உடம்பும், ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற அறிவும், பேராசிரியர் என்கிற பெரும் பதவியும் கொண்ட ஒரு மனிதன், இரவலன் போல தன் முன் இறைஞ்சி நிற்பதைப்பார்க்க மனசுக்குள் கருணை சுரந்தது சுமதிக்கு.

"நான் உன்னை விரும்புகிறேன் சுமதி...." என்கிற வார்த்தைகளைக் கணேசன் இது வரை நூற்றுப்பத்து முறை சொல்லியிருந்தான். நேரில் சொன்னான்; டெலிஃபோனில் சொன்னான்; கடிதம் மூலமாகச் சொன்னான்.

"யோசிக்கிறேன்" என்பது ஒன்றே சுமதியின் பதிலாய் இருந்தது.

"இதில் யோசிக்க என்ன இருக்கிறது?" என்றான் கணேசன்.

என்ன மூடன் இவன்? இது குறித்து யோசிக்காமல், வேறு எது குறித்து ஒரு பெண் யோசிப்பது? மத்தியானம் என்ன டிபன் என்பது குறித்தா?

வாழ்க்கை! கணேசன் இது வாழ்க்கை! என்னை உங்களிடம் ஒப்புவித்துக் கொள்வது பற்றி நான் யோசிக்க வேண்டாமா? என்னுடைய சந்தோஷங்களை, என் கனவுகளை, என் சகலத்தையும் உனக்குத் தாரை வார்த்துக் கொடுப்பது அல்லவா திருமணம்? என் சந்தோஷங்களைப் பெருக்கி இரண்டாக்கி; பத்தாக்கி, நூறாக்கி, கோடியாக்கி திருப்பி எனக்கே நீ தருவது அல்லவா தாம்பத்யம்! என் கனவுகளுக்குப் பூச்சூட்டி, சீவிச்சிங்காரித்து, அலங்கரித்து, அவைகளை மெய்யாக்கி எனக்கே தருவது அல்லவா தாம்பத்யம்?

நான் கண்ணாடிப் பாத்திரம், என்னை நீ உடைக்காமல் கையாளுவாயா என்று நான் யோசிக்க வேண்டாமா? கணேசன் கைகூப்பிக் கொண்டு நின்றான் அவள் முன். தொழுத கையுள்ளும் படை உறங்கும். கும்பிட்ட கைக்குள் குறுவாள் ஒளிந்திருக்கும் என்பது அவளுக்குத் தெரியாமல்தான் போய்விட்டது.

☆ ☆ ☆

**ஓர்** அழகிய நந்தவனம். வானத்தை அளாவி மரங்கள் அடர்ந்திருந்தன. அந்த நந்தவனத்தில், குரோட்டன்ஸ் செடிகளின் அகன்ற பெரிய இலைகளைப் போன்று அந்த மரங்களின் இலைகள் விளங்கின. மண்ணில் காண முடியாத பூக்கள், விசித்திர விசித்திர வண்ணங்களில் பூத்திருந்தன. அதெல்லாம் ஆச்சரியமில்லை. ஆயிரம், லட்சம் கோடி என வண்ணத்துப் பூச்சிகள் குபீரென்று சூரிய ஒளியையும் மறைத்தபடி அணையை உடைத்துக் கொண்டு பீறிடும் ஆற்று வெள்ளம் போல ஆகாயத்தைச் சூழ்ந்தன. சுமதி விழி அகலப் பார்த்தாள். கண்ணைக் கிழிக்கும் வண்ணங்கள்! உலகத்து வண்ணங்கள் அனைத்தையும் தன் ஒரே சிறகில் வைத்துக்கொண்டது போல், ஒவ்வொரு வண்ணத்துப் பூச்சியும் வண்ணக் குமிழிகளில் தோய்ந்து வந்தாற்போல் பறந்தன. சுமதி, அந்த வண்ணத்துப் பூச்சிகளின் குவியல்களில் கலந்து கொள்ளவென ஓடுகிறாள். மண்ணில் மட்டுமே அவள் பாதங்கள் நிலைத்திருக்கின்றன. பறக்க நினைத்து, கைகளை இரு புறமும் வீச முயல்கிறாள். கைகள் சிறகாகுமா என்ன? அவளால் முடியவில்லை. சோர்ந்து நிற்கிறாள்....

விழித்துக் கொண்டாள் சுமதி. சுற்றிலும் இருட்டு மட்டுமே அவளைச் சூழ்ந்திருந்தது. கையெட்டும் தூரத்தில் கல்பனா படுத்திருந்தாள். தெருவில், மணிச்சத்தம். மாடுகள் கழுத்து மணி ஓசைதான். விடியப் போவதை இந்த ஊர் இப்படித்தான் வெளிப்படுத்துகிறது. பறவைகளின் கூக்குரலுக்குப் பிறகு எழும் மணிச்சத்தம். சாணம் தெளிக்கிற சப்தம். பரபரவென்று தெருப் பெருக்கும் சப்தம். மண்ணை அரைத்துக் கொண்டு சுற்றும் வண்டிச் சக்கரத்தின் சப்தம். மாடுகளின் முலைக்காம்பிலிருந்து இரும்புக் குவளைகளில் பீச்சி அடிக்கும் கறவைச் சப்தம். ஆற்றங்கரைக்குப் போகும் ஆண்களின் புழங்கும் சப்தம். இன்னவித ஓசைகளே சுமதியை எழுப்பும் சப்தமாக விளங்குகின்றன. குளியல் அறைக்குச் சென்று முகம் கழுவித் திரும்பினாள். மொட்டை மாடியில் கைப்பிடிச் சுவரை ஒட்டி நாற்காலியைப் போட்டுக்கொண்டு அமர்ந்தாள். காலைப் பத்திரிகை இன்னும் வந்திருக்கவில்லை. வானத்தில், சூரிய வருகைக்குக் கட்டியம் கூறுவதுபோல், மஞ்சள் வெளிச்சச் சிதறல்கள் தோன்றத் தொடங்கியிருந்தன. முந்தின இரவு கல்பனா அவளிடம் சொன்னது, ஏனோ மீண்டும் மீண்டும் அவள் மனதில் தோன்றிக் கொண்டேயிருந்தது.

"நீ அவனை, அவ்வளவு சுலபமாக, உடனே, உன்னிடம் அனுமதித்திருக்கக் கூடாது. அவன் உன்னை மலிவாக எடை போட நீயே ஒரு வகையில், காரணமாகி விட்டாய்," என்றாள் கல்பனா. இரண்டாம் இரவன்று, கணேசனுக்கும் சுமதிக்கும் மருத்துவமனைக்குள் நடந்த கூட்டத்தைத்தான் சொன்னாள் கல்பனா. கணவனைப் புறக்கணித்து வந்து விட்டபின், இந்தப் பத்தாண்டு மணவாழ்க்கையில், ஒன்றன்பின், ஒன்றாய் நடந்து முடிந்த பல நிகழ்ச்சிகளை, நினைவுகூரும்போது கல்பனா சொல்வதில் பசை இருக்கிறதெனவே சுமதிக்கும் தோன்றியது. ஆயினும் சுமதி அவளுக்குச் சொன்னாள்:

"கல்பனா! நீ சொல்வது ஒரு வகையில் சரி, ஒரு வகையில் தவறு. ஒரு ஆளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், ஒரு பெண் தன்னை அவனுக்கு முழுமையாக ஒப்படைப்பது தவறுதான் என்று எனக்குப் புரிகிறது. ஆனாலும், அந்தச் சந்தர்ப்பத்தை நினைத்துப் பார் கல்பனா: நான் அவரை முழுமையாக நம்பினேன். நான் அவரை விரும்பவும் செய்தேன். விரும்பாமல், நான் என்னை அவருக்குக் கொடுத்துவிடவில்லை. அந்தச் சமயத்துக்கு நான் நிஜமாகத்தான் இருந்தேன். அவர் அப்படி இல்லாததற்கு நான் என்ன செய்யட்டும்? தவிரவும், சில பெண்கள் செய்வதுபோல், நான் அவரை ஏங்க வைக்கவில்லை. என் பின்னாடி அலையச் செய்யவில்லை. பிகு பண்ணிக்கொள்ளவில்லை. இழக்கக் கூடாததை நான் இழக்கிறேன் என்பது போல் பாவனை பண்ணி, அவரைக் குற்ற மனப்பான்மைக்கு ஆட்படுத்தவில்லை. அவர் என்னிடம்தானே என்னைக் கேட்க முடியும், கல்பனா? நான் தானே அதைத் தர முடியும்? நானும் அவரை விரும்புகிற போது, நான் இந்தச் சங்கமத்தை எந்தக் காரணம் சொல்லி மறுப்பது? ஏன் மறுக்க வேண்டும்? உடம்பு, இன்னும் நெருக்கமாகக் கொண்டு வரும் எங்களை என்று எதிர்பார்த்தேன். தாம்பத்யம் என்பது, உடம்பின் மூலம் உடம்பைக் கடப்பதும், உடம்பின் மூலம் மனதால் இணைவதும், இரண்டை ஒழித்து ஒன்றாவதுதானே? எங்காவது, அடி எடுத்து வைத்து நடக்கத் தொடங்க வேண்டும் தானே; நான் அதை என் தொடக்கம் என்று நினைத்தேன். அவர் அதையே அதன் முடிவு என்று நினைத்தால், அது என் தவறாகுமா? சொல்,"

"சரிடி... காரியம் முடிந்ததுமே, அதுவரை 'நீங்கள்' என்று மரியாதையாகப் பேசிக் கொண்டிருந்தவன், 'நீ' என்று உன்னைக் குறிக்கத் தொடங்கினானோ, அப்போதாவது நீ விழித்துக் கொள்ள வேண்டாமா?"

"நான் வேறு மாதிரி நினைத்தேன், கல்பனா, முதலில் 'நீ' என்று என்னை அவர் அழைத்ததைக் கேட்டதும், மனசுக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. அது உரிமையால் ஏற்பட்ட ஒருமை என்று நினைத்தேன். கடவுளை நாம் அவன், அவள் என்று சொல்வதில்லையா? அதுமாதிரியாக்கும் என்று நினைத்தேன். அப்புறம்தானே, தெரிந்தது, அது எஜமானன்- வேலைக்காரனைச் சொல்கிற 'நீ' என்று."

கல்பனா எழுந்து கொண்டே சொன்னாள்,

"பல்லி தெரியுமல்லவா பல்லி? உத்திரத்தில் படுத்தவாறே ஊருமே, பல்லி. அது ஊருக்கெல்லாம் வருவது உரைக்கும்; ஜோசியம் சொல்லும். ஆனால், கீழே இருக்கிற கழுநீர்ப்பானை தெரியாமல், அதற்குள் விழுந்து மரிக்கும்."

"அது மாதிரி?"

"உங்களைப் போன்றவர்கள், எட்ட, எட்ட தூரம் தூரமாய்ச் சிந்திப்பீர்கள். காலடியில் நிழல் விழுவது தெரியாது உங்களுக்கு...!"

காலை முற்றாக விடிந்து விட்டிருந்தது.

"என்னடி...சீக்கிரம் எழுந்திட்டியா?" எனக் கேட்டுக் கொண்டே வந்த கல்பனா, சுமதியின் எதிரில், தரையில் கைப்பிடிச் சுவரில் சாய்ந்தவாறு அவளைப் பார்த்து அமர்ந்தாள்.

"தூக்கம் வரலை...."

"கவனிச்சேன். புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாய்."

"ஊருக்குப் போக வேண்டும், கல்பனா! அப்பா, அம்மா, குழந்தைகள் எல்லோரையும் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது."

"ஏன், நான் அலுத்துவிட்டேனா?"

"சீ..... நான் அவரை விட்டு வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. விஷயம் அப்பா அம்மாவுக்குக்கூடத் தெரிவிக்காமல் இருந்தால் சரியா?"

"எப்போது புறப்பட உத்தேசம்?"

"இன்று காலை செக்ரட்டரியைப் பார்த்து, அல்லிக்குளம் குடிவாசிகள் விஷயமாப் பேசணும். இரவு புறப்படலாமா என்று யோசிக்கிறேன்."

"சரி இரவு ரயிலுக்கே டிக்கெட் எடுக்கச் சொல்கிறேன். ரயில் பிரயாணம் தானே உனக்கு ரொம்பப் பிடிக்கும்?"

சுமதிக்கு உடனடியான மேல் அதிகாரியான அந்த செக்ரட்டரி, எல்லா அதிகாரிகளையும் போலவே, உடல் பருத்தும், முன் வழுக்கையோடும், வீங்கிய கண்களோடும், மஞ்சள் கறையேறிய பற்களோடும், உடம்பைப் பிடிக்கிற சட்டையோடும் இருந்தார். அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் சுமதி.

**(தொடர்ந்து வரும்)**

# ஒரு தலைக் கவிதை

**கல்வியூர்ச் சந்திரன்**

**"நீயா எழுதினாய்?"**
**"ஆம்!"**
**"யாருக்கு?"**
**"தெரியாது!"**

பொலிஸ் நிலையத்திலே விசாரணைக்காகச் செல்வோர் அமர்வதற்காக ஒரு ஓரத்தில் போடப்பட்டிருந்த வாங்குகளில் பலர் அமர்ந்திருந்தார்கள்.

கண்ணன் உள்ளே நுழைந்ததும், "அத்தன கீகீலா வாடி வென்න" (அங்கு போய் இரு) என்றார் ஒரு பொலிஸ்காரர். மெதுவாக அவர் குறிப்பிட்ட வாங்கினிலே கண்ணன் போய் அமர்ந்துகொண்டான்.

அவனைப் பொலிசார் ஏன் அழைத்தார்கள் என்பது, இன்னுங்கூட அவனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் உருண்டுவிட்டன. சூரியனும் மறுவீட்டுக்குப் போக இன்னும் ஒருசில நிமிடங்களே இருந்தன. சிகரட் புகைக்கும் பழக்கமுள்ள கண்ணனுக்கு ஒரு தம் இழுத்துப் பார்க்க ஆசைதான். ஆனால் அடி உதையேதும் விழுமோ என்ற பயம். அந்த ஆசையையே விட்டுவிட்டான்.

"கவ்த கண்ணன்?" (யார் கண்ணன்?) என்று விசாரித்த ஒருவன் கண்ணனை பொறுப்பதிகாரியின் அறைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்வரை ஒரு ஊமையின் நிலையில் அவன் சென்றுகொண்டிருந்தான்.

பொறுப்பதிகாரியின் அறைக்குள் சென்ற கண்ணனைப் பார்த்த அந்தப் பொறுப்பதிகாரி.

"ஆ... தம்ஸத தக்ஸக பண்டிதயா? என்ன.. என்ன ஹோமத தமுணான்ச லாகே கவி?" (நீ என்ன பெரிய பண்டிதரா? தமிழரின் கவிதை எப்படி?) என்றான் கேலியாக.

வேப்பிலையைக் கையிலெடுத்தபின் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவனின் நிலை' அவனுக்கு. கையும் காலும் மந்திரத்தால் உருக்கொடுத்த நிலை.

"சிங்களம் தெரியுமா?" என்று பொலிஸ் அதிகாரி கேட்டதும், அவன் தெரியாது என்றே தலையை ஆட்டினான். பொலிஸ் பொறுப்பதிகாரி நன்கு தமிழ் தெரிந்தவர் என்பதைக் கண்ணன் எளிதில் புரிந்து கொண்டான்.

"ஒனக்கு எத்தன புள்ளைகள்?" என்று கண்ணனிடம் பொறுப்பதிகாரி வினவினான். கை விரல்களாலும், தமிழ் வார்த்தையாலும் மூன்று என்று அவன் புலப்படுத்தினான்.

"பெஞ்சாதி இரிக்கி, மூணு புள்ள இரிக்கி ஒனக்கு புதுப் பொண்ணு வேணுமா?.." என்று கேட்டான் அந்தப் பொறுப்பதிகாரி கண்ணனிடம். கண்ணன் மலைத்துவிட்டான். "ஸேர்... நா.ன்.. நீங்க.. கேக்கிறது எனக்கு புரியல்ல..." என்று பதில் கூறிக்கொண்டிருக்கும்போது, கண்ணனின் ஊரைச் சேர்ந்த பாஸ்கரனும் அவன் தங்கை நளினியும் அதிகாரியின் அறைக்குள் வந்தார்கள்.

"அவள் தெரியுமா?.. அவன் தெரியுமா?" என்று வந்தவர்களைக் காட்டிக் கொச்சைத் தமிழில் கண்ணனிடம் கேட்டார் பொறுப்பதிகாரி.

"அது பாஸ்கரன், எங்க ஊரு...., அவ பாஸ்கரனோட தங்கை... அவ பேரு எனக்குத் தெரியாது."

"அடோ அத்த கியண்ண ஒண ஹரி... நத்தங் கூடுவட தாணவா தேருணாத? (உண்மையைச் சொல்லு. இல்லை கூண்டுக்குள் போட்டு விடுவேன் தெரியுமா?) இப்ப சொல்லு.. அவ பேரு என்ன?" பொறுப்பதிகாரி கேட்டார்.

"எனக்குத் தெரியாது ஸேர்" கண்ணனின் பதில் இது.

பொறுப்பதிகாரி என்ன வேகத்தில் எழுந்தான், எப்படி அறைந்தான் என்றே கண்ணனுக்குப் புரியவில்லை. கன்னம் விறைத்தது கண்ணனுக்கு. காது இனிக் கேட்காது என்ற நிலை. ஆனால் அவர் சிங்களத்தில் போட்ட போடு அவனுக்குப் புரிந்துவிட்டது.

அதே வேகத்திலே ஒரு கடிதத்தைத் தூக்கி வீசினான் கண்ணனின் முகத்துக்கு அந்த அதிகாரி. அது காற்றாடியின் காற்று விசையில் வெகுதூரம் சென்று அறைச் சுவரோடு ஒட்டிக்கிடந்தது. ஓடிச்சென்ற பாஸ்கரன் அதையெடுத்து கண்ணனிடம் கொடுத்தான்.

கடிதத்தைப் பார்த்ததும்தான் கண்ணனுக்கு தான் பொலிஸ் நிலையம் வந்த கதை புரிந்தது.

ஆமாம்! சவுதி சென்று திரும்பி ஊருக்கு வந்திருந்த குமார் என்பவன், நளினி என்ப



வள் தன்னை விரும்புவதாகவும், அவளுக்குக் கவிதை நல்ல விருப்பம் என்றும் கூறி தன்னிடம் ஒரு காதல் கவிதையொன்று எழுதிக்கேட்டதும் இப்போதுதான் கண்ணனுக்குப் புரிந்தது.

கண்ணன் கவிதையைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே நளினியின் அண்ணன் பாஸ்கரன் "ஸேர் இது இவனோட எழுத்துதான்" என்றான்.

'அந்தப் பாவி குமாரிடம் நான் நளினி யார் என்று கேட்டிருந்தேனே. அதற்கு அவன் சவுதியில ஹவுஸ் மேய்ட்டா வேல செய்யிறவ எண்டு சொன்னானே. படு பாவி என்னை இப்படி மாட்டிப்போட்டுப் போயிட்டானே,' என்று மனதுக்குள் பதறினான் கண்ணன்.

"அடோ இது நீதானே எழுதினது?" என்ற அதிகாரியின் கேள்விக்குக் கண்ணனது பதில், "ஆம்" என்றே வந்தது. "இந்தப் பொண்ணுக்குத்தானே?" என்ற கேள்விக்கு அவனது பதில் "எனக்குத் தெரியாது ஸேர்."

மீண்டும் அதிகாரியின் அறையொன்று கண்ணனின் கன்னத்தைப் பதம் பார்த்தது.

"இப்படி கவி எழுதின ஒனக்கு நான் கேக்கிற கேள்வி விளங்குதில்ல மோடயா? இப்ப சொல்லு அந்தக் கவி எழுதுனது நீதானே?" "ஆம் ஸேர்" என்றான் மீண்டும் கண்ணன்.

"அப்புடீண்ணா இந்தப் பொண்ணுக்குத்தானே நீ எழுதினே?"

"எனக்குத் தெரியாது ஸேர்"

இது கண்ணனின் பழைய பதில் தான். பொறுப்பதிகாரியின் கைச் சைகையின் கட்டளைப்படி கூண்டு திறந்தது.

சுவாசப்பை விரிந்து சுருங்குவது போல விரிந்து சுருங்கியது அந்த உண்மைக்கும் தண்டனை கொடுக்கும் கைதிக்கூண்டு, அங்கு இரவு முழுவதும் மௌனக் கவிதை கேட்பதற்காக.




படிப்பகம்

# விட்ட குறையோ... தொட்ட குறையோ...!

ஜெயமணி

பேரனைப் பார்க்கப் போய்த் திரும்பிய முத்தம்மாப் பாட்டிக்குள் பயம் புகுந்து பலவிதமாக அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

கொண்டுபோன கையோடு முகுந்தனைப் பார்த்ததுதான்; இன்றுடன் நான்கு நாட்களாகி விட்டது. அங்கே, இங்கே என அலைந்து களைத்துப் போனாள். மகன் குடும்பம் ஊரில் இருந்தும் தனியாகப் பேரனுடன் ஒதுங்கிக் கொண்டாள். காணி விசயத்தில் மகன் குடும்பத்துக்கும் முகுந்தனுக்கும்

"மயங்கிச் சாய்ந்து கொண்டிருந்தான் மகன். பாய்ந்து போத்தலைப் பிடுங்கினர் இராணுவத்தினர்"



சம்பத்தில் ஏதோ கருத்து மோதல், நிறைய மனஸ்தாபம், பேச்சுவார்த்தை கிடையாது. தனியாக பேரனை மீட்டுவிட அலைந்தாள். பலன் கிடைக்கவில்லை.

'என்ன ஆகுமோ?' நினைக்கவே நெஞ்சுக்கூடு வெடிக்கிறாப்போல இறுக்கம் முறுக்கியது.

இதே போலத்தான் எண்பத்தேழில் அவள் மகன்- முகுந்தனின் தந்தையைக் கூட- யாரோ தகவல் கொடுத்ததன் பேரில், யாழில் அப்போதிருந்த இந்தியப் படையினர் விசாரணைக்கென அழைத்துப் போனார்கள்.

விசாரணையா அது? ஒன்றுமறியாத அப்பாவிகளைப் பண்ணிய சித்திரவதைகளில் முகாமுக்கு முகாம் எழும் கூக்குரல் வானைப் பிளந்து கொண்டிருந்தது.

முகுந்தனின் தந்தையின் கால் பெருவிரல்களை நைலோன் கயிற்றால் கட்டி, தலைகீழாகத் தொங்கப்போட்டு ஊஞ்சலாக பக்கத்துக்கொருவன் நின்று முட்டித்தள்ளியதில் உயிரை வெறுத்துக் கதறினான்.

பசிக்கு உணவு கொடுத்ததைத் தவிர வேறொன்றும் அறியாத அவனிடம், ஆயுதங்கள் பதுக்கியிருக்கும் இடத்தைச் சொல்லெனக் கேட்டு வதைத்தெடுத்தபோது. அவன் எதைக் கொடுப்பது?

மறுத்தபோது நம்ப மறுத்தவர்கள் மேலும் மேலும் தோலை உரித்துக் கண்டம் போட்டார்கள். 'போற உயிர் விரைவாகப் போய்விட்டால்...'

அவன் சொன்னான்:

"என்னைக் கூட்டிப்போங்க-காட்டுறன்."

திடீரென ஜீப் வண்டிகள் வந்து புழுதியைக் கிளப்பிவிட்டு நின்றபோது சிறுவன் முகுந்தனும், மருமகளும் பயந்து உள்ளே ஒண்டிக்கொண்டு நடுக்கமாக நின்றனர். முத்தம்மாள் மட்டும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

மகன் இந்திய இராணுவம் புடைசூழ இறங்கினான். சிலர் திடு திடுவென தோட்டத்துள் ஓடி மூலைக்கொருவராகப் பதுங்கினர். கைகளிலிருந்து துவக்குகள் மையப் பகுதியைக் குறிபார்த்துக் கொண்டிருந்தன.

புரியாத குழப்பத்துடன் என்ன நடக்கப் போகுதோ எனப் பார்த்தாள், விழி வாங்காமல்.

மகன் மண்வெட்டியால் வறட்டு வறட்டெனத் தோண்டினான்.

மண்ணைத் தோண்டும் போது நிஜமாகவே ஆயுதக்கிடங்குதானென நினைத்தனர். எதையாவது வெடிக்கிறாப்போல செட்டிங்கிலை வைத்திருந்தால்...? தங்களைப் பாதுகாக்கும் நோக்குடனும், புலியைப் பிடித்து விட்ட இறுமாப்புடனும் சற்று- எட்டத்தில் நின்றனர். அதனால் அவன்- செய்கையை அவர்களால் தடுக்க இயலவில்லை.

சில நிமிடங்களில் எழுந்த அமளியில் அவளுக்குத் தெரிந்து போயிற்று ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என்று.

என்ன அது...?

அங்கே மயங்கிச் சாய்ந்து கொண்டிருந்தான் மகன். பாய்ந்து போத்தலைப் பிடுங்கினர் இராணுவத்தினர். மிளகாய்ச் செடிக்குத் தெளிப்பதற்காகப் பத்திரப்படுத்தியிருந்த கிருமி நாசினிப் போத்தல். துளிகூட மிச்சம் வைக்கவில்லை மகன்.

"ஐயோ மகனே என்ன காரியமடா இது?" என்று அவள் அலறிய குரல் கேட்டு ஓடிவந்த மருமகளும், பேரனும் அவன்மேல் விழுந்து கதறினர்.

அமைதிகாக்க வந்த அமைதிப்படை அமைதியாக அந்த இடத்தை விட்டு, அகன்றது. இப்படி எத்தனை கெட்டிக்காரத்தனங்களைப் புரிந்தது அது. இரண்டாண்டுகளில் மருமகளும் ஷெல் பட்டு இறந்து போனாள்.

தத்தமது சுய நலன்களுக்காக இல்லாத வதந்திகளை வத்திவைத்து இன்றுவரை என்னத்தைக் கண்டார்கள்? தேடிப்போனால் எல்லோருமே இழப்புக்களின் தலைவாசலில்தான் நிற்பார்கள்.

தமக்குத்தாமே குழிதோண்டுவதை மறந்து, தகவல் கொடுத்து, சொந்தக் கோபதாபங்களைச் சாதித்து, இரத்தப் பழிதேடுகிறார்களே!

'அழிவது யார்? நம் சொந்தங்கள்தானே? பத்து வருடங்கள் கடந்தும், பலவிதமான இழப்புக்களைச் சந்தித்த பின்னரும் இப்படி நடந்து கொள்வதென்றால் அது சாபக்கேடுதானோ? அப்பிடியென்றால் இந்த இனத்தை ஒருமித்தே அழித்துவிட்டால் நல்லது!' பட்ட கசப்பான வேதனைகளில் மிஞ்சிய வெறுப்பு அவளை அப்படி நினைக்க வைத்தது.

பிடித்துப் போனவனை எங்கேயென்று சொல்லாமல், காண்பிக்காமல் மறைத்து சாக்குப் போக்கு சொல்கிறார்கள். மறைத்து வைத்திருப்பதாக எண்ணி மனசைத் தேற்றிக் கொண்டு அலைவதிலேயே ஆத்மதிருப்திப் பட்டவர்களாக தம்மை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? கண்ணீரும் சோறுமாக உயிர் வாழ்பவர்கள் கணக்கு எத்தனை?

இன்னொரு கூட்டெண்ணாக அவனும் சேர்ந்து விடுவானோ? எண்ணமே நடுங்க வைத்தது. தூங்க முயன்றாள், அது தொலை தூரமாகிப் போய் நாளாச்சுது. எழுந்து சென்று பச்சைத் தண்ணீரை மொண்டு குடித்தவள் மீளவும் படுக்கையில் சரிந்தாள்.

ஏனோ நெஞ்சு பதறத் தொடங்கியிருந்தது. வேண்டாத நினைவுகள் நாடி நரம்புகளில் பின்னி படபடப்பை ஏற்படுத்தியது. பயம் பிறந்தது. எழுந்து உட்கார்ந்தாள். எத்தனை நேரம் குந்தியபடி இருந்தாளோ தெரியவில்லை. கால்களில் விறைப்புப் படர்வதுபோலிருந்தது. நீட்ட முற்பட்டபோது கதவைப் பலமாகத் தட்டும் ஓசை கேட்டது. 'என்ன செய்தியோ, எவருக்கு என்னென்னவோ' ஏங்கித் தவிக்கும் காலம் ஒரு கணம் மூச்சை இழுத்து நிறுத்தியது. தள்ளாடிய வண்ணம் கதவைத் திறந்தாள்.

"பாட்டி! உங்க மகனோட பையன் கருணாவை தகவல் சொன்னதுக்காக கம்பத்தில் சுட்டுத் தொங்கவிட்டிருக்காங்க."

செய்தி கேட்டு நொடியில் முத்தம்மாள் உடைந்து நொறுங்கினாள்.

"ஐயோ, ஆருக்காக அழுறது? பாவி பெத்த பிள்ளைகளா கண்டதென்னடா....? ஒருத்தரை ஒருத்தர் பலி கொடுத்து, உங்களை நீங்களே அழிச்சு எதைச் சாதிச்சீயள்? பாவிகளே பழிகொடுத்துட்டுப் பதறி நிப்பது யாரு, யாருடா? பா...வி....பா.... நா...நா..."

மேலே பேசச் சக்தியற்ற முத்தம்மா நினைவை இழந்து மயங்கிச் சரிந்து கீழே விழுந்தாள்.

# தப்புக் கணக்கு!

**அவன் அவளை நெருங்கினான். அவள் கோபத்துடன் அவனை நோக்கினாள்.**

நிர்மலா- தீர்மானித்துவிட்டாள். விடக்கூடாது. இப்படியே விட்டால் அவளுக்குத்தான் பின்பு கெட்ட பெயர். இரண்டிலொன்று பார்த்துவிட வேண்டும்.

கடந்த ஒரு வாரமாக அவளும் கவனித்து வருகிறாள். அவள் போகுமிடமெல்லாம் அவன் அவளை பின் தொடர்கிறான். பஸ்ஸிலும் அவளுடன் பயணம் செய்கிறான். அவனை இதற்கு முன் அவள் பார்த்ததில்லை.

நிர்மலா தனியார் நிறுவனமொன்றில் எழுதுவினைஞராக பணிபுரிகிறாள். அப்பா மட்டுமே இருக்கிறார். அவரும் மிகவும் கண்டிப்பானவர். ஓய்வு பெற்ற அரசாங்க பாடசாலை அதிபர். வேறு உடன்பிறப்புக்கள் எவரும் இல்லை. நிர்மலா ஒருவனை மனதார நேசித்து வந்தாள். ஆனால் அதை அப்பாவிடம் சொல்ல பயம். அவளின் அப்பாவுக்கு இந்தக் காதல் கத்தரிக்காயெல்லாம் சுத்தமாகப் பிடிக்காது.



—பாலா. சங்குப்பிள்ளை—

அவள் பஸ்ஸைவிட்டு இறங்கினாள். அவனும் இறங்கினான். அந்த இடத்தில் அவ்வளவாக கூட்டமிருக்கவில்லை. அவள் மெதுவாக நடந்தாள். அவனும் தயங்கித் தயங்கி நடந்தான். அவள் சட்டென நின்றாள். திரும்பிப் பார்த்தாள். அவன் கையில் ஒரு கடிதத்துடன் அவளை நோக்கி நடந்து வந்தான்.

அவளுக்கு கோபத்தால் முகம் சிவந்தது. 'என்ன தைரியம்? இவ்வளவு நாள் வார்த்தைகளால் சொல்ல முடியாததை கடிதத்தில் எழுதிக் கொண்டு வருகிறானோ? வரட்டும், நாக்கைப் பிடுங்குவதைப் போல நாலு வார்த்தை சொல்லி விடவேண்டும்.....!'

அவன் அவளை நெருங்கினான். அவள் கோபத்துடன் அவனை நோக்கினாள்:

"ஏய் மிஸ்டர், நானும் பார்த்துக்கிட்டுத்தான் வாரேன். ரொம்ப அநாகரிகமா நடந்துக்கிறீங்க. உங்களுக்கு வேற வேலையில்லையா? வேட்டை நாயாட்டம் என்னையே சுத்தி வாரீங்க. பெண்கள்னா வெறும் கிள்ளுக்கீரை, உங்கள மாதிரி ஆம்பளைங்க எதை சொன்னாலும் செய்வாங்கன்னு நினைச்சீங்களா? அதுக்கு வேற ஆளை பாருங்க. பார்க்க டீசண்டா இருக்கீங்க. ஆனா ரொம்ப மோசமா நடந்துக்கிறீங்க.... இதுமாதிரி வேற யார்க்கிட்டயும் செஞ்சு மானம் மரியாதையை இழந்துக்காதீங்க...!"

அவள் படபடவென வார்த்தைகளைக் கொட்டிவிட்டு வேகமாக நடக்க முற்பட்டாள். அவன் சட்டென அவள் பெயர் சொல்லி அழைக்க, மறுபடியும் அவள் கோபத்துடன் அவனை நோக்கினாள்.

"மிஸ் நிர்மலா! தயவுசெஞ்சி ஆத்திரப்படாம நிதானமா நான் சொல்றதைக் கேளுங்க... உங்களோட காதலர் பேரு அரவிந்தன்தானே....?"

அவள் ஆச்சரியத்துடன் அவனை நோக்கினாள்...

"ஆ... ஆமா...."

"அரவிந்தனும் நானும் ரொம்ப நெருங்கின கூட்டாளிங்க. ரெண்டு பேரும் ஒண்ணாத்தான் வெளிநாட்டுல வேலை செய்யிறோம். நான் மூணு மாச லீவுல வந்தேன். உங்கள பத்தி அரவிந்தன் நிறைய சொல்லிருக்கான். இந்தக் கடிதத்த உங்கக்கிட்ட குடுக்கச் சொல்லிக் கொடுத்தான். இந்தக் காதல் விவகாரம் உங்க அப்பாவுக்கு இன்னும் தெரியாதுன்றதும் எனக்குத் தெரியும். அதுதான் சமயம் பார்த்து இதை உங்கக்கிட்ட கொடுக்க ரொம்ப கஷ்டப்பட்டேன். ஆனா அவசரப்பட்டு நீங்க வார்த்தைகளக் கொட்டிட்டீங்க. பரவாயில்ல; நண்பனுக்காக இதையும் நான் பொறுத்துக்கிறேன்.... இந்தாங்க கடிதம்..... நான் வாரேன்..."

அவன் வேகமாக அந்த இடத்தை விட்டு நகர அவள் ஒன்றும் பேச முடியாமல் சிலையாக நின்றிருந்தாள்.

# சமர் எழுதும் சரிதம்!

இரவு பெய்த மழை பாதையில் சேற்றுக் குளங்களைக் கட்டியிருந்தது. தோளிலே கனத்துக்கொண்டிருந்த உடுப்புப் பையுடன், பிரதான வீதியிலிருந்து முளைத்து ஊருக்குட் செல்லும் ஒற்றையடிப்பாதை வழியாக நடந்து கொண்டிருந்தான். சோதனைச் சாவடிகளில் இறங்கி ஏறி சனங்களோடு நெரிபட்டு வந்த களைப்பு. கண்களில் பட்ட முதலாவது கடையினுள் நுழைந்தான்.

ஒரு கருகிய வாழைக்குலை, ஒரு மேசை. அதில் இரண்டு மிட்டாய் போத்தல்கள். சிறிய கண்ணாடி அலுமாரியில் நாலைந்து பாண்கள். ஒரு பொயிலர் சகிதம் காட்சியளித்தது அந்தக் கடை. ஒரேயொரு வாங்கு கிடந்தது. அமர்ந்து தேனீரை வாங்கிப் பருகி விட்டு, "கணேச வித்தியாலயத்துக்கு தூரப் போகணுமா?" என்றான்.

"தம்பி வாத்தியாரா? இப்படியே போங்க. கொஞ்சந் தூரந்தான்," என்றார் கடைக்காரர். நடக்கத் தொடங்கினான்.

வயல்வெளிகள் மழையில்லாமல் பழுப்பேறிக் கிடந்தன. வைக்கோல் வேயப்பட்ட குடிசைகள் தூரந்தூரமாய்த் தெரிந்தன. ஒரு குடிசையை அண்மித்துவிட்டான். அதன் கூரை பாதி அழிந்த நிலையில் காணப்பட்டது. சிறுவனொருவன் பூனையொன்றின் வாலைப் பிடித்துக்கொண்டு, அது ஓட எத்தனிக்கும் போது குச்சியால் அடிப்பதும், அதன் வாலை இழுத்து நிறுத்துவதுமாக விளையாடிக் கொண்டிருந்தான். கெழுத்தி மீன் குஞ்சுகளை அரிவாளில் அறுத்துக்கொண்டிருந்தாள் ஒரு பெண்.

பரட்டைத் தலையும் அழுக்குப் பாவாடையுமாக ஒரு சிறுமி சின்னக் குழந்தையொன்றை தூக்கிக் கொண்டு நின்றாள். குழந்தையின் கன்னங்களில் கண்ணீர்க்கோடுகள் காய்ந்து போயிருந்தன. எதற்கோ அழுத குழந்தையை அரவணைத்துத் தூக்கியிருக்கிறாள் போலும். இடையிடையே குழந்தை ஏங்கிக் கொண்டிருந்தது. குடிசையின் வெளிப்புறமாகத் தெரிந்த அடுப்பருகே நாயொன்று படுத்திருந்தது.



பாண்டியூர் கனி

நான்காம் ஆண்டு வகுப்பு. பொத்தான் இல்லாத சேட்டுகளும், இடுப்பில் முடிச்சுப் போட்ட காற்சட்டைகளும், குட்டிப் பென்சில்களும், காலணி இல்லாத கால்களுமாய் மாணவர்கள். வறுமையின் விம்பங்களாய் அந்தச் சின்னக் கன்றுகள் அவன் கண்களுக்குள் பதிந்து போயின.

ஒவ்வொரு மாணவனையும் விசாரிக்கத் தொடங்கினான். பெரும்பாலான விடைகளில் "அப்பா இல்ல சேர்," "சுட்டுப்போட்டாங்க சேர்," "பிடிச்சிற்றுப் பொயிற்றாங்க சேர்" இந்த வசனங்களே வந்து விழுந்தன. காதுகளைப் பொத்திக்கொண்டு கத்தவேண்டும் போலிருந்தது அவனுக்கு. அங்கே ஒரு அநாதை, இங்கே ஒரு அகதி, அங்கே இன்னொரு ஆதரவற்றவன். 'யுத்தம் நடத்தி முடித்த நாசகோலத்தைப் பாருங்கள்....' என்று கத்து என்றது உள்மனது.

**மாணவப் பிஞ்சுகளின் அப்பியாசப் புத்தகங்களில் துப்பாக்கிப் படங்கள்**

இரவுகள் விடிவதும் விடியல்கள் இரவாவதுமாக நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. வகுப்பின் மாணவப்பிஞ்சுகளின் அப்பியாசப் புத்தகங்களில் துப்பாக்கிப் படங்களின் பென்சில் கிறுக்கல்களைக் கவனித்தான். இடைவேளையின் விளையாட்டுக்களில் ஏ.கே., எல்.எம்.ஜி.க்கள் அவற்றின் ஓசைகள் எல்லாம் வந்து போகும்.

போர்.....! முளைக்கும் இந்தச் செடிகளின் அரும்புகளிலும் எழுதிவிடப்பட்டிருக்கிறது. 'இது யாருடைய விதி? நமது நாட்டின் தலைவிதி' என்று தனக்குள்ளே எண்ணிக்கொள்வான். அடுத்துவந்த இரண்டு நாட்களாக ஒரு மாணவன் பாடசாலைக்கு வரவில்லை. காரணத்தை அறிந்தவன் கவலையின் எல்லைக்கே வந்துவிட்ட உணர்வில், இரண்டு மைல் தொலைவிலிருந்த வைத்தியசாலையை நோக்கி சைக்கிளில் விரைந்தான்.

வைத்தியசாலைக் கட்டிலில் மயக்கம் கலந்த உறக்கத்திலிருந்தான் அந்தச் சிறிய மாணவன். 'விளையாடப் போன இடத்தில் மிதிவெடியில் சிக்கிவிட்டானாம். கால்களைக் கழற்ற வேண்டுமாம்.' விவரம் கூறியவள் அவனது தாய். கட்டிலில் தலையைச் சாய்த்துக்கொண்டு அழுதாள்...

அவளுக்கு ஆறுதல் சொல்லக்கூட தைரியமில்லாமல் மனதில் ஒரு மயான உணர்வோடு திரும்பியவன், அப்போதுதான் கவனித்தான். உறக்கத்திலிருந்தவனின் சின்னக்கை ஒரு விளையாட்டுத் துப்பாக்கியை அணைத்துக் கிடந்தது.

# பிஞ்சு மனம்

"ராசன், ராசன். உனக்கு எத்தினை தரமடா சொல்லுறது- சுதன் பள்ளிக்கூடத்தாலை வந்த உடனை அவன்ரை சப்பாத்தைக் கழுவிப்போடும் எண்டு. இந்தக் கழுதைக்கு ஒண்டும் காதிலை ஏறாது. சனியன்." இது என்ரை அம்மாவின்ரை கடிந்துரைப்பு.

ராசனுக்கும் என்ரை மகன் சுதனுக்கும் ஒரே வயதுதான். கனக்கயில்லை; எட்டு வயதுதான். ராசன் எங்கடை வீட்டிலை வேலைக்கு நிற்கிற பொடியன். கனகராயன் குளத்திலை விழுந்த 'ஷெல்' ஒண்டிலை தகப்பனை பறிகொடுத்திட்டு, தாய் சகோதரத்தோடை அன்றாடம் சாப்பாட்டுக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவன். அவன் வேலைக்கு நிண்டால், எங்களுக்கும் உதவியாயிருக்கும். அவன்ரை தாய்க்கும் மாதம், மாதம் கொஞ்சம் குடுக்கலாம் எண்டு கூட்டிக்கொண்டு வந்தனான்.

சப்பாத்தை கையிலை தூக்கிக் கொண்டு போற அந்த பிஞ்சின்ரை முகத்திலை எத்தனை வேதனைக்கோடுகள், பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த என் கண்களில் பட்டது. கண்ணுக்குத் தெரிஞ்சாலும் இந்த விசயத்திலை நான் குருடன்தான். அம்மாவையும் என்ரை மனிசியையும் மீறி என்னாலை ஒண்டும் பேச ஏலாது. எத்தினை தரம் சொல்லியிருக்கிறேன் "அவனைத் திட்டாதையப்பா. உன்ரை மோனுக்கும் அவனுக்கும் ஒருவயதுதானே? அவனும் சின்னப்பொடியன்," எண்டு. எல்லாம் 'செகிடன் காதிலை ஊதின சங்கு'.

என்ரை மனிசி ரீச்சர்- பிள்ளையளுக்கு படிப்பிக்கைக்கை மட்டும்தான் அவளுக்கு பாரதியார் பாட்டும், நற்சிந்தனையும் வரும். வீட்டுக்கு வந்தால் எல்லாம் மறுதலை தான். "குறுக்காலை போன வாத்திவேலை உங்களை மாதிரி வாத்திமாராலை தானே இந்தச் சமுதாயம் இப்பிடித் தொலைஞ்சு போச்சு." இப்படி எல்லாம் பேசி இருக்கிறேன். எனக்கு வாத்திமாரிலை கோபம் எண்டு நினைக்காதைங்கோ. என்ரை மனிசியாலை வாத்தி உத்தியோகத்திலை ஒரு வெறுப்பு.

அம்மாவும் அப்பிடித்தான். ஈன இரக்கமில்லாதது. எல்லா வீட்டையும் மாமி மருமோள் சண்டை வாறது இயல்பு எண்டு சொல்லுவினம்.



யாழ்- ஞானகணேசன்

ஆனால் எங்கடை வீட்டை அப்படி எல்லாமில்லை. இரண்டும் பெண் பேயள் எண்டு சொல்லலாம்.

தங்கடையள் மட்டும் பிள்ளையள். மற்றவையின்ரை எல்லாம் சள்ளையள். ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும். இதுகள் எங்கே இந்த இரண்டுக்கும் விளங்கப் போகுது?

இண்டைக்கு காலைமையும் ஒரு சம்பவம் நடந்து போச்சு. சுதன் சாப்பிட்ட கோப்பையை ராசன் கழுவ வேணுமாம். அவன் கழுவிக் கொண்டு வரயிக்கை அந்த மாபிள் கோப்பை தவறுதலாய் கீழே விழுந்து உடைஞ்சு போச்சு. அவ்வளவுதான். என்ரை மனிசிக்கு வந்தது பேய்க்குணம். அவனுக்கு முதுகிலை சடார், சடார் எண்டு விழுந்தது. நான் ஒரு மாதிரி அரைவாசியிலை தடுத்துப் போட்டேன்.

அழுதபடி போன ராசன் விம்மிக் கொண்டு திண்ணைப் படிக்கட்டிலை இருந்தான். கொஞ்ச நேரத்தாலை சுரேன் வந்து ராசனை விளையாட வரச் சொல்லிக் கேட்டான். அவன் மறுத்துப் போட்டு, பிறகும் விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

"ராசன் ஏன் அழுகிறாய்?" இதைக் கேட்டான் என்ரைமோன் சுதன்.

"சுதேன், நானும் நீயும் ஒண்டாய் விளையாடலாம். ஆனா, அது உன்ரை அம்மாவுக்கும் அம்மம்மாவுக்கும் பிடிக்கையில்லை. நான் அம்மாட்டை போகப்போறேன். அண்டைக்கு முத்தத்திலை விளையாடயிக்கை நீ கண்ணாடியை உடைச்சதுக்கும் என்னைத்தான் திட்டினவை. நீ இனி என்னோடை கதைக்காதை. நீங்கள் வேறை ஆக்கள். நான் வேறை."

இது எல்லாம் என்ரை காதிலை விழுந்தது. பாவம் பிஞ்சுமனம்.

"இந்த நிமிசத்திலை இருந்து அவனும் என்ரை பிள்ளைதான். யாரும் அவனுக்கு ஒரு வேலையும் சொல்லக்கூடாது. சுதன், இனி மேலைக்கு நீ தான் உன்ரை வேலை எல்லாம் செய்யவேணும்!" சத்தமாய்க் கத்தினேன்.

என்ரை மனிசி வீட்டுக்கை இருந்து வெளியிலை ஓடிவந்தாள். நான் ராசனைத் தூக்கி தோளிலை வைச்சுக் கொண்டேன்.

www.padippakam.com

# இலக்கிய நயம்

## தருவது ரசிகன்



# இரண்டும் குற்றம்

"நண்பா நலமா?
நாளெல்லாம் கரும்பா?"

"என்னடா கரும்பு
பொருள் என்ன இயம்பு?"

"இரண்டு மனங்களும்
கலந்த வாழ்க்கை இரும்பு!
இரண்டு உடல்களும்
கலக்கும் வேட்கை கரும்பு!"

"போடா இவனே!
கரும்பென எண்ணி
சுவையினை அறிந்திட நெருங்கியபோதில்
கொடும் பகையென என்னில்
ஒரு வில்லன் தோன்றினான்!"

"உன்னில் வில்லனா?!
என்னடா உளறல்?"

"சொல்லாதே வெளியே
தும்மலடா தும்மல்!"

"தும்மலா வில்லன்
என்னடா வம்பு இது?"

"மெல்ல நெருங்கி
மேனியில் சரிந்து
நாவினில் இனிய சொற்கள் உதிக்க
பாவினில் கலந்து பாராட்டி மகிழ்ந்து
தாவினேன் கரும்பை சுவைக்க
பாவிநான் அறியாமல் தும்மல் வர
கேவியழுதாளடா என் கோகிலம்!"

"அடடே அடடே
போருக்கு புறப்பட்டான் காளை
குறுக்கே வந்தது பூனை!
சகுனப் பிழை என்று
தேவி கதவை மூடினாளோ?"

"சகுனப் பிழை என்றால்
பொறுத்திருப்பேனே
சபலப் பிழை என்றாளே
சகி அவள் சபலப் பிழை என்றாளே!"

"புலம்பாதே நண்பா!
பொறுமையாய் சொல்லு"

"தும்மினேன்-உடனே
'வாழ்க நூற்றாண்டு'
என்றவள் வாழ்த்தினாள்"

"ஆஹா! ஆஹா!
கள்ளா உன்னில் கரிசனமடா!"

"கரிசனம் என்றே
நானும் நினைத்தேன்-பின்னர்
தரிசனம் தந்தாள்
கோப முகத்தோடு காளிபோல!"

"வாழ்த்தினாள் என்றாய்
பின்னர் ஏனடா
கோப வாளேந்தினாள்?"

"வேதாளம்
முருங்கை மரத்தில் தாவும்
சந்தேக வேதாளம்
என்னவள் மீதில் தாவும்!
அந்த வேதாளம்
செய்த கோளாறு தானடா

மன்மத வேளையில்-அவன்
மனதை உடைத்தது!"

"புதிர் போட்டது போதுமடா
புரியச் சொல்லடா மச்சானே!"

"யாரது-அது யாரது
உம்மை நினைத்தது?
யாரவள் சொல்லும்
நானவள் நாவை பிடுங்கச் செய்கிறேன்
என்னவர் உம்மை
எவள்தான் நினைத்தவள்
சொல்லும் உண்மை சொல்லும்
கொல்லும் என்னை கொல்லும்
கள்ளி ஒருத்தி இருக்கிறாளென்றால்
கொல்லும் என்னைக் கொல்லும்
என்றவள் குலுங்கி அழுதாள்"

"நன்றி நண்பா மிக்க நன்றி
நான் இனி ஜாக்கிரதையாயிருப்பேன்!"

"ஏனடா நன்றி?
எதற்கடா ஜாக்கிரதை?"

"நன்றி உந்தன் அனுபவம் சொன்னதற்கு
ஜாக்கிரதை நானும் தும்மாமலிருப்பதற்கு
என்னவள்மீதும் வேதாளம் தாவினால்
உன்கதிதானே என் கதியுமாகும்!"

"அடே பாவி!
ஆலோசனை சொல்வாய் என்றால்
அனுபவம் பெறவா
ஆர்வமாய் கேட்டாய்?"
நண்பன் துரத்த மாறன் ஓடினான்.

மாறன் மடியில்-அவன்
வாழ்க்கைத் துணைவி.

கூந்தலைக் கோதி, குவிந்த
எழில்களில் முகத்தினால் ஆடி
காந்தக் கண்களால்-அவள்
போதையை ஏற்றும் பார்வை வீச
சந்தன மேனியை மூடிய துகிலை
போவென கைகளால் விரட்டி
மேடிட்ட எழில்களை
மோகித்து வருடி
யாசித்தான் மாறன் யாசித்தான்!

இன்பத்தை வாசிக்க இடம் கொடு என்று
அந்த இனிய நூலிடம் யாசித்தான்!

பயத்தில் நெற்றியில்
வியர்த்து உருகிய முத்துடன்
அச்சத்தில் துடித்து
விம்மும் நெஞ்சக் கொத்துடன்
வெட்கித்தாள் அவள் வெட்கித்தாள்.
படியென்று சொல்ல மனம் துடித்தும்
உதடு ஒத்துழையாமல் வெட்கித்தாள்!

சிப்பிக்குள் மூடிய முத்தாக
நெஞ்சுக்குள் கிடந்தது காமம்.

"குதிக்கும் கோடை வெப்பத்தில்
தகிக்கும் உடலை தணிவிக்க
ஓடையை நாடி குளிப்பதுபோல்
ஆசைச் சூட்டை விதைத்துள்ள
ஓசையில்லா காமத்தை
ஓட விரட்ட நாடி வந்தேன்"

"அது என்ன
ஓசையில்லாக் காமம்?"

"உள்ளே இருப்பது தெரியாது
ஆனால்- உலைக்களமாய் கொதிக்கும்.
ஊரைக் கூட்டிச் சொல்லாது
ஆனால்- உயிரையும் அது வதைக்கும்!
உடனே வெளியே தெரியாது
ஆனால்- உடலை தீயில் நனைக்கும்!
சத்தம் கித்தம் காட்டாது
ஆனால்- சித்தம் மயங்கச் செய்யும்"

விளக்கம் கேட்டவள்
கலப்படமில்லாத பால்போல் நகைத்தாள்.

நகைத்தவளின் இதழை நனைத்தான்.
நாணியவள் தேகத்தை வளைத்தான்.

அப்போதுதான் தும்மல்
'இப்போது நான் வரவா?'
என்பதுபோல துடித்தது!

நண்பன் சொன்ன அனுபவம்
ஞாபகம் வந்தது!
நங்கையின் இதழினை விடுத்து
நங்கையறியாமல் மெல்ல
பங்கமாம் தும்மலை
தடுப்பதில் முனைந்தான்!

"நண்பா நன்றி!
நான் அடக்கிக் காட்டுகிறேன்
நாளை உனக்கு சொல்லுகிறேன்"
மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

சட்டென்று கேவியழும் சத்தம்
யாரது அழுவது?
"அய்யய்யோ.. என் கண்ணே
உன் கண்ணில் நீர் எதற்கு,"

முறைத்தாள் அழுதபடி.
மூக்கை சிந்தியபடி சீறினாள்
"மறைத்தீரே தும்மலை மறைத்தீரே
நினைத்தவள் யாரவள் சொல்லும்?"

"அய்யோ கண்ணே நானறியேன்
நம்பு கண்ணே நான் சொல்வது உண்மை!"

"நினைக்கிறாள் என்று தெரிந்ததால்தானே
தும்மலை மறைக்க துடியாய் துடித்தீர்
அனுபவம் உமக்கு அதுதான் மறைத்தீர்
அய்யோ நான் பாவம் ஏமாந்து போனேன்!"

மாறன் திகைத்துப் போனான்
தும்மினாலும் குற்றம். தும்மாவிடிலும் குற்றமா?
நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று
தும்மலை மறைக்க காதலன் கதியை
வள்ளுவர் அழகாய் சொல்லியிருக்கிறார்

"தும்மச் செறுப்ப அழுதாள் நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று"

குறள்- 1319 அதிகாரம்-132

ஸ்போர்ட்ஸ்

## இன்னொரு கவாஸ்கர்


ரோஹன்

இம்மாதம் 11ம் திகதி அவுஸ்திரேலிய அணிக்கும், உலக லெவன் அணிக்கும் இடையில் ஒருநாள் போட்டி ஹொங்கொங்கில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் உலக லெவன் சார்பாக சஞ்சய் மஞ்ச்ரேக்கர், ராஜேஷ் சௌகான், மற்றும் புதிய வீரர் ரோஹன் கவாஸ்கர் ஆகியோர் இடம்பெற்றனர்.

இப்போட்டியில் 30 பந்துகளை எதிர்கொண்டு 50 ஓட்டங்களைக் குவித்த இடது கைத்துடுப்பாட்ட வீரர் ரோஹன் கவாஸ்கர் வேறுயாருமல்ல, பிரபல வீரர் சுனில் கவாஸ்கரின் மகன்.

இந்தியக் கிரிக்கெட்டில் இவரது பங்களிப்பும் முத்திரை பதிக்கும் என்பதை இந்த முதல் போட்டியில் இவரது ஆட்டம் அறிவித்துள்ளது.

வங்காள அணிக்காக விளையாடி வரும் ரோஹன் கவாஸ்கர் இதுவரை 10 முதல் தரப் போட்டிகளில் விளையாடியுள்ளார். 600 ஓட்டங்களைத் தாண்டியுள்ள இவரது ஓட்ட எண்ணிக்கையில் 4 அரைச் சதங்களும், 1 சதமும் அடங்கும்.

கடந்த மார்ச் மாதம் இந்தூரில் மத்திய பிரதேச அணிக்கெதிராக நடைபெற்ற ரஞ்சிக்கோப்பைப் போட்டியில்தான் ரோஹன் கவாஸ்கர் தனது முதல் சதத்தை அடித்தார். விரைவில் இந்தியக் கிரிக்கெட் அணியில் இவர் இடம்பிடிப்பார் என்று நம்பலாம்.

உலக லெவன் அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 'சூப்பர் சலஞ்சர்' கிண்ணத்துக்கான போட்டியில் அவுஸ்திரேலிய அணியே வெற்றிபெற்றது. உலக லெவன் அணிக்கு சஞ்சய் மஞ்ச்ரேக்கர் கப்டனாக இருந்தார். அவர் பொறுப்பாக ஆடி 80 ஓட்டங்கள் பெற்றுக்கொடுத்தார். சஞ்சய் மஞ்ச்ரேக்கர், ரோஹன் கவாஸ்கர் ஆகியோர்தான் உலக லெவன் அணிக்கு அதிக ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

## அந்த ஐந்துபேர்

புகழ்பெற்ற விஸ்டன் கிரிக்கெட் இதழின் 'வருடத்தின் 5 கிரிக்கெட் வீரர்கள்' பட்டியலில் இடம்பெறும் கௌரவத்தை அடைந்துள்ளார் இந்தியக் கப்டன் சச்சின் டெண்டுல்கர்.

இலண்டனில் இருந்து வெளிவரும் விஸ்டன் இதழ் 'கிரிக்கெட் கலைக்களஞ்சியம்' என்ற சிறப்பைப் பெற்ற நூல். இந்த இதழின் தேர்வுப் பட்டியலில் இடம்பெறுவது என்பது கிரிக்கெட்டைப் பொறுத்தவரை நோபல் பரிசையே அடைவதுபோல.

ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் இலட்சியமாக இருக்கும் விஸ்டன் தேர்வுப்பட்டியலில் இந்த முறை இடம்பெற்றுள்ள ஐவர்: சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), சனத் ஜெயசூரிய (இலங்கை), சயீட் அன்வர் (பாகிஸ்தான்), பில் சிமன்ஸ் (மே.இ.தீவு), முஷ்டாக் அகமட் (பாகிஸ்தான்) ஆகியோர்.

"கிரிக்கெட் ஆட்ட யுக்திகளைத் திறமையாகக் கையாள்வதில் முதன்மையானவர் டெண்டுல்கர்தான்," என்று பாராட்டியுள்ளது விஸ்டன் இதழ்.

கடந்த வருடம் உலகக் கோப்பையை இலங்கை அணி கைப்பற்றுவதற்கு வழிகோலியதற்காக ஜெயசூரியவையும், கடந்த கோடைகால சீஸனில் ஓவல் மைதானப் போட்டியில் அற்புதமான வகையில் சதமடித்ததற்காக சயீட் அன்வரையும், இங்கிலாந்து கவுண்டி சம்பியன் ஷிப்பை லீசெஸ்டர் அணி பெற்றதில் முக்கியபங்களித்ததற்காக பில் சிமன்ஸையும், கவுண்டிப் போட்டிகளில் முன்னணிப் பந்து வீச்சாளராகத் திகழ்ந்ததால் முஷ்டாக் அகமட்டையும் விஸ்டன் இதழ் தேர்வு செய்துள்ளது.

இந்தத் தேர்வுப் பட்டியலில் இம்முறை 2 சிறப்பம்சங்கள்: ஒன்று, இதில் 4 இடங்களை ஆசிய வீரர்கள் பெற்றிருப்பது. இரண்டு: இங்கிலாந்து வீரர் ஒருவர்கூட இப்பட்டியலில் இடம்பெறாதது.

### இவர்தான் அவர்


கவிஞர் வாலி

## சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! சோனியாவால் இந்தியாவில் மாற்றம் வருமா?**

அன்ரன் தாஸ், வத்தளை.

முதலில் காங்கிரசில் மாற்றம் வரும். ராஜீவ் விசுவாசிகளான தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்கள் மூப்பனாரும், சிதம்பரமும் தம் கட்சியையும் மீண்டும் காங்கிரஸ் கடலில் கலக்கவிட முன்வரலாம்.



**★ கமலுக்கு மீண்டும் விருது கிடைத்திருக்கிறதே?**

வி. ஜெயமோகன், கொழும்பு-13.

சந்தோஷம்தான். ஆனால் ஒரு உறுத்தல்! கமலின் படங்களிலேயே இந்தியனைவிட கதையிலும் நடிப்பிலும் 'மகாநதி' சிறந்தது. இந்தியனில் மேக்-அப்தான் சூப்பர். தவிர, ஊழல் செய்பவர்களை சதக், சதக் என்று தீர்த்துக்கட்டுவதை இந்திய அரசு 'சபாஷ்' என்கிறதா? என்றும் கேள்வி எழாமல் இல்லை. மகாநதிக்கு விருது கொடாமலிருக்க வன்முறை கூடுதலாக இருப்பதே காரணம். என முன்பு சொன்ன காரணமும் இப்போது இடிக்கிறது. விருது வழங்கும் முறையிலும் முரண்பாடுகள் நிறையவே இருக்கின்றன. உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? முன்னர் சிவாஜிக்குக் கிடைக்க இருந்த 'பாரத்' விருதை கலைஞர் கருணாநிதி தலையிட்டு எம்.ஜி. ஆருக்குக் கிடைக்கச் செய்தார்.

கலைஞரே பின்னர் சொன்ன தகவல் அது. விருதுக்கு கமல் தகுதியானவர்தான். ஆனால் விருது வழங்கும் அளவு கோல்கள் அடிக்கடி மாறுபடுவதையே சொல்கிறேன்.

**★ சங்கீதாவுடன் நெருக்கம் என்பதை மறுத்துள்ளாரே பார்த்திபன்?**

கி. விநோத், கொழும்பு-03.

எந்தப் பூனை பால் குடித்ததை ஒப்புக் கொண்டிருக்கிறது- சொல்லுங்கள்? சீதாவை காதலிப்பதையே முன்னர் அடித்து மறுத்தவர்தான் பார்த்திபன் என்பதால் அவரது மறுப்பை யாரும் பொருட்படுத்துவதில்லை.

**★ எதிர்பாராத திருப்பத்துடன் ஒரு கதை சொல்லும் சிந்தியா?**

எஸ். சிபாயா, மாத்தளை.

ஒரு இளம்பெண் தன் வருங்காலத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள ஜோசியரிடம் சென்றாள். பெண்ணுடைய கைரேகைகளை தீவிரமாக அலசிப் பார்த்தார் ஜோசியர்.

"பெண்ணே! ஒரு துயரமான செய்தியை சொல்லப் போகிறேன்" என்றார்.

"என்ன செய்தி?"

"நீ விதவையாகும் சூழ்நிலையில் இருக்கிறாய். விரைவில் அது நடக்கும்!"

ஜோசியர் சொன்னதும் அந்தப் பெண் அவரிடம் கேட்டாள்:

"நான் தண்டனை பெறாமல் தப்பிவிடுவேனா? அதையும் நன்றாகப் பார்த்துச் சொல்லிவிடுங்கள்."

**★ தமிழ்த் திரைப்படங்களின் தரம் குறைந்து கொண்டே போவது ஏன்?**

ஆர். உதயா, மட்டக்களப்பு.

இந்தக் கொடுமையைக் கேளுங்கள்: தமிழ்ப்படங்கள் பரவாயில்லை என்பீர்கள்:

"ஹொங்கொங் சினிமா உலகில் இரண்டு படங்கள் சூடாகப் பேசப்படுகின்றன. பயங்கரமான வசூலாம். ஒரு படத்தின் பெயர் 'ஹீ மென்.' அதன் அநியாய வெற்றியால், 'மே மேன்' என்றொரு புதிய படமும் தயாராகிவிட்டது. படத்தின் கதை இரண்டு ஆண்களின் மூழ்காத ஷிப். அதாங்க ஃப்ரெண்ட்ஷிப். அதற்கென்ன என்கிறீர்களா? அங்கதாங்க விவகாரமே இருக்கு! அது வேறு மாதிரி ஃப்ரெண்ட்ஷிப். படத்தில் நடித்திருப்பதும் முன்னணி நடிகர்கள்தான்.

**★ எதிர்க்கட்சி ஒத்துழைத்தால் இனப் பிரச்சனை தீருமா?**

என். பைஷால், காத்தான்குடி.

தற்போதைய ஒத்துழைப்புப்படி பார்த்தால் தீராது- பெருகும். அதைவிடுங்கள்... ஒரு நகைச்சுவைக் கதை சொல்கிறேன் கேளுங்கள்:

"எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்தால் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்!" என்று பேசினார் சுகாதார மந்திரி. அவர் ஒரு பெண்.

உடனே மற்றொரு அமைச்சர் எழுந்து பேசினார்:

"சுகாதார மந்திரி சொன்னார், எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்தால் சனத்தொகை குறையும் என்று. நான் அதை நம்பவில்லை. எதிர் எதிர் பார்ட்டிகள் ஒத்துழைத்தால் சனத்தொகை அதிகமானதுதான் என் அனுபவத்தில் கண்ட உண்மை."

**★ ரம்பாவின் முன்னேற்றத்திற்கு யாது காரணம்?**

கே. மாதவன், பதுளை.

தாராளம்- தாராளம்- தாராளம்!

**★ புத்திசாலியான மாணவன் எப்படி இருக்க வேண்டும்?**

வி. ரவீந்திரன், திருமலை.

தன்னுடைய வகுப்புத் தோழனைச் சந்தித்த ஒரு மாணவன் கேட்டான்: "ஒரு முட்டாளை எப்படி சஸ்பென்சில் வைப்பது என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியாதே, நீதான் சொல்லித்தாயேன்!" என்றான் மற்றவன்.

"நாளை சொல்கிறேன்!" என்றான் அந்த மாணவன்.

மற்றொரு கதை:

ஆசிரியர் மாணவர்களைக் கேட்டார். "இதோ இந்தத் தவளையை இப்போது அறுத்து அதன் உட்பாகங்களைப் பார்க்கிறீர்கள். இதேபோல ஒரு மனிதனை அறுத்துப் பார்த்தால் என்னென்ன பார்ப்பீர்கள்?"

ஒரு மாணவன் எழுந்து சொன்னான்: "சிறைக் கம்பிகளின் பின்னால் இருந்து வெளியுலகத்தைப் பார்ப்போம் சேர்!"

இதில் யார் புத்திசாலி மாணவன் என்பதை நீங்களே தெரிவு செய்து கொள்ளுங்கள்.

**★ சிந்தியா! இசகு பிசகு என்றால் என்ன?**

தி. லட்சுமி, கண்டி.

பலமாடிக் கட்டடம் ஒன்று. முதல் மாடியில் பிரசவ ஆஸ்பத்திரி. கீழ் தளத்தில் சலவைக் கடை. ஒருநாள் புயல் அடித்தது. பிரசவ ஆஸ்பத்திரி போர்ட் கழன்று விழுந்தது. அது விழுந்த இடம் சலவைக்கடை போர்ட்டுக்குமேல். புயல் ஓய்ந்ததும் இரண்டு போர்ட்டுகளின் அரைகுறைப் பகுதி இணைந்து இப்படிக் காட்சியளித்தது:

"பிரசவ ஆஸ்பத்திரி, 24 மணி நேரத்தில் டெலிவரி."

**★ நடிப்புலக இமயம், விஜய்யுடனும் நடித்துவிட்டதே. அடுத்தது யாருடன்?**

சி. காசிம், திருமலை.

'விஜய்க்கு ஒரு மகன் பிறந்தால் அவருடனும் நடிக்கவேண்டும் நம் இமயம்.' என்று வாழ்த்துவோமே!



**★ இந்தியப் பிரதமர் குஜ்ரால் தாடி வளர்ப்பது ஏன்? காதல் தோல்வியா?**

ஆர். சங்கரதாஸ், கொழும்பு-06.

சேச்சே...! அவரே சொல்லியிருக்கிறார், அந்த வெண்தாடி இரகசியத்தை. ரசியாவில் தூதராக இருந்தபோது அங்குள்ள கம்யுனிஸ்ட் தோழர்களைப் பார்த்து குஜ்ராலுக்கும் மீசை, தாடி வளர்க்கும் ஆசை தொற்றிக் கொண்டதாம். அவரது தாடிக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறார். முதலில் குஜ்ராலின் தாடியை சீரமைத்து அழகு படுத்தியது ஒரு முடி திருத்தும் பெண்தானாம்.





படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 83

இராமபிரான் மூன்று நாட்கள் தொடர்ந்து கடும் விரதமிருந்து வருணபகவானைத் துதித்து எதுவித பலனும் கிடைக்கவில்லை. வருணன் தோன்றவில்லை. தன்னை வருணன் உதாசீனம் செய்துவிட்டதாகக் கருதிய இராமபிரான், தம்பி இலக்குவனிடம் தனது வில்லையும் அம்பறாத் தூணியையும் கொண்டு வருமாறு பணித்தார்.

# சேது பந்தனம்



இலக்குவனும் உடனடியாக அவற்றைக் கொண்டு வந்து கொடுத்தார். கோதண்டத்தில் நாணை ஏற்றி, அதனை ஒரு தடவை சுண்டி இழுத்ததுமே, அண்டசராசரமெங்கும் பேரொலியாக நாணொலி கேட்டது.

கடலை நோக்கி ஒன்றன் பின் ஒன்றாக கணைகளை இராமபிரான் ஏவினார். கடலில் தீச்சுவாலை எழுந்தது. இரு கூறாகக் கடல் பிரிந்தது. கடல் பிராணிகள் யாவும் நிலை குலைந்து உயிர் துறந்தன. ஐம்பெரும் பூதங்கள்– நீர் உட்பட– யாவும் இயல்பு நிலை தளர்ந்தன. தேவர்களும் கந்தர்வர்களும் ஏனைய உலகத்தவர்களும் அஞ்சி நடுங்கியவர்களாக ஓடோடி வந்து தென் கடலில் என்ன நடைபெறுகின்றது என்பதனை ஆவலுடன் அவதானித்தனர்.

வருணபகவான் அப்போது தான் ஓடோடி வந்து இராமபிரானிடம் சரண்புகுந்தார். "ஐயனே! என்னை மன்னித்தருளுவீர்களாக. தாங்கள் என்னை அழைக்கும்போது நான் வெகு தூரத்துக்கப்பாலிருந்தேன். ஏழாம் கடலில் சுறாமீன்களுக்கிடையில் பெரும் சண்டை மூண்டிருந்தது. அச்சண்டையை விலக்கி சமாதானம் ஏற்படுத்துவதற்காகச் சென்றிருந்தேன். இதனால்தான் தாமதம் ஏற்பட்டதே தவிர நான் வேண்டுமென்று தங்களைப் புறக்கணிக்கவில்லை."

இவ்வாறு வேதனையுடன் வருணன் கூறியதை மிக அழகாகக் கவிச்சக்கரவர்த்தி பல செய்யுள்களில் தருகிறார். அவர் தொடர்ந்து இராமபிரானைத் துதிக்கும் ஒரு பாடலைப் பார்ப்போம்:-

ஆழி நீ அனலும் நீயே
அல்லவை எல்லாம் நீயே!
ஊழி நீ உலகும் நீயே
அவற்றுறை உயிரும் நீயே!
வாழியாய் அடியேன் நின்னை
மறப்பெனோ வயங்கு செந்தீச்
சூழுற உலைந்து போனேன்
காத்தருள் சுருதி மூர்த்தி!
(யுத்த காண்டாம்-597)

பொருள்:

"கடலும் நீ! இதனைச் சுட்டெரிக்கும் தீயும் நீயே! இவற்றுடன் மட்டுமல்லாமல், ஏனைய பொருட்களும் நீயே! இவை அனைத்தினது இறுதியும் நீயே! அவற்றின் உயிராக உள்ளவனும் நீயே! என்றென்றும் நிலைத்து நிற்கின்றவனாகிய உன்னை நான் மறந்து விடுவேனோ? செந்தீச்சுடர் எங்கும் பரந்து என்னையும் தீய்க்கிறது. இந்நிலையில் என்னைக் காத்தருள வேண்டுகிறேன் ஆதி மூர்த்தியே!"

## கோபம் மறைந்தது

வருண பகவான், மிகப்பணிவாக இராமபிரானை வேண்டியதும் அவருடைய கோபம் மறைந்தது. சாந்தமூர்த்தியானார். ஆனால் அவருடைய கோதண்டத்திலேறிய அம்பு ஒன்று விடுபடாமல் இருந்தது. நாணில் பூட்டப்பட்ட கணையினைத் திரும்ப எடுக்க முடியாது என்பதனால் அதனை எங்காவது செலுத்தியாக வேண்டியதே நியதி. இராமபிரான் சமுத்திர அதிபதியான வருண பகவானிடமே ஆலோசனை கேட்டார். அப்போது வருணன், "ஐயனே! மருகாந்தாரம் எனும் தீவிலே வாழும் அவுணர்களால் உலகில் பேரழிவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களை நோக்கித் தங்கள் பாணத்தை ஏவுங்கள்!" என்று கூறினார். இராமபிரானும் அவ்வாறே பாணத்தை ஏவினார். அவுணர்கள் அத்தனை பேரும் மாண்டனர்.

## வருணனின் ஆலோசனை

வருணன் தொடரலானார்:

"இக்கடலானது ஆழம்மிக்கது. இது இரு கூறாகப் பிரிந்து கிடப்பதனால் மேலும் பல இயற்கை உபாதைகள் ஏற்படும். மேலும் இங்குள்ள வானரப்படைகள் இதனூடாக நடந்து சென்று இலங்கைக்கரை சேர்வதற்கு மிகக் கூடுதலான காலம் தேவைப்படும். இக்கரையிலிருந்து நேரே பாதாளம் வரை இறங்கி அதன் பின்னர் மேலே ஏறி அக்கரை சேரவேண்டும். இதனால் படையிலுள்ள வானரங்கள் மிகவும் துன்பப்பட வேண்டிவரும். ஆகவே, பிரிந்து கிடக்கும் கடலை ஒன்றுசேர வைத்துவிடுங்கள்.

இராஜகுமாரன்

மலைகளைப் பிளந்து பெரும்கற்களைக் கொண்டு வந்து குவித்து ஓர் அணையினை அமையுங்கள். அதன் மீது நடந்தே அக்கரை சேர்ந்துவிடலாம். இதுவே எனது ஆலோசனை!"

வருணபகவான் கூறிய ஆலோசனையை இராமபிரானும் ஏற்றுக்கொண்டார். வருணன் மற்றமொரு ஆலோசனையையும் கூறினார். தேவலோகத்திலுள்ள விஸ்வகர்மாவுக்கு நளன் எனும் வானரகுல மகன் இருக்கிறான். அவனைத் தருவித்தே அணையைக் கட்டுமாறு கூறியிருந்தார். அவ்வாறே நளன் அங்கு வந்து சேர்ந்தான். சேதுக்கடலை ஊடறுத்து பாலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை நளன் திட்டமிட்டான். வானரர்க்கரசனான சுக்கிரீவன், இராவணன் தம்பியான விபீடணன், ஆஞ்சநேயர் ஆகியோர் நளனுடன் சேர்ந்து திட்டத்தைப் பரிசீலித்தனர் இறுதியாக இராமபிரான் மற்றும் இளைய பெருமாள் இலக்குவன் ஆகியோரின் அங்கீரமும் பெறப்பட்டது.

## அணை எழுந்தது

அணையை எழுப்புவதற்கேற்ற கற்களை எங்கிருந்து, எவ்வாறு கொண்டு வந்து சேர்ப்பது என்பதனை ஆராய்ந்தறிய ஒரு குழு அமைக்கப்பட்டது. கரடிகளுக்கு அரசனான ஜாம்பவன் இக்குழுவின் தலைமையை ஏற்றார். உடனடியாக அவர்தன் குழுவினருடன் கிளம்பி கழுகரசன் சம்பாதி இருக்குமிடம் சென்றார். சம்பாதி தன்னுடைய ஏவலாளர்களை ஏவினார். அவர்கள் வானில் பறந்து சென்று அணைக்கேற்ற கற்களைச் சுலபமாகப் பெறும் இடங்களைக் கண்டுவந்து சொன்னார்கள்.

சம்பாதி மூலமாக அறியப்பட்ட இடங்களை ஜாம்பவனும் வானரர்களும் சென்று பார்த்து வந்து கடற்கரையிலுள்ளவர்களிடம் கூறியதும், பெரும் படை புறப்பட்டது. கால தாமதமின்றி பெரும் கற்களை அதிவேகமாகக் கொண்டு வந்து வானர வீரர்கள் குவித்தார்கள். கற்கள் மட்டுமல்லாமல் பெரிய மரங்களையும் வேரோடு பெயர்த்து வந்து சேர்த்தார்கள். இலட்சக்கணக்கான வானர வீரர்கள் பல திக்குகளுக்கும் பாய்ந்து சென்றனர். பலதரப் பட்ட அளவுகளில் மலைகளிலிருந்து கற்கள் பெயர்த்தெடுக்கப் பட்டன. வரிசையாக நின்ற வானரர்கள் அவற்றை ஒருவரிடமிருந்து மற்றவருக்குக் கைமாற்றி அணைகட்டுமிடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

நளன், கற்களை ஒன்றன் மீது மற்றொன்றாக அடுக்கினான். இடைவெளி ஏற்பட்டால் அவற்றிடையே மரத்துண்டுகளையும் மணலையும் சேர்த்துச் சீர்ப்படுத்தினான். இரவு-பகல் என்று பாராமல் வானரர்களும் நளனும் இணைந்து மூன்றே நாட்களில் சேது பந்தனம் என்ற அணையினை அமைத்தனர். தென் கரையிலுள்ள மகேந்திர மலையிலிருந்து இலங்கையிலுள்ள திரிகூட மலை வரை, வளைந்து நெளிந்து அணை சென்று முடிந்தது.

## அணையின் தோற்றம்

இந்தச் சேது பந்தனத்தின் தோற்றத்தை கம்ப நாட்டாழ்வார் வர்ணிக்கும் பாங்கினைப் பார்ப்போம்:

நாடுகின்ற தென்வேறு ஒன்று நாயகன்
தோடு சேர் குழலாள் துயர் நீக்குவான்
ஓடும் என் முதுகிட்டு என ஓங்கிய
சேடன் என்னப் பொலிந்தது சேதுவே!
(யுத்த காண்டம்-681)

பொருள்:

'சகல சீவராசிகளும் தங்களுக்குத் தலைவன் என்று நாடுகின்ற நாயகனான இராமபிரானின் தேவைகளை உணர்ந்து பணிபுரியும் ஆதிசேடனான என்னை விடுத்து, வேறொரு துணையினை ஏன் நாட வேண்டும்? அழகிய மலர்களைச் சூடுகின்ற கூந்தலையுடைய சீதாப்பிராட்டியாரின் துயரினைக் களைய என் மீது நடந்து செல்லலாமே!' என்று ஆதிசேடனே கூறுவது போல் அந்த அணை அமைந்திருந்தது.

☆ ☆ ☆

அணைகட்டி முடிக்கப்பட்டு விட்டதை சுக்கிரீவன் முதலில் சென்று பார்த்தான். அவனுடன் விபீடணன், அனுமன் மற்று முண்டான வானர படைத்தளபதிகளும் பார்வையிட்டு திருப்தியைத் தெரிவித்தனர். அங்கிருந்து இராமபிரான், இலக்குவன் ஆகியோர் தங்கியிருந்த இடம் சென்று அணைகட்டி முடிந்துவிட்டதையும், மிகத் திருப்திகரமாக அவ்வணை கட்டுப்பட்டுள்ளதையும் அறிவித்தனர். இதனைக் கேள்வியுற்ற இராமபிரான் பரவசமானார். சுக்கிரீவனை ஆரத் தழுவி நன்றியைத் தெரிவித்தார். அணையை அமைக்கும் பணியிலீடுபட்ட நளனையும் அவனுக்கு அருந்துணை புரிந்த அனைவரையும் நன்றியுடன் பாராட்டினார்.

சீதாப்பிராட்டியாரைக் கண்டுகளிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை இராமபிரான் உணர்ந்ததும் அவருடைய துன்பங்கள் அனைத்துமே மறைந்துவிட்டது போன்ற நிலையினை அடைந்தார். அவருடைய முகம் கோடி சூரியர் போன்று பிரகாசித்தது. (தொடர்ந்து வரும்)

தென் இந்தியாவில் இராமநாதபுரம் நகரிலிருந்து தென்கரைவரை செல்லும் பாதையில் 'திருப்புள்ளாணி' என்றொரு திருத்தலமும் மேலும் சில கிலோமீட்டர் தொலைவில் 'சேதுக்கரை' என்றொரு சிற்றூரும் இருக்கின்றன. இவையிரண்டும் இராமகாதையுடன் தொடர்புடையவை.

### இராமாயணப் போட்டி: 81

**சரியானவிடை:–மாமிசம் புசித்தலும் மதுபானம் அருந்துதலும்.**

1. எஃப்.ஏ. கிறலன்சியா.
   18, ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு.
2. எஸ்.ஐ. பிலானா.
   34/2 அலுத்தெல வீதி, பிங்காரவ, பதுளை.
3. ரா. தினேஸ்குமார்.
   செல்சி மே.பி., பண்டாரவளை.
4. அ. வைதேகி.
   24/1. அப்பொன்ஸ் அவன்யு, தெகிவளை.
5. தி. சசிகரன், 480/42, 47ம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06.

**போட்டி இல. 83** கேள்வி:- அணையினை அமைத்த நளன் யாருடைய மகன்?

மே. 24 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.83, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# காதிலை பூ கந்தசாமி

# ஆடும் நாற்காலி

## இந்தியப் பிரதமர் குஜ்ராலுடன் ஒரு கற்பனைப் பேட்டி.

கா.பூ.க: வணக்கம் ஐயா! கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்கள். உங்கள் விஷயத்தில் வானத்தையே பிய்த்துக் கொண்டு கொடுத்திருக்கிறது.

குஜ்ரால்: கூரையைப் பிய்த்ததோ, வானத்தைப் பிய்த்ததோ நான் அறியேன். கூட்டைப் பிய்த்துக் கொண்டு கொட்டியது என்பதை மட்டும் அறிவேன்.

கா.பூ.க: புரியவில்லையே ஐயா?

குஜ்ரால்: ஐக்கிய முன்னணிக் கூட்டுக்குள் இருந்த மூப்பானாருக்கு கிடைக்க வேண்டியதுதானே எனக்கு கிடைத்தது. கூட்டையே பணயம் வைத்து செய்த முடிவுதானே அது. அதனைத்தான் சொன்னேன்.

கா.பூ.க: பிரதமராவீர்கள் என்று எப்போதாவது நீங்கள் நினைத்ததுண்டா?

குஜ்ரால்: நோ நோ நோ.... ஹா ஹா ஹா
அந்த ஆண்டவன் நடத்தறான்
இந்த ஐ.கே.குஜ்ரால் நடக்கிறான்.
அந்த ஆண்டவன் கொடுக்கச் சொன்னான்
இந்த ஐக்கிய முன்னணிக்காரங்க கொடுத்தாங்க.

கா.பூ.க: எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

குஜ்ரால்: நேற்று வெளிநாட்டமைச்சர். இன்று பிரதமர்.. நாளை..?

கா.பூ.க: முன்னாள் பிரதமர் ஹா ஹா ஹா.

கு: கிண்டல் செய்யாதீர் மிஸ்டர் கந்தர்சாமி. நான் விதியைச் சொன்னேன். அந்த விதியை கரெக்டா எழுதுறானே அந்தப் பதியை- அதிபதியைச் சொன்னேன்.

கா.பூ.க: நீங்கள் பிரதமராகியிருக்காவிட்டால் என்னாகியிருக்கும்.

கு: ஒன்றுமாகியிருக்காது, மூப்பனார் பிரதமராகியிருப்பார்.

கா.பூ.க: மூப்பனார் பிரதமராகியிருந்தால் நீங்கள் என்னவாகியிருப்பீர்கள்?

கு: பிரதமராகியிருக்கமாட்டேன். பிரமுகராகவே இருந்திருப்பேன்.

கா.பூ.க: நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் இந்த கவுடா ஆட்சியில் இருக்கமாட்டார் என்றாரே சீதாராம் கேசரி. அவர் உங்களைப் பார்த்தும் அப்படிப் பாடமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

கு: என் கரெக்டரையே நீங்கள் புரிஞ்சுக்கலையே மிஸ்டர் கந்தர்சாமி. அவர் பாடமுன்னரே நான் பாடி முடிச்சுடுவேனே.




கா.பூ.க: எப்படிப் பாடுவீர்கள்?

கு: (தாடியைத் தடவி சிரித்தபடி பாடுகிறார்)
நான் உங்க வீட்டுப் பிள்ளை
இது ஊரறிந்த உண்மை– நீங்கள்
சொல்லுகின்ற சொல்லை
நான் கேட்க மறுப்பதில்லை
நான் உங்க வீட்டுப் பிள்ளை
என்னால் இல்லைத் தொல்லை!

கா.பூ.க:இடதுசாரிகள் கோபிக்க மாட்டார் களா ஐயா?

கு: அவர்களுக்கும் ஒரு பாட்டு வைத்திருக்கிறேன்.

கா.பூ.க: நாமும் கேட்கலாமா?

கு: யெஸ்!
நல்ல நல்ல தோழரை நம்பி-இந்தப்
பதவியே இருக்குது தம்பி.
இடதுசாரிக் கட்சிகளை நம்பி-என்
நாற்காலி இருக்குது தம்பி.

கா.பூ.க: காங்கிரஸ் கட்சிக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையே சண்டை வந்தா நீங்க தீர்த்து வைப்பீங்களா?

கு: ஹா ஹா ஹா. தீர்த்துவைச்சா என்னையே தீர்த்துடுவாங்க. அவங்க சண்டைதானே நம்ம வண்டிக்கு பெற்றோல். அவங்க மோதிக்கிட்டே இருந்தாத்தான் நாம நம்ம பாதையிலே போய்க்கிட்டே இருக்கலாம். அதில பாருங்க கந்தர்சாமி, உதைப்பந்தாட்டம் நடந்தால்தான் நடுவருக்கு மரியாதை, நம்ம கதையும் அதுதாங்க.

கா.பூ.க: போட்டியை நிறுத்தமாட்டீங்க. இடைக்கிடையே மட்டும் விசில் கொடுத்துகிட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டே இருப்பீங்க என்னு சொல்லுறீங்க.

கு: கரெக்ட்!

கா.பூ.க: பாரதிய ஜனதாக் கட்சியை எப்படி சமாளிப்பீங்க?

கு: சிம்பிள்! அடுத்த தேர்தலுக்கு அவங்க தயாராகிறதுக்கு ஒரு ரைம் வேண்டாமா, அப்படி அவங்க தயாராகிறதுக்கு தொல்லை கொடுக்காம நான் என்வழியிலே போய்க்கிட்டே இருப்பேன். அவங்க தங்க வழியிலே போய்க்கிட்டே இருக்கலாம். கிராஸ் பண்ணிக்கவே மாட்டோம். சோ... விபத்தே இல்லாமல் போயிடும். எப்படி நம்ம டெக்னிக்கு?

கா.பூ.க: இந்தக் கொள்கை ரொம்ப நல்லாயிருக்கே. என்ன பேரு வைச்சிருக்கீங்க?

கு: சவாலே சமாளியிசம்!

கா.பூ.க: சபாஷ்! உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?

கு: இந்தியாவை உலக வல்லரசாக மாற்றியே தீருவது, அணுக்குண்டுகளை லட்டு செய்யிற மாதிரி பெருந்தொகையா தயாரிச்சு அலுமாரியிலே அடுக்கி வைக்கிறது, காஷ்மீர் பிரச்சனையிலே வெட்டு ஒன்று துண்டு ரெண்டாக முடிவு எடுக்கிறது, நம்ம கிரிக்கெட் ரீமுக்கு வெளிநாடுகளிலை போய் புகுந்து விளையாடுற டெக்னிக்கை புரிந்துகொள்ள ஏற்பாடு பண்ணுறது, மத நல்லிணக்கை மறுபடி ஸ்ரோங்காக கட்டியமைக்க பாபர் மசூதியை மறுபடி கட்டிக் கொடுக்கிறது என்றெல்லாம் கற்பனை பண்ணமாட்டேன். அப்படிப்பட்ட நல்ல காரியங்களிலை ஒண்ணு பண்ணினாலே போதும் நம்மாளுகளே கவிழ்த்திடுவாங்க.

கா.பூ.க: நல்ல காரியம் பண்ணினா நாட்டுக்குத்தானே நல்லது?

கு: நாட்டை யாரு பார்க்கிறான். நாற்காலியைத்தானே பார்க்கிறான். நல்லது பண்ணி எனக்கு நல்ல பெயர் கிடைச்சா நாற்காலி ஆடுறது நிண்ணுடும். ஐக்கிய முன்னணியில இருக்கிற அத்தனை கட்சிக்காரங்களுக்கும் நிம்மதி போயிடும். தூக்கம் கெட்டுப்போயிடும்!

கா.பூ.க: எப்படிக் கெடும் ஐயா?

கு: இப்போ நாற்காலி ஆடுது பாருங்க, ஒவ்வொரு கட்சிக்காரனும் அதைப் பார்த்துவிட்டு நாமதான் ஆட்டிப் படைக்கிறோம் அதுதான் ஆடுது என்னு நினைச்சுக்கிட்டிருக்கான். அதுதான் அவனுக்கு நிம்மதி. நம்ம கையிலதானே கூடிவாளம் இருக்கு, தேவைப்பட்டா கவிழ்த்துக்கலாம் என்று அவசரமில்லாமல் தூங்குறான். நாற்காலி ஆடாம உறுதியாகிச்சு என்று வையுங்க, அலறி அடிச்சுக்கிட்டு எல்லோருமே கூட்டுச் சேர்ந்து கவிழ்த்துடுவாங்க. அவங்க நிம்மதியை கெடுப்பானேன், என் பதவியை தொலைப்பானேன சொல்லுங்க.

கா.பூ.க: நாட்டுக்கு நல்லது பண்ணமுடியாவிட்டாலும், நாலு கட்சிக்கு நல்லது பண்ணினால்தான் நாற்காலியில் நீடிக்க முடியும் எண்ணுறீங்க?

கு: ஆமாங்க! இது காலத்தின் கட்டாயம்!

கா.பூ.க: அப்படியானால் உங்கள் எதிர்கால இலட்சியம்?

கு: முன்னாள் பிரதமர் என்ற கௌரவத்துடன் என் குடும்பத்தினருடன் மீதிக் காலத்தைக் கழிப்பது. அழைப்பு விடுக்கப்பட்டால் குடியரசுதினம், எதிர்காலப் பிரதமர்கள் மற்றும் ஜனாதிபதிகளின் பதவியேற்பு விழாக்களில் ஒரு புன்னகையுடன் கலந்துகொள்வது.

கா.பூ.க: மிகவும் வெளிப்படையாகப் பேசுகிறீர்கள். சக கட்சிகள் கோபிக்கமாட்டார்களா?

கு: ஸ்ருப்பிட்! இதற்குக்கூட எனக்கு சுதந்திரம் இல்லையா?

கா.பூ.க: ஐக்கிய முன்னணிக் கூட்டத்தில் கேட்கவில்லையா நீங்கள்?

கு: மிஸ்டர் கந்தர்சாமி என்னை வெறுப்பேற்றாதீர்கள். ஏன் தெரியுமா? நீங்கள் தோற்றுப் போவீர்கள், எனக்கு கோபமே வருவதில்லை.

கா.பூ.க: இந்தப் பொறுப்பை நீங்கள் துணிந்து ஏற்றுக்கொண்டபோதே அது தெரிந்ததுதானே.

கு: தட்ஸ் ரைட்! பொலிக்டிக்ஸ் ஒரு விளையாட்டு மாதிரித்தான். விளையாட்டை விளையாட்டாக எடுத்துக் கொண்டால் உணர்ச்சிவசப்படவோ எரிச்சல்வசப்படவோ தேவையிருக்காது. மேலும் நான் ஆசைப்படாதது கிடைத்திருக்கிறது, இதற்கு மேல் ஆசைப்பட என்ன இருக்கிறது?

கா.பூ.க: நலலதெல்லாம் நடந்துவிட்ட சந்தோசமா?

கு: ஹா ஹா ஹா
எது நடக்க வேண்டுமோ. அது நடக்கும்.
எது நடக்கக்கூடாதோ அது நடக்காது
எதுவும் நம்ம கையிலே இல்லே
எல்லாம் அந்த அருணாச்சலம் கையில் இருக்கு
அவன் நினைக்கிறான் இவன் முடிக்கிறான்

கா.பூ.க: அய்.. நீங்களும் ரஜினி விசிறியா?

கு: அவரும் ஐக்கிய முன்னணியில் இருந்தால் விசிறியாய் இருப்பது என் கடமைதான்! ஏன் தெரியுமா? நான் குடித்தது தாய் பாலு, நான் ஏறி வந்தது ஐக்கிய முன்னணி தோளு!. ஹா ஹா ஹா. நன்றி சென்று வாருங்கள்.



படிப்பகம்


Regd. as a News Paper at the G.P.O. (QD/43/NEWS/97)

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
580230
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# அன்ன ஓடம்






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


➡ நடையழகுக்கு உதாரணம் சொல்லப்படும் அன்னத்தின் நீச்சல்தான் இது.

அன்னப் பறவைகள் நெருக்கமான குடும்பப் பாசம் கொண்டவை. ஆண் அன்னமும் பெண் அன்னமும் ஒன்று சேர்ந்தால் இறுதிவரை இணைபிரிவதில்லை. முட்டையிடுவதற்கு முன்னரே இரண்டும் சேர்ந்து பெரிதாக கூட்டைக் கட்டும். பெண் அன்னம் 5 அல்லது ஆறு முட்டைகளை ஒரே தடவையிலிடும். இக்கால கட்டத்தில் ஆண்பறவை மிகக் கவனமாகக் காவல் காக்கும். கூட்டை எவரும் அணுக விடாது. சாதாரண நேரங்களில் சாதுவாகக் காணப்படும் ஆண் அன்னம் பெண் அன்னம் அடைகாக்கும் காலங்களில் கடும் கோபத்துடன் காணப்படும்.

முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்ததும் நீரில் நீச்சலடிக்கத் தொடங்கிவிடும். ஆனால் விரைவில் களைப்படைந்து விடும். தாய் அன்னத்தின் முதுகில் தாவி ஏறிப் பவனி வரும். தாயின் மெத்தை போன்ற மென்மையான இறகுகளில் குஞ்சன்னம் சொகுசாகப் பவனி வரும் காட்சி தான் நீங்கள் காண்பது. ●

⬇ காதலருக்கு மிகப் பிடித்தமான பறவைகள் இவை. இவற்றின் பெயரே காதல் பறவைகள்தான். ஆங்கிலத்தில் சொல்வதானால் 'லவ் பேட்ஸ்'. காதலர்கள் கவனிக்க வேண்டிய செய்தி யாதெனில், லவ் பேட்ஸ் பறவைகள் இணைபிரிவதே இல்லை. அந்தளவுக்கு அண்டர்ஸ்டான்டிங்.

கிளி இனத்தைச் சேர்ந்த ஆனால் கிளிகளைவிட ஜோரான இந்தப் பறவைகள் ஆக 10 சென்ரிமீட்டர் நீளம் வரைதான் வளருகின்றன. 'லவ் பேட்ஸ்' என்று பெயர் வந்தது ஏன்? இணைபிரியாமல் வாழ்வதால்தான். ●

# காதல் பறவைகள்





# இருவர்

➡ பார்வைக்கு வியப்பூட்டும் அபூர்வமான நாய்கள் இவை. மனிதரில் மட்டும் தான் இரட்டையர் இருக்கிறார்களா என்ன. நாங்களும் தான் இரட்டையர். முடிந்தால் நம்மில் ஏழு வித்தியாசம் காணுங்கள் பார்க்கலாம் என்று போஸ்கொடுக்கிறன.

ஒரே தாய்க்கு ஒரே நேரத்தில் பிறந்த இரட்டை (பெண்) குட்டிகள்தான் இவைகள். ஆனால் முன்னுக்கு வழி காட்டிச் செல்லும் அக்காவின் முகபாவத்தைக் கொஞ்சம் உற்றுப்பாருங்கள். "உனக்கு முன் பிறந்தவள் நான்தான். ஆகவே எப்போதும் வழிகாட்டும் உரிமை எனக்குத்தானுண்டு!" என்ற அதிகார தோரணை தெரிகிறதல்லவா?

"அக்கா! உனக்குப்பின்னாலேயே நான் வருவேன்!" என்று தங்கை, அக்காவின் ஆணைக்கு அடங்குவது தான் சரி என்ற பாவத்துடன் கூறுவது போல்தானே தோன்றுகிறது. ●

# ஒன்றில் இரண்டு



➡ பழையன கழிதலும் புதியன புகுதலும் ஆகிய இரண்டும் ஒரே தருணத்தில் நடக்கும் காட்சிதான் இது. பாம்புகள் வளரும்போதே தமது பழைய செட்டையை கழற்றிப் போட்டுவிட்டு புதிய செட்டைக்கு இடம் கொடுக்கத் தொடங்குகின்றன.

பாம்பு செட்டையை மாற்றுவது என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். மாற்றுவதைப் பாருங்கள். கவர்ச்சி நடிகைமாதிரி தலைப் பகுதியில் இருந்து செட்டையைக் கழற்றத் தொடங்கும் காட்சிதான் இது. மேலிருந்து கழற்ற ஆரம்பிப்பதுதான் இவற்றுக்கு வசதியாக உள்ளதாகும். இது விரியன் பாம்பு. உடம்பெல்லாம் பயங்கர விஷம். ●

# என் உயிரே



⬅ தன் குட்டியை பொன் குட்டியாக நினைத்து வாஞ்சையோடு இறுக்கியபடி போஸ் கொடுப்பவர் மிஸ்டர் ஒறங்குட்டான். குட்டி பிறந்து ஆக ஆறு வாரங்கள்தான். ஒறங்குட்டான் என்றால் காட்டில் நடமாடும் மனிதன் என்று அர்த்தம்.

மனிதர்களிடம் உள்ள பல குணாம்சங்கள் இதனிடம் இருக்கிறது. சில படிகளைத் தாண்டினால் மனிதனாகிவிடும். விலங்கு உலகில் மனிதனுக்கு நெருக்கமான தொடர்புள்ள விலங்குகளில் ஒன்று இந்த ஒறங்குட்டான்.

சோகம் என்னவென்றால், ஒறங் குட்டான் குரங்குகள் இனம் மின வேகமாக அழிந்து வருகிறது.

இந்த இன அழிவுக்கு முக்கிய காரணம் இவற்றின் மத்தியில் உள்ள பயங்கரமான குடும்பக் கட்டுப்பாடு. அதாவது ஒரு முறை குட்டி போட்டு விட்டால் அடுத்த நாலு வருடங்களுக்கு முச்நாலு வருசம் முடிந்த பின்னர்தான் அடுத்த வெளியீட்டுக்கு தயாராகும். (அரசாங்கம் விளம்பரம் செய்தும் மனிதர்கள் பலரால் காக்க முடியாத கட்டுப்பாட்டை ஒறங்குட்டான் கடைப்பிடிக்கிறது பார்த்தீர்களா?)

மேலதிகமான ஒரு தகவல்; மனிதர்களுக்கு நெருக்கமான தெடர்புள்ள விலங்குகள் மூன்று: ஒறங்குட்டான், சிம்பன்சி, கொரில்லா. இந்த மூன்றும் வாலில்லா குரங்குகள். கொரில்லாவுக்கு துளியுண்டு வால் இருந்தாலும் அது வாலாக கருதப்படாது. ●



இல. 185, கொழும்பு ... அச்சகத்தில் மே 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

padippakam